
குறைந்த
விலையில்
உயர்ந்த
வகைகள்!

இதோ



**கண்ணைக் கவரும் வண்ணக்கலர்களில்**
**விதம் விதமான ஜவுளிகள்**
நீங்கள் தேர்ந்தெடுப்பதற்காக காத்திருக்கின்றன.

| | |
|---|---|
| பிளவுஸ் துணிகள் | டிஸ்யூ, ஸீகுயின் |
| தாவணிகள் | வாயில், ஜூனியர் |
| காஞ்சிபுரம் | காஷ்மீர் சாரிகள் |
| கொள்ளேகாலம் | நைலோன் |
| பட்டுப் புடவைகள் | சூட்டிங், சேட்டிங் |

இவை மட்டுமா? பார்க்கப்பரவசமளிக்கும் பல மாதிரி பிளவுஸ் துணிகள், வேஷ்டி, சால்வைகள், சாரங்கள், கிளாஸ் நைலோன் புடவைகள், மற்றும் சீத்தைப் புடவைகள், இவற்றில் எது வேண்டுமானாலும் நீங்கள் நாடவேண்டிய இடம்

# வஸந்தாஸ்

(பிலவுஸ் ஹோட்டலுக்கு முன்னால்)

**148, கெய்ஸர்வீதி, கொழும்பு.**

போன்: 796

# S. SINNATHURAI & BRO,




786 கல்கி பீடி

Importers & Exporters.
Sole Agents for

## 786 Kalki Beedies

நீங்கள்

உல்லாசமாகப்
புகைப்பதற்கு

## 786 கல்கி பீடிகள்

**திறம் பீடிப் புகையிலை, பீடி இலை.**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.

## சி. சின்னத்துரை அன் பிறதர்,

**39, K. K. S. றேட் : : யாழ்ப்பாணம்.**

கிளை:
44, 3ம் குறுக்குத் தெரு : : கொழும்பு.

தொழிற்சாலை:
118/12, ஆட்டுப்பட்டித் தெரு : : கொழும்பு.

உண்மையான

## நன்னாரி சர்பத்

கோடைக்கேற்ற குளிர்பானம்

இங்கே விற்கப்பெறும்.

# கபே நவஜீவன்


உரிமையாளர் : P. K. மொகம்மது

## பிரபல பீடி இறக்குமதியாளர்.

**132, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.**

---

# 26 % நீடிய ஆயுள்




புதிய
எவ
ரெடி
றேடியோ
பற்றி
யுடன்
தங்கநிற
அடையா
ளத்தைப்
பாருங்கள்.
இதுஉத்தர
வாதமளிக்
கும்.

# மஹாதேவன்ஸ் லிமிட்டெட்

பாங்ஷல் வீதி, : கொழும்பு.

## வருந்துகின்றோம்

நல்ல பேச்சாளரும் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி ஆசிரியருமான திரு. ம, சத்தியமூர்த்தி அவர்களின் அருமை மனைவியார் திருமதி. ச. யோகாம்பிகை அவர்கள் தற்செயலாக ஏற்பட்ட தீவிபத்தினால் மரணமடைந்ததற்காக நமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

சுண்ணாகம், மக்கள் வைத்தியசாலையின் உரிமையாளரும் 'கலைச்செல்வி' ஆதரவாளருமான திரு, K, S. கந்தையா அவர்கள் திடீரென்று மரணமானதைக் குறித்து நமது வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம்.

நல்லூர் லலிதா விலாச புத்தகசாலையின் உரிமையாளரும் பொதுவுடைமை வாதியுமான திரு. சு. இராமசாமி ஐயர் அவர்களின் அகால மரணத்திற்காக நமது ஆழ்ந்ததுக்கத்தைத் தெரிவிக்கின்றோம்.

கந்தரோடை திரு. மாணிக்கம் அவர்களின் மகன் செல்வன் அப்புத்துரை, தன் இருபத்திரண்டாவது வயதில் மரணமானதைக்குறித்து நமது மனம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

Advertisers in Colombo.

Please Contact:-

Mr. A. IYADURAI

12, Station Road,

Wellawathe.

## கலைச்செல்வி நாவல் போட்டி

## பரிசு : ரூ. 1000

1. இலங்கையின் இலக்கிய வரலாற்றில் முதன் முதலாக நடாத்தப்படும் இந்த நாவல்ப்போட்டியில் இலங்கையிலுள்ள சகல எழுத் எழுத்தாளர்களும் பங்குபற்றலாம்.

2. நாவல் இலங்கையை நிலைக்களனாக வைத்தே எழுதப்படவேண்டு. இலங்கை மக்களுடைய பண்பாடு, பழக்கவழக்கம், சூழ்நிலை, இலட்சியம் முதலியவற்றை நாவல் பிரதிபலிக்கவேண்டும்.

3. மொழிப்பெயர்ப்பாவவோ, தழுவலாகவோ இராமல் எழுதுபவரின் சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும். ஏற்கனவே அச்சில் வெளியான நாவல்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா.

4. நாவல் "கலைச்செல்வி"யில் 125 பக்கங்கட்குக் குறையாமலும் 200 பக்கங்கட்கு கூடாமலும் இருக்கவேண்டும்.

5, நீதிபதிகளாய்ப் பின்வருவோர் கடமையாற்றுவர்:-

திருவாளர்கள்
அகிலன்,
இராஜ அரியரத்தினம்,
க, கைலாசபதி,
S T சிவநாயகம்,
கலைச்செல்வி ஆசிரியர்.

5. நாவல்கள் கிடைக்கவேண்டிய கடைசித் திகதி:- 15—12—1961

# கலைச்செல்வி



## பொருளடக்கம்


நல்லகாலம்
உங்கள் கருத்து
அன்பார்ந்த நேயர்களே!
பத்தாம் பக்கம்
பாரதி அஞ்சலி
தலைப்பட்டாள் நங்கை
ஆண்மை
மன்னிப்பாரா?
மின்னலும் முழக்கமும்
இலக்கியக் கடிதங்கள்
ஆசிரியர் சொன்ன கதை
பொருள் மரபும் விமரிசனக்குரல்...
க்ஷத்திரியன்
என்னை உருவாக்கியவர்கள்
குலதெய்வம் ராஜகோபால்
சந்திப்பு
கல்லழகி
பட்! பட்!



யாழ் த-இ-மன்றம்
கந்தரோடை
சுன்னாகம்

# உங்கள் கருத்து

தொப்பிக்கு ஒரு தொப்பி

"ஆளுக்கொரு தொப்பி" கட்டுரைகள் உண்மையானவை. மறுப்பும் சுவையுடன் இருக்கின்றது. கல்லும் கல்லும் மோதினால் நெருப்புப் பொறி பறக்கும். பேனையும் பேனையும் மோதினால் பலகருத்துக்கள் பிறக்கின்றன.

திருமலை எஸ். ராசம் புஷ்பவனம்.

ஏன் மறந்தாய் மகனே!

குமுதா ஆனந்தனை மணக்காத காரணத்தைக்கூற 'கண்ணகி' மறந்தது ஏன்? இதனால் கதையின் ஒளி மயங்கியதைக் கதாசிரியர் உணரவில்லையா?

வேலணை. இரா சிவச்சந்திரன்.

கண்ணில் விழுந்தது மண்:

'கண்ணகி' போட்ட ஒரு பிடி மண் எனது கண்களை இப்போதும் கத்தரிக்கச் செய்கின்றது. ஆண், பெண், பேதமின்றிப் பழகவழியோ வாய்ப்போ கிடையாதா?

நல்லூர். என் எஸ் அருள்ராசா

மண்ணீர்!

'ஒரு பிடி மண்' படித்தே ஒழுக்கினேன் கண்ணீர்.. ......

கல்முனை. எம் ஏ கரீம்.

அழியா அழகுடையாள்.

'புறங்குன்றி கண்டனையரேனும்' என்ற வள்ளுவனின் குறளை நினைவில் கொண்டு புனையப்பட்ட அருமையான சிறு கதை 'அழகி'.

வேலனை. இரா இராசமலர்

மதில் பூ!

கலைச்செல்வி பார்க்கவேண்டிய இதழ் அல்ல; ஊன்றிப்படிக்கவேண்டிய கலை மலர்; கலைப் பொக்கிஷம்;

நவாலி. க நடராசன்,

வான் முகில் வளாது பெய்க.

கவிதை ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு. முகிலன் பாரதிதாசனின் தாசனா? வாழ்க, வாழ்க;

வேலணை. மணிமொழி.

நல்ல கவிதை அடி!

மூடக்கொள்கைகளை முறியடித்து முன்னேற்றப் பாதைக்கு முழு அடி எடுத்து வைக்கத் தூண்டும் 'முகிலனி'ன் "புதியதோர் சமுதாயம்" என்ற கவிதை கருத்துச் செறிவுள்ளது.

கல்முனை.

எஸ் எம் ஏ செயினுல் ஆப்தீன்.

.........புதியதோர் சமுதாயம் என்ற கவிதை சிறப்பாக அமைந்திருக்கின்றது.........

திருமலை. கலா ஏரம்பு.

மன்னிப்பார்.

கடவுள் மன்னிப்பார்-- முதல் "முதல் மன்னிப்பாரா" கதையை எழுதிய "பவானி"யை அல்ல. எஸ். எல். சவுந்தரநாயகத்தை.........

ஆரவயல்பிட்டி. கேசன்

அறி(யா) முகம்!

'கலைச்செல்வி'யில் எழுதும் எழுத்தாளர்களை வாசகர்கட்கு அறிமுகம் செய்து வைப்பது போற்றுதற்குரியது.

துறைநீலாவணை ப. அப்பாக்குட்டி

வார்த்தையில் (லை)வர்ணனை:

'கலைச்செல்வி' அட்டைப்படம் அருமை, அற்புதம், அபாரம், அதை வர்ணிக்க வார்த்தைகளோ இல்லை, சபாவிற்கு என் வாழ்த்துக்கள்.

திருநெல்வேலி. க. இராஜி

பததாம பககம!

பததாம பககததில வெளியான கடிதம படிபபதறகு நலமாக இருக்கிறது.

கொழும்பு-11 செட்டியார்.



ஆசிரியர்:- சி. சரவணபவன்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்" — பாரதியார்.

| | | | |
|---|---|---|---|
| கலை: 3 | 1961 — பிலவ — திருவள்ளுவர் ஆண்டு: 1 | கார்த்திகை 1992 | காட்சி : 11 |

# நல்ல காலம்

ஒன்று சொல்கின்றோம்; அதை நிச்சயமாக நம்பலாம். தமிழர்கட்கு நல்லகாலம் பிறந்துவிட்டது!

நான்கு தமிழ் எழுத்தாளர்கள், சாஹித்ய மண்டலத்தினால் பரிசளிக்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

"பதிற்றுப்பத்து ஆராய்ச்சிப் பேருரை" எழுதிய பண்டிதர் அருளம்பலனாருக்குப் பரிசு ரூபா ஆயிரம்!

'இந்திய தத்துவ ஞானம்' எழுதிய இலக்குமணனுக்குப் பரிசு ரூபா ஆயிரம்!

'கௌதம புத்தர் அடிச்சுவட்டில்' தன் பேனாவை ஓட்டிய சிவபாத சுந்தரனாருக்குப் பரிசு ரூபா ஆயிரம்!

'தண்ணீரும் கண்ணீரும்' தந்த டொமினிக் ஜீவாவிற்குப் பரிசு ரூபா ஆயிரம்!

புலமையும் வறுமையும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். அந்த வறுமையைப் போக்க இந்த நாலாயிரமும் போதும் என்று நாம் சொல்ல வரவில்லை.

ஆனால்...?

எழுத்துக்கும் பரிசு என்ற இதந்தரும் செய்தி எத்தனையோ எழுத்தாளர்களின் இதயத்தில் உற்சாக அருவியை ஊற்றெடுக்

கச் செய்துள்ளது எழுத்தாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு எழுத முன்வருகின்றார்கள்.

எதை எழுதினாலும் பரிசு கிடைக்குமா?

நல்லவற்றை, செம்மையானவற்றை, பயனுள்ளவற்றை எழுதினாற்றான் மக்கள் மதிப்பார்கள் பரிசும்கிடைக்கும்.

நல்லவற்றை எழுதுவதற்கு, நல்ல, செம்மையான சிந்தனை இருக்கவேண்டும். சிந்தனை என்றுமே நன்றாக இருந்தால், சொல்லும், எழுத்தும், செயலும் நன்றாகவே இருக்கும்.

இப்படி ஒவ்வொரு எழுத்தாளனும், எல்லாவகையாலும் நல்லவனாகும்போது அவனைச்சேர்ந்தவர்களும், அவனுடைய எழுத்தைப் படிப்பவர்களும் நல்லவர்களாக மாறுவார்கள்.

சாஹித்திய மண்டலத்தின் பரிசு, நல்ல சிந்தனையையும் அதனால் நல்ல எழுத்துக்களையும், அவற்றால் நல்ல மனிதர்களையும் தோற்றுவிக்கப்போகின்றது.

ஆகவே தான் மீண்டும் சொல்லுகின்றோம்; அதை நிச்சய, மாக நம்பலாம்: தமிழர்கட்கு நல்லகாலம் பிறந்துவிட்டது.!


# KALAICHELVI

Vol: III No. IX

ILLUSTRATED MONTHLY

Editor : S. Saravanapavan B. A.
Sub - Editors ,
S. Ponnambalam, Thamil Selvan.

Publisher :
A. T. Sampanthan
for THE JAFFNA TAMIL LITERARY GUILD.
Circulation andAdvertishment :
A. T. Sampanthan
Art :
Saba, Athavan, Medam, Manjari.

Representatives ( Advt. )
A. Iyadurai ( Colombo )
Representative ( Editorial )
Eelathusomu ( Colombo )
Printers :
Kaladevi Press,
Office :
KALAICHELVI
Kanderodai, Chunnakam.

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம் சென்ற இதழில் நாம் அறிவித்திருந்தபடி மூன்று புதிய, நல்ல அம்சங்கள் இந்த இதழில் ஆரம்பமாகின்றன. அகிலன் அவர்களின் நாவலையும், பண்டிதமணி அவர்களின் கட்டுரையையும் மஹாகவி அவர்களின் காவியத்தையுமே இங்கு குறிப்பிடுகின்றோம். இவைபற்றி நேயர்களுக்குத் தோன்றும் கருத்துக்களை எமக்கு எழுதியனுப்பலாம். "உங்கள் கருத்து" பகுதிக்குத் தேவையான வற்றை நாம் எடுத்தபின். கடிதங்களை, சம்பந்தப்பட்ட எழுத்தாளர்கட்கே அனுப்பிவிடுவோம். எழுத்தாளர்கட்கும் வாசகர்கட்குமிடையில் ,ஒரு நெருங்கிய பிணைப்பு ஏற்படவும், அதனால் இலக்கியக்கருத்துப் பரிமாறல் நன்கு நடைபெறவும் வழிஏற்படும் என்பது எம் நம்பிக்கை.

நாவல் போட்டியின் முடிவைத் தள்ளிப்போட்டதை வரவேற்று பலர் எழுதியுள்ளார்கள். இது வரை ஏழு நாவல்கள் கிடைத்துள்ளன. ஆகக் குறைந்தது முப்பது நாவல்களாவது சிருஷ்டிக்கப் படவேண்டும் என்பது எமது ஆசை, நல்ல நாவல், எமது பரிசைப் பெறுவதுடன். சாஹித்திய மண்டலத்தின் பரிசைப் பெறவும் வாய்ப்பிருக்கின்றதல்லவா ?

மன்னிப்பாரா ? என்ற கதையை இவ்விதழில் தொடர்ந்து எழுதியிருக்கும் "செந்தாரகை" ஒரு புதிய எழுத்தாளர். வல்வெட்டித்துறையிலுள்ள ஊரிக்காட்டைச் சேர்ந்த இவர் நெடுங்கேணி காரியாதிகாரியின் அலுவலகத்தில் பணிபுரிகின்றார். எழுத்துலகில் அவருக்கு நல்லதோர் எதிர்காலமுண்டு. நேயர்களுக்கு அவரை அறிமுகம் செய்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வரதர், ஈழத்துச்சோமுவிற்கு எழுதிய கடிதம் இந்த இதழில் வெளியாகின்றது. புதுமைப்பித்தன் கதைகள் பற்றிய தன் அபிப்பிராயத்தைத் துணிச்சலுடன் எழுதியிருக்கின்றார் வரதர்.

அடுத்த ஆண்டு தைமாதம் வெளிவரவிருக்கும் "கலைச்செல்வி ஆண்டு மலரை" இலக்கியத் தேன் சொட்டும் இனியமலராக உருவாக்க வேண்டும் என்பது எமது திட்டம். பழம் பெரும் எழுத்தாளர்கள் மட்டுமல்ல, சில புதிய எழுத்தாளர்களும் மலரில் எழுதுகின்றார்கள். இலங்கையின் மூலை முடக்குகளில் இருக்கும் வாசகர்கள், இலங்கையிலுள்ள அத்தனை எழுத்தாளர்களையும் பார்க்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் திட்டம் பற்றி ஆலோசித்து வருகின்றோம்.

சந்தா பற்றி நினைவூட்டி எமது அலுவலகத்திலிருந்து சென்ற மாதம் சென்ற கடிதம் பலருக்கு வருத்ததை உண்டாக்கியதாக வருந்துகின்றோம். பலர் தம் சந்தாவைப் புதுப்பித்துள்ளார்கள். ஒரு சிலர் மட்டும் இன்னும் மௌனமாகவே இருக்கின்றார்கள். அவர்கட்கு இனிமேல் "கலைச்செல்வி" அனுப்பப்படமாட்டாது.

மறு அறிவித்தல் வரை கதையோ, கட்டுரையோ அனுப்பி வைக்கவேண்டாம் என மீண்டும் புதிய எழுத்தாளர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம். செம்பியன் செல்வன், க. செபரத்தினம், சு. மகாலிங்கம், சாரதா கனகசபை, ஆற்றூராள், மண்ணவன், குஷிநாதன், வே. தனபாலசிங்கம், வட்டூர்கானம், தமிழ் வண்ணன் ஆகியோரின் சிறுகதைகள் பிரசுரத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. மற்றைய கதைகள் பரிசீலனையில் இருக்கின்றன, பிரசுரதிற்குத் தகுதி பெறாத கதைகள் இவ் வருடமுடிவில்தான் திருப்பி அனுப்பப்படும்.

—ஆசிரியர்.

# பத்தாம் பக்கம்

ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் பரிசு பெற்ற நான்கு எழுத்தாளர்களுக்கும் திரு. பாலு ரீலுச் சூலு பெருதவன் அவர்கள் பகிரங்கமாக விடுக்கும் முக்கால் டசின் கேள்விகள்.

1. இம்மாதம் ஒன்பதாம் திகதி சனிக்கிழமை தாங்கள் காரில் பேராதனையை நோக்கிப்போகும் வழியில் பசியாலேயில் தங்கி, கசுக்கொட்டையின் விலையைத் தமிழிற் கேட்டதால் அந்தச் சுந்தரிகள் சொல்லவும் முடியாமல் உங்களைக் கொல்லவும் முடியாமல் திண்டாடினது உண்மைதானு?

2. சாகித்திய மண்டலத்தின் காரியதரிசி திரு. கே. எஸ். அமரதாசாவுக்குத் தாங்கள், உங்கள் புத்தகங்களை அனுப்பச் சென்றபோது போஸ்ட் மாஸ்டர் முத்திரைக்கு முற்பணம் கேட்டது உண்மைதானு?

3. பேராதனையில் டாக்டர் சரச்சந்திரா இருந்த இடத்திற்கு நால்வரும் காவடி எடுத்து, "நாங்களும் பரிசு பெற்றவர்கள்தாம் ஆகவே பத்துச்சத முத்திரை ஒட்டின அநாமதேயக் கடிதங்களை எதிர்பார்க்கின்ரும்" என்று 'தாஜா' பண்ணிக் காக்கா பிடித்தது உண்மைதானு?

4. பத்திரிகையில் உங்கள் விஷயத்தைப் பிரமாதமாகப் போட்டுவிட்டு, பத்திராதிபர் டெலிபோனில், "ஏதோ சம்பிரதாயமாக செய்திகளை வெளியிட்டோம். தப்புக்கணக்குப் போட்டுத் தலைக்கனம் கொள்ளாதீர்கள்" என்று சொல்ல யோசித்தது உண்மை தானு?

5. "குட்டி எழுத்தாளனைச் சுட்டி எழுத்தாளன் தாக்குவதுபோல் மொட்டைக் கடிதம் எழுதிப் பரபரப்பை உண்டு பண்ணுகிறேன்" என்று தாங்கள், சமீபத்தில் மோசம்போன மட்டுவில் மாணிக்கத்திற்கு மாரடித்தது உண்மைதானு?

6. தாங்கள் "குமுதம்" பத்திரிகைக்கு விடுகதை எழுதி, அத்துடன் இணைக்கப்பட்ட கடிதத்தில், காலஞ்சென்ற அழகப்பச் செட்டியாரின் தாய் மாமனை நேரிற் கண்டவரின் பேரன்" என்று கையெழுத்திட்டு அனுப்பிய கடிதம், வழி தவறி, "அமுதம்' காரியாலயத்தில் தூங்குவது உண்மைதானு?

7. பரிசு பெற்றுவிட்டு ரயிலில் திரும்பி வரும் போது, 'நாங்கள் பரிசுபெற்ற எழுத்தாளர்கள் என்ற இறுமாப்பில் சட்டையின் கொலரைத் தூக்கிவிட்டு வந்ததும், வெளியே எட்டிப் பார்த்த போது, ஸ்டேசனில் சிலர் கூட்டமாக நிற்பதைக் கண்டு, தங்களைத்தான் வரவேற்கக் காத்திருக்கிருர்கள் என்ற நினைப்பில், ஏற்கனவே ஒரு 'மாதிரி'யாக இருந்த தலை, மேலும் வீங்கியதால், நீட்டிய தலையை உள்ளே எடுக்க முடியாமல் தவித்ததும் உண்மைதானு?

8. தங்களைப் பற்றி இனி யாராவது பேசும்போதும் எழுதும்போதும் "சாகித்திய மண்டலம் பரிசு பெற்றவர்" என்று குறிப்பிடவேண்டும் என அந்தரங்கமாக விரும்புவது உண்மைதானு?

9. பரிசுப் பணமாகிய ஆயிரம் ரூபாவை எந்த வகையில் செலவு செய்வது என்பது பற்றி ஒரு முடிவுக்கும் வராமல் திண்டாடுவதும், இரவில் நித்திரையின்றித் தவிப்பதும், ஆகவே இனிமேல் வேறு யாராவது பரிசைப்பெறட்டும்; எங்களுக்கு வேண்டாம் இந்தத் தலையிடி என்று முடிவுகட்டியதும் உண்மைதானு?

# பாரதி அஞ்சலி

## ச. வே. பஞ்சாட்சரம்

ஆட்டிப்ப டைத்திடும் ஆங்கில ராட்சியில்
ஆக்கமி ழந்தழிந் தும் - வெறும்
ஆமைக ளாய்க்கிடந் த - தமிழ்
நாட்டவர் நெஞ்சினில் ஊட்டிஉ ரத்தினை
நாட்டிவி டுதலை யை - புகழ்
நாட்டிய நற்கவி ஞர்.

இன்பக்க ருவியில் ஒன்றெனப் பெண்ணையும்
இட்டும னையடைக் கும் - பழி
ஏசிக்க டிந்துரைத் து - பெரும்
இன்பினி ருப்பவள் எய்திலி டர், சிறை
இன்னிலம் உய்வதில் லை - இன்பும்
இல்லையென் றஅறி ஞர்.

ஆற்றல்வ ளத்தினில், போற்றுநற் பல்மொழி
ஆய்ந்துப யின்றுஅ தில் - வளம்
ஆர்ந்தத மிழ்இனி மை - வெலும்
ஆற்றல்ப டைத்தது இன்மைய றிந்தது
ஆக்கம்பெ றஉழைத் தார் - பயில்
ஆவல்ப லர்க்களித் தார்.


மாநிலந் தேக்கிடும் பல்வளப் பேற்றினை
மாந்திச்சி லர்பதுக் க - பசி
வாட்டிடும் ஏழைகட் கு - உயிர்
போனபின் வானகம் போம்வழி சாற்றிடும்
புன்மைவ ழக்கிகழ்ந் த - கவி
பாரதி போற்றிடு வோம்

பேரிடப் பாரினில் பல்குமி னங்களில்
பீடுடை நந்தமி ழர் - நடு
பீடிலர் என்ஞெரி னம் - இன்மை,
சீர்தரு மொற்றுமை சேர்ந்திட நம்மவர்,
செப்பிய நற்கவி யை - ஒன்று
சேர்ந்துவ ணங்கிடு வோம்.

# தலைப்பட்டாள் நங்கை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

திருக்கைலாசவருணனை ஒன்று பெரியபுராண முகப்பில் வருகின்றது. இதனை வெள்ளி மலையென்று சொல்லுவதும் உண்டு. இது அண்டமுகட்டில் மகாமேருமலையின் உச்சியில் உள்ளது. அண்டம பதினான்கு உலகங்களைக் கொண்டது. ஆகமேலே உள்ள பதினான்காம் உலகம் சத்திய உலகம். அதற்கு மேலே உள்ளது வைகுந்தம். அதற்குமமேலே உள்ளது திருக்கைலாசம். ஒவ்வொரு அண்டத்துக்கும் அண்டமுகட்டில் வைகுந்தமும் அதற்கு மேலே திருக்கைலாசமும் உண்டு. அண்டங்கள் அளவில்லாதன. நாங்கள் இருக்கும் உலகம் பூலோகம். இது கீழிருந்து மேலே எட்டாவது உலகம்; அண்டமத்தியில் இருக்கின்றது, இந்தப்பூலோகம் ஏழுதீவுகளாக வகுக்கப்படும். அதில் ஒரு தீவு நாவலந்தீவு. அது ஒன்பது வருஷங்கள் கொண்டது அதில் ஒரு வருஷம் பாரதவருஷம். அதுதான் இந்தப்பூமி. இந்தப்பூமியிலே ஒன்பது கண்டங்கள் உண்டு. அதில் ஒரு கண்டம்பரதகண்டம். அதுகுமரிகண்டம் எனவும்படும். அதனைப் புண்ணியம் மிக்ககண்டமென்று சொல்லுவார்



கள். அதில் உள்ள இமயமும் கங்கையும் மிகச் சிறப்பானவை. இமயத்தில் ஒருபாகத்தில் உள்ள ஒரு மலையைப் பூமியில் உள்ளவர்கள் திருக்கைலாசம் என்று வழங்குகின்றார்கள். அதற்கு யாத்திரை செய்பவர்களும் உண்டு. இந்தத் திருக்கைலாசம் அண்டமுகட்டில்உள்ள திருக்கைலாசக்காட்சியைக் காணுதற்கு உபகாரமான ஓர் இடம். அதனால் இதுவும் திருக்கைலாசம் எனப்படுகிறது. இது உண்மையான திருக்கைலாசத்தின் சாயலின் சாயல்.

பிரபஞ்சம் நிழற்படம்போல மாயையாகிய திரையில் தோன்றி நின்று மறைவது. மாயையாகிய திரை மூன்றுவகை. முதலாவது திரை சுத்தமாயை. அது வெகுபரிசுத்தமானது வெண்மைகளுள் வைத்து வெண்மையானது அது. அதில் தோன்றி விளங்குவதுதான் அண்டமுகட்டில் உள்ள வெள்ளியங் கைலாசகிரி. இரண்டாவது திரை அசுத்தமாயை. மூன்ருவது திரை பிரகிருதிமாயை. மிக்க அழுக்கோடுகூடியதுஇது. இந்தப்பூமி இப்பிரகிருதி மாயையில் தோன்றியது. இதில் உள்ள கைலாசம் சுத்தமாயையில் உள்ள கைலாசத்தின் மூன்ருவது தோற்றம். சாயலின் சாயல், தவவிசேடம் உள்ளவர்கள் இந்தப் பிரகிருதியில் உள்ள கைலாசத்திலிருந்து அந்த உண்மைக் கைலாசத்தைத் தரிசிப்பார்கள். திருநாவுக்கரசு நாயனுர் மிகமிகச் சிறந்த தவ விசேடத்திஞல், இந்தப்


பல்லாண்டு காலமாகப் பல்லாயிரக்கணக்கானேரின்
நம்பிக்கைக்குப் பாத்திரமான

**பவுண் வைர**
**நகை வியாபாரிகள்**

உங்கள் தேவைக்கு எங்களை நாடுக.

**பட்டக்கண்ணு**
**சுப்பையா ஆச்சாரி** அன்ட் சன்ஸ்



"சவரின் ஹவுஸ்"
102, புதுச்செட்டித் தெரு, கொழும்பு–13
தொலைபேசி: 204.

பிரகிருதியிலே மற்றொரு இடமான திருவையாறு என்கின்ற சிவஸ்தலத்திலிருந்து கொண்டே உண்மையான திருக்கைலாசத்தைத் தரிசித்தார்.

திருநாவுக்கரசு நாயனுர் தரிசித்த அந்தக் கைலாசத்தை அவர்மீது ஆராத பத்தி பழுத்தவராகிய சேக்கிழார்சுவாமிகள் தமது இருதயத்தில் ஒரு காலத்திலே காணப்பெற்றுர். அது செய்யுள் வடிவிற் காட்சி அளிக்கின்றது. பின், சேக்கிழார்சுவாமிகளையும் அவர் வணங்குகின்ற திருநாவுக்கரசு நாயனுரையும் வழிபடுதலையே ஒருபெரும் பேருகக் கொண்ட ஆறுமுகநாவலர் வசனவடிவில் பெரிய புராணவசனமுகப்பில் அந்தத்திவ்விய திருக்கைலாசத்தைத் தந்திருக்கின்றுர்.

திருநாவுக்கரசு நாயனுர் தரிசித்த கைலாசத்தை, சேக்கிழார் சுவாமிகளின் இருதயத்திலிருந்து நமக்குத் தந்திருக்கின்றுர் ஆறுமுகநாவலர்,

நாவலர் தந்த திருக்கைலாச வருணனை "அநாதிமலமுத்தராய்" என்று தொடங்குகின்றது. அதில் கைலாச நிலையராகிய கைலாசபதியின் தடத்தத்திருமேனியின் இயல்பு முதற்கண் எடுத்துக் காட்டப்படுகின்றது. ஒருதிருமுகம், முச்சுடர்களாகிய மூன்று திருக்கண்கள், கங்கையும் பிறையும் சூடியசடைமுடி, குண்டலமும் தோடும் அணிந்த திருச்செவி, காளகண்டம், மான் மழு அபயம் வரதம் பொருந்திய நான்கு திருக்கரங்கள், விபூதியினலே உத்தூளிக்கப்பட்டசெம்பளவத்திருமேனி, பூணுலும் என்பு மாலைகளும் புனைந்த திருமார்பு, புலித்தோலை உடுத்த திருவரை, வேதச்சிலம்புகள் ஒலி செய்கின்ற திருவடி ஆகிய அவயவங்களோடு கூடிய ஸ்ரீகண்டசரீரம் அந்தவருணனையில் காட்சியளிக்கின்றது. ஸ்ரீகண்ட உருத்திரர் பிரளயாகலரில் தலைசிறந்து பக்குவம் எய்தியவர். ஐந்தொழில்களையும் இயற்றுவியற்றும் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் திருக்கைலாசத்திலே ஸ்ரீகண்ட உருத்திரரை நிலைக்களமாகக்கொண்டு, ஸ்ரீகண்டசரீரசரீரியய் ஆன்மாக்களுக்கு நிக்கிரகாநுக்கிரகங்களைச் செய்து கொண்டிருகின்றுர். ஸ்ரீகண்டசரீரசரீ என்றுல் ஸ்ரீகண்ட உருத்திரருடைய சரீரத்தைத் தமக்குத் திருமேனியாகக் கொண்டவர் என்பது கருத்து.

இப்படிப்பட்ட ஸ்ரீகண்ட உருத்திரர் எழுந்தருளியிருக்கும் திருக்கைலாசமும், அவர்எழுந்தருளிய திருஓலக்கமும் அதன் பிறகு வருணிக்கப்படுகின்றன. நானுவித சிகரங்களோடு கூடியதிருக்கைலாசத்திலே செம்பொற்றிருக்கோயிலிலே திவ்விய சிங்காசனத்தின்மேலே அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய பார்வதி தேவியார் தமது இடப்பாகத்தின் மேவ, வீற்றிருந்தருளுவர் என வருணனை முடிவுபெறுகிறது இடையில் பூதர்களுட்பலர் வாத்தியங்களை முழங்க, சிலர் சாமரம்வீச, வேறு பலர் ஆலவட்டம் அசைப்ப, தும்புரு நாரதர் இசைபாட, கணநாதர் ஆனந்த அருவிசொரிய, முனிவர்கள் உபநிடதங்களை எடுத்தோத, தேவர்கள் தத்தங் குறைகளைக்கூற, நந்திதேவர் வேத்திரப்படையுடன் நிற்ப, எனத் திருச்சந்நிதி வருணனை வருகின்றது. இந்த வருணனை லென எழுந்து மேலே சென்று

நிலையை அடைந்த ஒரு இராகத்தின் சங்கதிகளோடு கூடியசஞ்சாரம் போன்று மிளிர்கின்றது. பின் அந்த வருணனை மெல்லென்று அவரோகணமாகி வீற்றிருந்தருளுவர் என்று முற்றிஅமைகின்றது.

திருக்கைலாச மாட்சியும் ஸ்ரீகண்டஉருத்திரனின் திருவோலக்கமும் பேசுகின்ற இந்தவருணனை, அந்தத் திருக்கைலாசமே போன்று தனித்த தொருவசனமாய் அமைந்திருக்கின்றது. திருகைலாசமலையில் ஆரோகணஞ்செய்கின்ற ஒருவர் மெல்லென ஏறி உச்சியை அடைந்து சற்றேசஞ்சாரம் செய்து ஆரோகணித்தவாறே மெல்லென்று அவரோகணஞ்செய்து தரையை அடைவதுபோல, "அநாதி மலமுத்தராய்' என்று தொடங்குகின்ற வருணனையும் சிறிய சிறிய அலைகளாய் மேலே மேலே எழுந்து, உச்சியிலே சிறிதே உலாப்போந்து, பின், ஒழுங்கு பட்டதொரு மலைச்சாரலிலே அருவி ஒழுகுவதுபோல் கீழிறங்கி "வீற்றிருந்தருளுவர்" என்று முடிகின்றது.பெரியபுராணவசனம் ஆகிய மாளிகை முகப்பிலே, செந்தமிழ்வசனமாகிய ஒருகைலாசகோபுரம் எழுந்து நிற்பதுபோல நிற்கின்றது அந்த ஏக வசனவருணனை.

செய்யுள் நடையிலானுல் "அந்த வருணனை "அநாதிமலமுத்தனுய்" என்று தொடங்கி "வீற்றிருந்தருளுவன்" என்று முடிந்திருக்கும், வீற்றிருந்தருளுவர் என்ற தொடரில் இறுதி 'ரகரம்'' வசன நடைபற்றி மரியாதைப் பன்மையில் அவ்வாறுவந்ததேயாயினும் அது உண்மையில் 'னகர' மேயாம். அநாதிஎன 'அரக்த்தில்


சுன்ஞகத்திற்கு
வரும்போது

பிராமணுள் கிளப்பிற்கு

விஜயம் செய்ய
மறவாதீர்கள்

சுத்தமான
இனிய
சைவ உணவு

நறுமணம் மிகுந்த
காப்பி, தேநீர்
பழரச பானம்.

பிராமணுள் கிளப்

அறிவுக்கு விருந்தளிக்கும்
பத்திரிகைகள், புத்தகங்கள்

(Prop. S. ஜெகநாதன்)

ஸ்டேசன் வீதி : சுன்ஞகம்

தொடங்கி 'ன'கரத்தில் முடிகின்றது. அந்த வசனம் அகர முதல் னகர இறுவாயான தமிழில் வசன நடை நடக்கும் நடைக்கு உரையாணி இதுஎன்பதைக்காட்டுவதாய் அமைந்திருக்கின்றது, ஒருசொல்லுத்தானும் ஒரு அசைதானும் செய்யுள் நடைப்படாமல், இருநூற்றுக்கு மேற்பட்ட சொற்களையுடையதாய் அமைந்திருக்கின்றது அந்தத்தனிவசனம். அது சொன்னடையாலும், தன்னகத்துப்பொதிந்த பொருளின் சிறப்பாலும், அப்பொருளைத்தெளிவு பெறக்காட்டு மியல்பானும் அவ்வெள்ளியங்கைலாச கிரியே போல் மிளிருகின்றது. அதன்பாலமைந்த பொருள் முப்பத்தாறு தத்துவங்களையும் கட்டந்ததாய் அத்தத்துவங்களால் அறியப்படுவதாய் அமைந்தது என்பதனை அறிவிப்பதுபோல் முப்பத்தாறு வரிகளைக்கொண்டதாய் அவ்வாற்றால் ஒரு தெய்வசம்பத்தாய் அமைந்திருக்கின்றது இந்த வசனம்.

—தொடரும்.


தென்னிந்தியாவின்
பிரபல எழுத்தாளரும்
இலங்கைப் பல்கலைக்கழக
விரிவுரையாளருமாகிய

"பானுசிம்ஹன்"
அவர்கள்

எழுதும்

சிறுகதை

விரைவில் வெளியாகும்.



தத்ரூபமான
புகைப்படங்கள்
தேவையானோர்
மறக்க முடியாத

பெயர்

பிறின்ஸ்

[உரிமையாளர்: M. நடராஜா]

கே. கே. எஸ். வீதி : சுன்னாகம்.

அறிமுகப்படுத்துகின்றோம்!

# 'லோமா டெக்ஸ்'

அச்சடித்த பருத்தி fபப்ரிக்

உயர்ந்த ரகம்! உத்தரவாதம்!

நீடித்து நிலைத்து நிற்கும் பல்வேறு வண்ணங்களில்
கவர்ச்சியான டிசைன்களில் "லோமா டெக்ஸ்"
கிடைக்கும்.

எப்பொழுதும்

## "லோமா டெக்ஸ்"

என்றே கேளுங்கள்.

ஏக இறக்குமதியாளர் :

**SIRRUL KADHEER & Co.,**

**41, 43, 2nd Cross Street,**
**COLOMBO 11.**

Telephone : 6009 & 3710.

சுத்தமாக

ஃ

சுகாதாரமுறைப்படி

நவீன இயந்திரங்களினால்

## விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு

தயாரிக்கும்

# பேபி BABY BRAND மார்க்

# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

— — தயாரிப்பாளர் — —

## சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

## ராஜா ஸ்ரோர்ஸ

போன்: 372

2/B, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தந்தி ESVES



# ஆண்மை

நாவேந்தன்

அவள் காதலித்த பொழுது அவன் காதலிக்கவில்லை. பின் அவன் காதலித்தபொழுது அவள் காட்டிக் கொடுத்தாள். கடைசியில் அவளே வந்து அழைத்த பொழுது அவன் என்ன செய்தான்?

ஒழுக்கமாக, பண்பாக வாழ வேண்டுமென்று முழுமூச்சாக எண்ணுகிறபொழுது எப்படியோ அதற்கொரு சோதனை ஏற்பட்டுவிடுகிறது. இலட்சியமாவது, ஒழுக்கமாவது எப்படியோ வாழ்ந்துவிட்டுப் போவோம் என்று எண்ணுகிறபொழுது மிகவும் யோக்கியனாக வாழமுடிகிறது. இதுதான் சத்தியசோதனையோ? இந்த உலகில் மனிதப்பூச்சியாக உதிர்ந்துவிட்ட முப்பதுவருட வாழ்க்கை அனுபவத்தில் இந்தப் பிரச்சினைக்கான முடிவு காண்பதில் நான் அலுத்துக் களைத்துப் போனேன்; ஆனால் அந்தப் பிரச்சினை மட்டும் உள்ளத்தில் நிலைத்துநின்று இடையிடையே விசுவரூபமெடுத்துக் கொண்டுதானிருந்தது. அந்தச் சம்பவம் நடந்தபொழுதும், நடக்க உருவாகிக்கொண்டிருந்தபொழுதும், ஏன் அதற்குப் பின்னுங்கூட இந்த ஆராய்ச்சி மனோபாவம் என்னைவிட்டுத் தலைமுழுகிப்போய் விடவில்லை. என்ன செய்வது? அது என்கூடப் பிறந்த குற்றமோ!

ஐந்து வருடங்களுக்கு முன்னர்—

எங்கள் பள்ளியில் உயர்தர வகுப்பில் ராணியும் நானும் ஒன்ருகப் படித்தோம். அப்பொழுது ராணி வெள்ளை உள்ளத்தினள். அழகின் ஓவியம்; பருவ மங்கை. மாணவ குழாத்திற்கு ஒரு வியப்புக் குறி. அவள் அன்புக்கு, கடைக்கண் பார்வைக்கு 'தவமிருந்த' காளையர் பலர்! ஆனால் நான் இப்பொழுது போலவே அப்பொழுதும் ஒரு விசித்திரப் பிறவி! எவரெவர் அவள் அன்புக்கு ஏங்கியபோதும் நான் நானாகவே இருந்தேன். அழகு என்ற மூலதனத்துக்கு விலைபோகாத ஆண்மை அன்றும் இன்றும் எனக்கு இருப்பதில் ஒரு பெருமை. ஆனால் ராணி — என்னைக் காணும்போது பேசும்போது 'புதிய ஒரு உலகத்திற்குப் போக அழைப்பு விடுத்தாள். குறும்பும், உதாசீனமும், அலட்சிய சுபாவமும்என் கூடப்பிறந்த சொத்துக்கள். அவளை அலட்சியம் செய்

தேன். அவளுக்கு ஆத்திரம்—எனகுக் வெற்றி. ஆனல் எனது சக மாணவ நண்பர்களுக்கு மனக்குமைச்சல்! அவர்கள் உள்ளங்களில் உருவாயது ஒரு சூழ்ச்சி. ஏனே எனக்கு அது புரியவில்லை அப்போது! எனக்கு உற்சாக மது ஊற்றினர்கள், அனுபவமற்ற உள்ளமல்லவா. போதை தலைக்கேறியது. அவ்வளவு நாட்களும் என் அலட்சியத்தினல் உள்ளத்தைப் புண்ணக்கிக்கொண்டவள் அல்லவா அவள்? எனவே எங்கு தனக்கொரு சந்தர்ப்பம் கிடைக்கும் ஆத்திரத்தைக் கொட்டித்தீர்க்க என்று பொருமிக்கொண்டிருந்தபோது, நண்பர்களின் தூண்டுதலுக்கு எடுபட்ட நான் எழுதினேன், அவளுக்கு ஒரு கடிதம் 'காதலிப்போம்' என்று! பதில்வந்தது- பள்ளியதிபர் என்னை உடனே பார்க்க விரும்புவதாக! ராணி என்னைப் பழிவாங்கிவிட்டாளா.........?

அதிபர் முன்னே நின்று கெஞ்கிக் கூத்தாடி, மன்னிப்புப் பாடித் தப்பித்துக்கொள்ளப் பட்டபாட்டில் அரை உயிர் போய்விட்டது எனக்கு! வகுப்பில் எனக்குள்ள திறமையையும், செல்வாக்கையும் எண்ணி அதிபர் ஒருவாறு மன்னித்துவிட்டார். ஆனல்........., மனம் ஒரு மாயக் குரங்கு. எதை எப்பொழுது நினைவு கொள்ளக்கூடாது என்று உறுதி செய்கிறேமோ அதை அப்பொழுது நினைத்து, நினைத்து உருகவேண்டியிருக்கிறதே. முன்பு எள்ளத்தனையும் கவனியாத எனக்கு அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் அவளைப் பார்க்காமலிருக்கவே முடியவில்லை. உண்மையில் அவள் கொள்ளை அழகிதான். குறுகுறுத்த நீலோற்பல விழிகளும், மாவின்வடு வகிரன்ன நெற்றியும், செவ்விள நீர்க்குவையெனத் திமிர்ந்த நெஞ்சகமும், இதழ்க் கடையில் நெழிந்தோடும் புன்னகையும் என்னுள்ளத்தில் எண்ணற்ற கற்பனை விதைகளைத் தூவின. என்ருலும் அவளை 'அப்படி' எண்ணிட முடியுமா? சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாதே, அதுபோலப் பறிபோகும் மனதிற்குக் கடிவாளம் அறிவுரை எல்லாம், 'அதிபரை' நினைத்தவுடனேயே கிடைத்துவிடும் பொருள்களாகவன்றே முன்னைய அனுபவம் முத்திரையிட்டிருக்கின்றது. எனவே எனக்கு அவள் எட்டாக்கனியோ என்னவோ!

பள்ளி வாழ்க்கை இத்தகைய உணர்ச்சிமோதல்களின் நிலைக்களனக நின்று, நகர்ந்து மறைந்ததை இப்பொழுது எண்ணிப் பார்க்கும் போதுகூட ஒரு தனி இன்பம் தளிர்க்கிறது என் மனத்தில்!

∴ ∴ ∴

காலச் சுழற்சியில்தான் எத்தனை மாற்றங்கள் மலர்ந்துவிடுகின்றன. ஐந்து ஆண்டுகள் கழித்த

கலைச்செல்வி விற்பனையாளர்கள்:

நியூ விக்டோரியா ஹவுஸ்
99, ரீகல் கட்டடம்,
நுவரெலியா.

கலாநிதி புத்தகசாலை
23, மெயின் வீதி,
மட்டக்களப்பு.

பின்னர் இப்பொழுது நான் ஒரு மனிதன், உழைக்கத் தெரிந்தவனைத் தானே மனிதன் என்போம். எங்கோ பிறந்து வளர்ந்து உழைப்ப தற்காக வந்த என்னை வேலை காத்திருக்கவில்லை. அந்த வேலைக்குக் காத்திருந்தவன்போல அச்சகமொன்றில் வர்த்தகப்பகுதி மனேஜராகவும் 'சன்வச'ராகவும் நான் கடமை ஏற்றேன். காலமெல்லாம் இலக்கியத்தோடு ஒன்றிப் பழகிக்கிடந்த எனக்கு அந்தவேலை அதிக வருமானத்தைத் தராவிட்டாலும், ஓரளவு மன நிம்மதியை அளித்தது என்பதில் மகிழ்ச்சி அடைந்தேன். இந்தச் சலனமற்ற வாழ்வில் சலனமேற்படவேண்டுமென்ற நியதியோ என்னவோ ராணி மீண்டும் என் வாழ்வில் எதிர்பாராத வகையில் குறுக்கிட்டாள்!

ஒரு சனிக்கிழமை மாலை! நகரத்தின் சௌந்தரியமெல்லாம் கொடிகட்டிப் பறக்கும் நேரம் அது! எங்கு பார்த்தாலும் ஒரே ஜனக்கும்பல்! சற்று வெளியே சென்றுவரலாம் என்று கிளம்பிய நான் நகரத்து வேடிக்கைகளையெல்லாம் பார்த்துக் களைத்தவனாகப் பிரபல ஹோட்டல் ஒன்றில் சிற்றுண்டியருந்தச் சென்றேன். பிரபல ஹோட்டல் அல்லவா அது? ரொம்பக் கூட்டமாயிருந்தது! இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் எல்லாருமிருந்தனர். எங்கோ ஒரு மூலையில் போய் அமர்ந்து கொண்ட நான் சிப்பந்தி கொண்டு வந்து வைத்த உணவுகளைச் சுவைத்தபடியே பார்வையை அலையவிட்டிருந்தேன். ஒரே மகிழ்ச்சிதான் அங்கு சுருதி கூட்டியது. துன்பத்தின் சிறு அணு இழைதானும் அங்கில்லை. அவர்கள் எல்லாரும் வாழ்வைச்


எப்பொழுதும் கலப்பற்ற
சுத்தமான

**குளுக்கோரஸ**

என்று கேளுங்கள்

60% குளுக்கோஸ் கொண்ட சிறந்த ஜூஜூப்ஸ். குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய பாதுகாப்பான இனிப்பு.

USWATTE
CONFECTIONERY WORKS
Moratuwa.
Phone: 363


சுவைக்கிறார்கள்! பார்வையும் சிந்தனையும் 'தத்துவம்' பேசின.

"மிஸ்டர் ராஜன்.........."!

ஒரு மோகன மணிக்குரல் இழைய முல்லை முறுவலித்தது. திடுக்கிட்டுத் திரும்பிய என்னைப் பார்த்துப் புன்னகைத்தபடி நின்றாள் ராணி. அவள் பக்கத்தில் ஒரு சிறுமி மிரள விழித்துப் பார்த்தாள் என்னை.

"ராணி.........நீயா.........?"

அசட்டுச் சிரிப்புடன் ஏதோ சொல்லி வைத்தேன், அவள் மீண்டும் 'கலீ'ரென்று சிரித்தாள். எனக்கென்னமோ போலிருந்தது, ஐந்து வருடத்திற்கு முன்பு நான் கண்ட

ராணியா இவள்......? ஒல்லியான அவள் உடம்பில் சதைப்பிடிப்பு வைத்திருந்தது. செக்கச் சிவந்த மேனியில் துறுதுறுத்த இளமை நடனமாடுகிறது. அந்தக் கண்கள், நெற்றிக் குங்குமம், நீண்ட இரட்டைப் பின்னல்கள்..........., வயது ஏற ஏறப் பெண்கள் இளமை குலைகிறார்கள் என்று எந்த மடையன் கூறினான்? ராணியைப் பார்த்தால் ஐந்து வயது குறைந்தவள்போலத் தோன்றுகிறாளே! சே, என்ன மனசு எனக்கு? வந்தவளோடு பேசத் தெரியவில்லை. கற்பனை பண்ணுகிறேனாம்!

'பில்'லுக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தேன். ராணியும் சிறுமியுந்தான் வந்தார்கள். பேசுதற்கு எதுவுமேயில்லாத சூனியத்தில் எதனைப் பேசுவது. மெல்ல நடந்தபடியே 'நான் வருகிறேன் ராணி' என்றேனோ இல்லையோ 'எங்கே?' என்று கேட்டாள் ராணி! 'டிரைவர்' காரைப் பக்கத்தில் கொணர்ந்து நிறுத்தினான். "ஏறிக் கொள்ளுங்கள்" என்ற 'உத்தரவு' பிறந்தது. அந்தக் கார்ப் பிரயாணத்தின்போது ஐந்துவருட வாழ்வின் வரலாறு பரிமாறப்பட்டது எங்களுக்குள்! ராணி—மிஸஸ் ராமதாஸ் இப்பொழுது! அவர்களுக்குக் குழந்தையில்லை. அந்தச் சிறுமி வளர்ப்பு மகள்! நான் ஒரு அச்சக மனேஜர்

ஒல்லாந்து தேசத்தின் உன்னத தயாரிப்பான


எறஸ்

றேடியோவுக்கும்

நம்பிக்கையான சேவைக்கும்

றேடியோ மனுயலை

நாடுங்கள்.



என்ன உயர்தரம்

என்ன நம்பிக்கையான சேவை

அதனால்தான் எல்லோரும் றேடியோ மனுயலை நாடுகின்றார்கள்.
றேடியோவுக்கும் அதன் உப உறுப்புகளுக்கும் வடமாகாணத்தில் நற்பெயரும் புகழும் பெற்றவர்கள்.
ஓர்முறை எங்கள் காட்சிச் சாலையையும் சேவை இலாக்காவையும் பார்வையிடுங்கள்,
நம்பிக்கையான சேவைக்குத் துலங்கும் சின்னம்

றேடியோ மனுயல்

23/4, ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்.

கட்டைப்பிரம்மச்சாரி என்பது அந்த உரையாடலின் அடக்கம்.

எனது விடுதியின் வாசலில் கார் என்னை இறக்கிவிட்டபொழுது 'மிஸ்டர் ராஜன், எங்கள் வீட்டுப் பக்கம் வசதியானபோது வந்து போங்கள். ஒரே ஊர்க்காரர்களல்லவா நாம்!" என்ற மணிக்குரல் மீண்டும் இழைந்தது. அந்தக்குரலுக்குரியவளின் அன்பை எண்ணி அகமகிழ்ந்துகொண்டே உள்நுழைந்தேன்!

∴ ∴ ∴

அந்தச் சந்திப்புக்குப் பின்னர் பலதடவைகள் ராணியின் வீட்டுக்குச் சென்று வந்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் ராணி மிக மிக இனியவளாகப் பழகியிருக்கின்றாள். அவள் கணவர் ராமதாஸ் இங்கிதமான மனிதராகக் காணப்பட்டார். அவரதிகம் என்னுடன் பேசாவிட்டாலும் அவரது பெருந்தன்மையை எண்ணிப் பிரமித்திருக்கிறேன். ஒரே ஊர்க்காரர்கள் என்பதற்காக ராணியும் நானும் சகசமாகப் பழகுவதை அவர் கண்டிக்காதிருப்பதே பெருந்தன்மை யன்றோ. ஆனால் ராணி?

இளமை தெறிக்கும் அவள் உடல் அசைவுகள், சுழலும் விழிகள் பாசப் பரவலை உதிர்க்கும் உரையாடல்கள், எல்லாம் வரம்புகடந்தன போல எனக்குத் தோன்றுகின்றனவே! வீண் பிரமையா? முன்னொரு போது அவளால் அடைந்த அவமான நினைவு நெஞ்சிலிருந்து நீங்க முன்னர் மீண்டும் அவளால்........ மனமே நீ மிகப்பொல்லாத குரங்கு! என்னமாதிரியெல்லாம் என்னை ஆட்டிப் படைக்கிறாய்? அவளைச் சந்தித்து விட்டுச்செல்லும் ஒவ்வொரு கணமும் உள்ளஞ் சலனப்படுகிறதே எதற்காக.........?

'போகப்போகிறீர்களா? சரி போய் வாருங்கள்' என்று வாசல்வரை வந்து வழியனுப்பிவைத்தவள் கரம் ஏதோ ஒன்றை என் சட்டைப் பைக்குள் திணித்தது. அது என்ன? நெஞ்சுச் சட்டையல்ல, நெஞ்சமே கனத்துக்கொண்டிருந்தது. வீட்டிற்கு வந்து தட்டுத் தடுமாறியபடி இருட்டில் நுழைந்து மின்விளக்கைப் பொருத்திய பின்னர் அந்த ஒன்றை —கடிதத்தை எடுத்துப் பார்த்தேன்.

ஐயோ, என்று அலறவேண்டும் போலிருந்தது! அடி பாவிப்பெண்ணே, உன்னுடைய தீராக்காதலுக்கு நான்தானா அகப்பட்டேன்? பாவம் பார்த்துக் கைப்பிடிப்பதற்கும் நீ கன்னியல்லவே. அன்னியன் ஒருவனின் மனைவியாச்சே. உன் கணவன் ஆண்மையில்லாதவன் என்றால், இளமை வாழ்வில் கூடாநெறிக்குட்பட்டு ஆண்மையைத் தீர்த்துக் கொண்டவன் என்றால், மருத்துவர்கள் அவன் மனைவியுடன் பழகக் கூடாது என்று கூறியிருக்கிறார்கள் என்றால் அதற்காக நான் உன்னைக் காதலிக்க முடியுமா? அன்றும் இன்றும் நீ என்னை மனதாரக் காதலிக்கிறாய் என்றால் அதற்காக நான் மனிதத் தன்மையை இழந்துவிடவேண்டுமா? பிறன்மனை நோக்காப் பேராண்மையைத் துறந்துவிடவேண்டுமா?

உள்ளம் அலறியது. மனச்சாட்சி ஓலமிட்டது! ஆண்மை விழித்துக் கொண்டது. அதற்குப்பிறகு ராணி

யின் வீடுசெல்ல எனக்குத் துணிவு பிறக்கவில்லை, ஆனல் அவள்......

ஒரு தலைப்பட்ட ஆசையுணர்வு ஒருபேய்! இல்லாவிட்டால் ராணியின் வீட்டுக்கு நான் போகாமல் விட்டதற்காக என் வீடுதேடி வருவாளா அவள்? அதுவும் நான் என் மனது கவர்ந்த அவருடன் எங்கேயோ சென்று வாழப்போகிறேன்' என்று மிஸ்டர் ராமதாஸுக்குக் கடிதம் எழுதிவைத்துவிட்டு 'நட்டநடு இரவில், என்னை வந்து எழுப்பி இந்தக் கதையைக் கூறுவதென்ருல், அவள் துணிவுக்கு என்ன பெயரிட்டழைப்பது?

அந்தப் பயங்கர இரவில்எனது 'தர்மோபதேசத்தைக்' கேட்க அவள் தயாராகவில்லை. எனது வாழ்வின் இலட்சியத்தைப் பாழடிக்க யானும் தயாராயில்லை. எது நீதி, ஒழுக்கம், ஆண்மை என்று விடாப்பிடியாக எண்ணி வந்தேனே அதற்காக, அவளை ஏற்றுக்கொள்ள என்மனம் ஒப்பவில்லை. முடிவாக எனது கருத்தை அழுத்திக் கூறியபொழுது அவள் தோற்றம் தீராக் கோபத்தில் கொதிக்கும் மோகினிப்பேய் போலிருந்தது. என்ன வெல்லாமோ ஏசித்தீர்த்து விட்டு வெளியேபோனவள்,எங்கு போனளோ? போனவள் தான்!

வாழ்வின் நியதி என்னவோ எப்பொழுதும் புதுமையாகத்தானிருக்கிறது! வாழத்துடிக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் வரத்தெரியாத 'வாழ்வு' நினையாத நேரத்தில் சந்து பொந்து தேடி குறுக்குப்பாதை வழியாகக் கண்சிமிட்டி அழைக்கிறது! கடவுளும் சாத்தானும் மனிதனைத் தேடிவருகிற பாதைகள் என்றுமே வேறு வேறுதானே? தத்துவார்த்த மயக்கம் என்று இதைக் கூறிச் சிலபேர் சிரித்தாலும் தூய்மையின் புதைகுழிக்கு நுழைவாயிலாக அமையாத ஆண்மையின் வெற்றி தரும் மனச்சாந்தி மனிதனை அமரனுகத்தான் மாற்றுகிறது இல்லையா?


## "ஆசீர்" வெளியீடுகள்

படிமுறைக் கணிதம்:

| 2, | 3, | 4, | 5, | 6, | 7, | 8ம் வகுப்புகளுக்கு |
|---|---|---|---|---|---|---|
| 1.20 | 1.40 | 1.60 | 1.80 | 2.00 | 2.00 | 4.00 ரூபா |

படிமுறை எண்கணிதப் பயிற்சி

| மத்திய வகுப்பு, | உயர்தர வகுப்பு தமிழ், | ஆங்கிலம் | சிங்களம் |
|---|---|---|---|
| 1.60 | 1.60 | 1.60 | 1.60 |

மாதிரிகை வினுப்பத்திரங்கள்:

| 5. | J. S. C. | G. C. E. |
|---|---|---|
| -/50 | -/75. | 1.00 |

படிமுறை அட்சர கணிதம்

| 6, | 7, |
|---|---|
| 1.60 | (அச்சில்) |

ஏனைய வெளியீடுகள்:

இலக்கண விளக்கமும் பயிற்சியும் 4ம் 5ம் வகுப்பு, பயிலுந் தமிழ் முதலாம் பாகம், பாடக்குறிப்பும் பதிவும், இலங்கைப் பூமி சாத்திர வினுவிடைகள் முறையே 70, 80, 2. 00, 2. 00, 1, 25

கிடைக்குமிடம்

ஆசீர்வாத அச்சக-புத்தகசாலை,

32, கண்டிவீதி—யாழ்ப்பாணம்.

தொலைபேசி. 274

# மன்னிப்பாரா ?

**— செந்தாரகை —**

"மூர்த்தி. நேர்மையே உருவான உங்கள் சுசீ, ஒழுக்கந் தவறிப் பேசுகின்றாள் என நினைக்கிறீர்களா? இல்லை... என் மனச்சாட்சிக்கு மதிப்பு கொடுத்ததால்தான் உங்களிடம்வந்திருக்கிறேன். உங்கள் உரிமையை இப்பொழுது ஏற்றுக் கொள்ளுங்கள். நமது வாழ்வை இக் கணமே வாழ்ந்து முடித்துக் கொள்ளுவோம். கோடி இன்பங்களையும் ஒரு கணத்தினுள் குவித்துக் கொள்ளுவோம். நாளைய சுசீலா நடைப் பிணமாகி விடுவாள்......"

சுசீலா துடிக்கும் உதடுகளைப் பல்லில் அழுத்திப் பிடித்தாள்.

"மூர்த்தி......மூர்த்தி...... மானசீகமாய் மட்டுமின்றி, என்னால் என்றுமே உங்களோடு வாழ முடியாது. ஆனால் ...... இந்தக் கணம் உங்களோடு வாழ்கிறேன். இதை அறிந்தால் உலகமே என்னைக் கேவலமாய்க் கருதும். பகிஷ்கரித்துவிடும். ஆனால் ... ஆனால் கடவுள் என்னை மன்னிப்பார், இல்லையா?"

"சுசீ!" மூர்த்தி அவளை இறுக அணைத்துக் கொண்டான். "நிச்சயமாக நம்மை மன்னிப்பார்!"

மூர்த்தி–சுசிலா, இருவரினதும் காதல் திருவிளையாடலை மாத்திரம் தான் போலும், எழுத்தாளர் 'பவானி' கண்டார். மறுநாள், திருமணம் செய்யப் போகும் இளைஞனின் நிலை எப்படி இருக்கும் என்பதை எழுதாது விட்டதினால். என் பேனைக்கு நான் வேலை கொடுக்க வேண்டியதாயிற்று.

வைகாசி இதழில் "பவானி" எழுதிய கதையின் முடிவை மாற்றியமைத்துச் சவுந்தரநாயகம் எழுதிய கதையைச் சென்ற இதழில் படித்தீர்கள். "பவானி"யின் முடிவை ஏற்றுக்கொண்டு. இலட்சியக் கதாநாயகன் ஒருவனைப்படைக்கின்றார் "செந்தாரகை"

நான்... ?

நான் யார் ?—

எழுத்தாளன் அல்லன். இரண்டு சிறு கதைகளும், ஒரு ஹாஸ்யக் கட்டுரையும் அச்சில் ஏறினால், ஒருவன் எழுத்தாளனாக மதிக்கப்பட்டால் கண்டிப்பாக நானும் எழுத்தாளர் பட்டியலிற் சேர்க்கப்பட வேண்டியவனே... !

எழுத்தாளன் என்று என்னையே நான் அறிமுகம் செய்வதிலும்பார்க்க அந்த ஏந்திழையாள்சுசீலாவை மறுநாள் திருமணம் செய்யப் போகின்றவன் நான் என்பது உங்களுக்கு தெரிந்தால், "ஹா! அவரா (ஞ)? என்று இதழ்களைக்கோணலாக்கி கேலிசெய்வீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

மறுநாள்...

எனக்கும்-ஏந்திழையாள் சுசீலாவிற்கும் திருமணம்.

நான் சுசீலாவைக் காதலித்தவனும் அல்லன். அவள் தெவிட்

டாத தேன் மொழியிலே தியங்கியவனும் அல்லன்.

அவள்—

எனக்கு நாளை திருமணப் பெண்ணாக வரும் சுசீலா, தன் நிலைக்குத் தகுந்த கணவனை வரிக்கத் தவறியதுமன்றி, 'காதல், என்று கயிறுவிட்ட கோழை மூர்த்தியை, ஏதோ 'கயஸ்' என்று எண்ணி ஏமாந்தவள்.

அவன்—

மானத்தோடு வாழ்ந்த தன்பெற்றோரை மானத்தோடு சாக விடுவதற்காக, ஒருபெண்ணின் மானத்தை கப்பலேற்றியவன் 'அவன் நல்லவன்'. இப்படித்தான் உலகம் கூறுகின்றது உண்மைக் காதலன்! உறுதியற்ற உள்ளத்தினன். உறுதியற்ற உள்ளத்திலேஅன்பென்னும்காதல்ஊற்று எப்படித்தான் ஊறியதோ, யான் அறியேன்.

இருந்தும், இப்படிப்பட்ட சுசிலாவை, எப்படித் திருமணம் செய்ய நான் முன் வந்தேன்?

நான் நினைத்தால்—விரும்பினால் என்றோ சுசிலாவை திருமணம் செய்திருப்பேன். சுசிலாவே என்னை முன்பு காதலித்தவள் தானே - ஒருதலைக் காதல்-உடலிலும் பார்க்க-உள்ளத் தழகுள்ள பெண்ணையே விரும்புபவன் நான்.

அழகைவிரும்பித் திருமணம்செய்தால்-அந்த அழகு அழிந்தவுடன் வாழ்வும் அழிந்து விடுவது போல் தோன்றும். கையிலுள்ள இனிப்பை கைதவற விட்டவுடன் கண் கலங்

உங்களை

**கணேசன் ஸ்ரோர்ஸ்**

அழைக்கின்றது

எங்களிடம் உங்களுக்குத் தேவையான

புடைவைத் தினிசுகளும், சாய்ப்புச் சாமான்களும்
அலங்காரப் பொருட்களும் சேலை வகைகளும்
மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒருமுறை வந்து உண்மையை உணருங்கள்.

நம்பிக்கையும் நேர்மையுமான இடம்

**கணேசன் ஸ்ரோர்ஸ்**

78, கே. கே. எஸ், வீதி: யாழ்ப்பாணம்,

கும் குழந்தை போல, என் வாழ்வை அமைக்க நான் விரும்பவில்லை.

"இவ்வளவு தெரிந்தும், திருமணத்திற்கு ஏன் நான் சம்மதம் அளித்தேன் ?"—என்னையே நான் சில நாட்களாக, அடிக்கடி கேட்கும் கேள்வி-.

தாயற்ற என்னைப் பேணி வளர்த்தவர் சுசீலாவின் தாய்தான். சுசீலாவின் தாய் சாதியால், பிறப்பால், அந்தஸ்தினுல் குறைந்தவராக இருந்தாலும், குணக் குன்று. சுசீலாவின் கண்களிலிருந்து இரத்தம் தான் வழிந்தாலும் கண் கலங்காத, உறுதி வாய்ந்த உள்ளம் கொண்ட சுசீலாவின் தாய்,— என் மாமி— என் கண்களிலிருந்து ஒரு துளி கண்ணீர் சிந்தினுல் உலகமே அஸ்தமித்து விட்டதாக உள்ளம் நோவார்.

அதற்கும்—இதற்கும்...... ?

என் மாமிவரையில்—

சுசீலா மூர்த்தியை காதலித்தவளேயன்றி கற்பை பலி கொடுத்தவளல்ல.

மூர்த்தி வரையில்—

காதலித்து, பெற்ருேருக்காக உதறப் பட்டவள்.

என் வரையில்—

எச்சிற் கனி !

சுசீலாவின் அழகு என்னைச் சம்மதம் கொடுக்கச் சொல்லவில்லை அவள் தெவிட்டாத தேன் மொழியில் நான் மயங்கவில்லை,

பின்பு...

"என் மகளுக்கு வாழ்வு கொடுப்பாயா ?" என்ற மாமியின் வார்த்தைகளில், மகுடிக்கு கட்டுப் பட்ட பாம்புபோல், கட்டுப் பட்டு சம்மதம் கொடுத்தேன்.

எப்படி... ?

எனக்கே என் முடிவு புரியாத புதிராக இருந்தது.

சுசீலாவின் திருமண விசயமாக நான் மூர்த்தியுடன் பேசினேன். (அவன் காதலித்தது என்னவோ உண்மைதான்.) என் முயற்சி விழலுக்கு இறைத்த நீராக அமைந்தது.

"நீதி நியாயம் பேசும் நீ, ஏன் அவளுக்கு வாழ்வைக் கொடுக்கக் கூடாது ?"—

வேறு யாரும் இப்படி என்னைக் கேட்டிருந்தால், என் முடிவை சந்தோஷத்துடன் கூறியிருப்பேன்.

கேட்டவன்,—


அவளைக் காதலித்தவன்-மூர்த்தி.

எழுத்தாளர் பவானி சுசீலாவை

*கலைச்செல்வி விற்பனையாளர்கள் :*

**ஸ்ரீ தண்டாயுதபாணி**
ஸ்டோர்ஸ்
39, கொட்டியகலை பஸார்,
பொகவந்தலாவை.

**எம். ஜெலீல்**
33/1, கந்தாவத்தை ரோட்,
காலி,




மூர்த்தி அணைத்ததைத் தானே கண்டார்!

ஆனல், நான்...!

என் மனம் அலறுகிறது...

"ஐயோ! மாமி உங்கள் மகள் கதவை ஏன் மற்றவருக்கு சப்தம் கேட்கும்படி திறக்கவேண்டும்? நான் உங்கள் வீட்டில், உங்களுடன், ஒன்ருக இருப்பது அவளுக்கு தெரியாதா? ஏன், அவளை நான் பின் தொடர வேண்டும்? அவள் ஏன் அப்படிப் பேச வேண்டும்! ஏன் நான் அந்தக்காட்சியை காணவேண்டும்! அவள் தான் உணர்ச்சி வசப்பட்டு விட்டாள் என்ருல் 'அந்த மூர்த்தி ஏன் உண்மை நிலையை விளக்கி, அவளின் உணர்ச்சி வெள்ளத்திற்கு அணை போட்டிருக்கக் கூடாது?"

"பெற்ருேரின் மானத்திற்காக காதலித்த கன்னியை கைவிட்டவன்—காதலித்த கன்னிக்காக தன் உணர்ச்சி வெள்ளத்திற்கு அணைபோட்டு, அவளை, ஏன், சகோதரியாக ஏற்றுக் கொண்டிருக்கக் கூடாது?"

அவன் அணைத்தான், பரவாயில்லை, அணைத்தவன், அவளை...

"................"

நினைக்க, நினைக்க நெஞ்சம் கொதிக்கின்றது. எப்படி அவளை, என் மனைவியாக ஏற்றுக் கொள்ளலாம்?

நான் அவளை ஏற்றுக் கொள்ளாவிட்டால், பிறன் ஒருவனுக்கு மனைவியாகி, அவள் 'குட்டு' வெளிப்பட, பலர் பலவிதமாகப் பேச மாமி மானத்திற்குப் பயந்து தற்கொலை செய்ய..."

ஐயோ தெய்வமே! ஏன் என்னை என் அன்னையுடன் அழைத்துச் செல்லவில்லை...


"அவள் நாளை என்னுடன் நடைப்பிணமாக வாழ்க்கை நடாத்துவதிலும் பார்க்க நாளை பலர் அறிய தெருவிலே பிணமாகச் சென்ருல்......"

"தன்னைத் தன் கணவனுக்கு மாத்திரம் காட்டுவதே கற்புள்ள பெண்ணின் தன்மை, சுசீலாவோ மூர்த்திக்கு தன் உள்ளத்தைக் கொடுத்ததுமன்றி, உடலையும் கொடுத்து விட்டு, தாலி கட்டப் போகும் தன் கணவனுக்கு-எனக்கு-எதைத் தரப் போகின்ருள்......?"

என் மனம் கடலாக மாறியது, சிந்தனைகள் அலைகளாகின. கேட்கவா வேண்டும், போராட்டத்திற்கு!

# பெண்மணிகளே!

உங்கள் கணவரைக்
கவர்வதற்குத் தேவையானவை



## அழகுப்
## பொன் நகை

## அன்புப்
## புன்னகை

மாற்றுக் குறையாத தங்கத்தில்
மனதிற்குப் பிடித்த ஆபரணங்களுக்கு
மறக்க முடியாத இடம்

# லலிதா நகைமாளிகை

**99, செட்டியார் தெரு, கொழும்பு.**

போன்: **3610** Ext. 4 Lines

கிளை:

**104, செட்டியார் தெரு, கொழும்பு.**

# ஈடு மீட்கவா! வீடு கட்டவா!!
# சீதனம் கொடுக்கவா!!!

இதைப்போல் எதற்கும்

# இலங்கா நிதி லிமிற்றெட்

## நவீன சேமிப்பிற் சேருங்கள்

| மாதவீதம் கட்டுவது | இலாபத்துடன் கொடுக்கும் தொகை | | |
|---|---|---|---|
| | 30 மாதங்களில் | 60 மாதங்களில் | 100 மாதங்களில் |
| 10 ரூபா | 330 ரூபா | 720 ரூபா | 1300 ரூபா |
| 25 ரூபா | 825 ரூபா | 1800 ரூபா | 3250 ரூபா |
| 50 ரூபா | 1650 ரூபா | 3600 ரூபா | 6500 ரூபா |

**மேற்குறித்த இலாபத்துடன் ஒவ்வொருமாதமும் அதிட்டசாலிகளுக்கு அதிட்ட இலாபமும் கொடுக்கப்படும்**

கட்டுபவர் இறநதால் உரித்தாளிக்கு

கட்டிய பணத்துடன் கால் பங்கும் கொடுக்கப்படும்

மறு விபரத்திற்கு:-இலங்கா நிதி லிமிற்றெட்
தலைமைக் கந்தோர்:-திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணம்
கிளை:- 284, காங்கேசந்துறை வீதி, வண்ணார்பண்ணை

நாளை......

அவள் என் மனைவி.

இன்று......

இன்னும் என் மனைவியாகவில்லைத்தானே! மாமியை அழைத்து, "உங்கள் மகள் உள்ளத்தால் மாத்திரமன்றி, உடலால் கூட......"

"ஐயோ, மாமி! 'இதை' எப்படி உங்களிடம் சொல்லுவேன். இந்த நேரத்தில் என் அன்னை இருந்தால்......"

"அந்த எண்ணமே என் மனதில் தோன்றுவது தவறு. பெற்றவளிலும் பார்க்க பேணி வளர்த்தவரை குறை கூறுவது போல் அல்லவா இருக்கின்றது! நான் எண்ணுவது தவறு. ஆண்டவனே! இப்படிப்பட்ட எண்ணத்தை என் மனதில் தோன்ற விடாதே.

தன் பெற்றோரின் மானத்திற்காக, தான் காதலித்த பெண்ணின் வாழ்வை அழித்தான்—மூர்த்தி. என் மாமிக்காக, அவரின் மகளுக்கு நான் ஏன் வாழ்வு கொடுக்கக்கூடாது?"

என் மாமியின் மகள், உள்ளத்தால்-உடலால் களங்கப்பட்டிருக்கலாம். வாழ்வில் எத்தனையோ பெண்கள் இள வயதில் வழுக்கி விழவில்லையா? வழுக்கி விழுந்தவர்களுக்கு வாழ்வு கொடுக்காது, அப்படியே ஒதுக்கி விட்டிருந்தால் இன்று "கற்பு நெறி" பேசும் இந்த உலகம், "வழுக்கி விழுந்தவர்" வாழும் உலகமாக அல்லவா மாறியிருக்கும்."

நான் சுசீலாவைத் தொட்டு தாலி கட்டிய பின்பு, அவள் எனக்குத் துரோகம் செய்தால், அவளை மன்னிக்கமுடியாது.

நான் இன்னும் அவளைத் தொட்டு தாலி கட்டவில்லையே? அவள் என்னை இன்னும் தன் கணவனாக வரிக்கவில்லையே! அப்படியிருக்க எப்படி அவள் நன்மை—தீமைகளை நான் பேசுவது!"

சுசீலா வந்தாள்!

'என்ன...அத்தான்...இப்படி...?' அவள் பேச்சே, அவள் குற்றம் செய்துவிட்டு வருபவள் என்பதைக் காட்டியது.

நான் என் மனதைத் தேற்றினேன்.

"என்னைத் திருமணம் செய்ய உனக்கு விருப்பமா? மூர்த்தியின் எண்ணம் திரும்பவும் உனது மனதில் புகுந்து..." எப்படியோ நான் எண்ணியதைக் கூறிமுடித்துவிட்டேன்.

ஒரே அமைதி! பயங்கர அமைதி!!
அவள்—

"...இல்லை அத்தான்! இனிமேல் என்றுமே வராது..." எப்படியோ சொல்லிவிட்டு அறையினுள் சென்று, கதவைத் தாளிட்டாள்.

கதவு—

அவள் உடலை மறைத்ததன்றி அவள் விம்மி அழும் ஒலியைத் தடை செய்யமுடியவில்லை.

என் கண்களும் இமைகளென்ன கதவுகளுக்குள் தஞ்சமடைந்தன ...

விடிந்தது.

கல்யாணச்சடங்குகள் எல்லாம் முடிந்து, நானும்–சுசீலாவும் தம்பதிகளானோம். தனி அறை ஒன்றிற்குள் தள்ளப்பட்டோம்.

அங்கே!

அழகான கட்டில் அழகாக அலங்கரிக்கப்பட்டு, வா! வா! என்று அழைத்தது.

அறையினுள் இருந்த மற்ற ஒரு கட்டிலையும் சேர்த்து வைத்தேன்.

அவள் கண்களிலே பயங்கரச் சாயல். அவள் முகம் வெளிறியது. கண்கள் படபடத்தன.

"சுசீலா!... இல்லை... சுசீ இரு கட்டில்கள்! இரு உடல்கள்!! இரு உள்ளங்கள்!!!..."

"அத்தான்" என்று அலறிய வண்ணம் என் கால்களில் வீழ்ந்தாள்.

'மன்னிப்பீர்களா?" என்று மன்றாடினாள்.

'மூர்த்தியாக இருந்தால், நிச்சயமாக கடவுள் நம்மை மன்னிப்பார், என்பான் ஆனால் நானா உன்னை மன்னிக்கின்றேன்..."

"அத்தான், நீங்கள் என் தெய்வம்" கவலையிலும் பார்க்க, உறுதிதான் அதில் அதிகம் தொனித்தது.

"சுசி! நீ என்னை தெய்வமாக்காதே! நான் தெய்வமானால் வணக்கத்திற்கு மாத்திரமே உரியவன். நானும் வாழ விரும்புகின்றேன். நான் தெய்வமாக உன்னுடை வாழ்ந்தால், முதல் இரவு மூர்த்தியுடன் இரண்டாவது இரவு இன்னொருத்தருடன்... இப்படியே உன் வாழ்வு சென்று, பரத்தையர் வாழ்வாக மாறிவிடும். உன் உள்ளத்தை என் வார்த்தைகளைக் கொண்டு அடிக்க விரும்பவில்லை..."

"உன் கற்பை பரிசோதிக்க,– இராமன் சீதையை நெருப்பில் குளிக்கச் சொல்லியது போல நெருப்பில் குளிக்கச் சொல்ல நான் விரும்பவில்லை. அவர்கள் தெய்வப் பிறவிகள்! நெருப்பு அவர்களைத் தீண்டாது. நாம் சாதாரண மனிதர். உடலால்தான் களங்கம் அடையாது விட்டாலும் உள்ளத்தால் களங்கப்படுவர் எங்கள் உள்ளத்திலே அடிக்கடி சலனம் ஏற்படும்..." "உடலாலும் உள்ளத்தாலும் நீ களங்கப்பட்டிருக்கலாம் இன்று உன்னை நான் தொட்டு தாலி கட்டி, மனைவியாக ஏற்றுக்கொண்டுவிட்டேன் நீ இதை உணர்ந்தால் போதும்".

நான் பேசிக்கொண்டே போனேன். வார்த்தைகளால் அவளை வறுத்தெடுத்து, மாசு எல்லாவற்றையும் எரித்து, அவளை நல்லவளாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பேசிக்கொண்டேயிருந்தேன். இப்போது சுசீலா ஒன்றுமே பேசவில்லை. உடல் நடுங்க, அடங்கி ஒடுங்கி அப்படியே நின்றாள் கண்களிலிருந்து கண்ணீர் ஒழுகியது, விம்முகின்ற ஒலியைத் தவிர வேறெதுவும் அவளிடமிருந்து வெளிவரவில்லை.

அவளுடைய அந்த நிலையைப் பார்க்கப் பரிதாபமாகவிருந்தது.

"சுசீலா!"— அழைக்கும்போதே என் குரல் குளறியது.

"அத்தான்...!" என்றபடி என் கால்களில் விழுந்தாள் அவள்.

"தவறை உணர்ந்தவர் ஆண்டவனால் மன்னிக்கப்படுவர்" என்று கூறிச் சுசீலாவை அணைத்துக் கொண்டு விளக்கையும் அணைத்தேன்!

*எல்லோரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் விஞ்ஞான உண்மைகளைத் தமிழில் எழுதி வருபவர் சர்மா அவர்கள். நாம் கண்டு மயங்கும் மின்னலைப் பற்றியும். கேட்டு நடுங்கும் இடியைப் பற்றியும் சுவையுடன் கூறுகின்றார் இக்கட்டுரையில்.*

# மின்னலு
# முழக்கமும்

**அ. க. சர்மா**

மனிதன் தோன்றிய நாள்முதலாக இயற்கையைப் பார்த்தான், அதற்கு அஞ்சினான், அதைக்குறித்து ஆச்சரியப்பட்டிருக்கிறான். இத்தகைய பயத்தின் விளைவாக இயற்கையின் சக்திகளை வழிபட ஆரம்பித்திருக்கின்றான். அறிவு பக்குவப்படாத காலமல்லவா அன்று! ஆகவே அக்கினி வழிபாடு வருணனுக்குத்துதி, சூரிய வணக்கம், போன்றவை, சமயத்தின் கோட்பாடுகளாக நுழைந்து, காலப் போக்கில் கற்பனைத் திறனினால் விரிவடைந்து, வியாபித்திருக்கின்றன. அவை தற்சமயம் நமது பண்பாட்டின் சின்னமாய், கலாச்சாரத்தின் அடையாளமாய், நிலவி வருகின்றன. நமது சமயச்சடங்குகளில், அக்கினி வழிபாடு இன்றியமையாததாகிவிட்டது. வானம் பொய்த்து விட்டால் வருணனுக்குத்துதி செய்தல், இன்றும் நம்மிடையேயிருக்கின்றது. சூரியன் உயிரும், ஒளியும், தரும் ஒரு தெய்வம் என்ற வேதவாக்கிற்கு ஏற்ப, சூரிய பொங்கல், சூரியநமஸ்காரம் போன்றவை, தமிழர்தம் திருநாட்களாகி விட்டன. இயற்கையை உணரும் இன்று, விஞ்ஞானம் ஓங்கிவளர்ந்திருக்கின்ற இன்று இத்தகைய இயற்கைச் சக்திகளை, நிகழ்ச்சிகளை, ஆராய்ந்து விளக்கங்கூறுவது மரபு ஆகிவிட்டது. இக்கட்டுரையிலே, மின்னலையும், இடியையும் விளக்கத்திற்குரியவையாக எடுத்துக்கொள்வோம்.

மின்னலும் இடியும், தமிழிலக்கியங்களிலே உவமைப்பொருட்களாகப் பலகாலம், பலவாறாக எடுத்தாளப்பட்டுள்ளன. மின்னிடையாள்; மின்னலெனவந்தாள், எனப் பெண்ணைக் குறிக்கவும்; ஆணின் காம்பீர்யத்வனிக்கு இடியை எடுத்துக்காட்டாகக் கையாளவும், புலவர்கள் முற்பட்டிருந்தார்கள். மேலும் "இடியேறுண்ட நாகம் போல", "மின்னாமல், முழங்காமல்", என்ற தொடர்கள் இன்றும் சாதாரணப் புழக்கத்திலுள்ளன.

இயற்கையின் ஒரு நிகழ்ச்சியே மழை பெய்தல். சாதாரண பள்ளி மாணவன் ஒருவனை விழித்து, "மழைஎப்படியுண்டாகின்றது? எனக் கேட்

டால், "பூமியின் மேற்பரப்பிலுள்ள நீர், சூரிய வெப்பத்தினுல் ஆவியாகி மேலெழுந்து; மீண்டும் குளிரும் போது மழையாகப் பெய்கின்றது." என்று கூறுவான். இதேவினுவை, ஆதிகால மாணவனிடம் கேட்டிருந்தால், "மழைக்கடவுளாகிய இந்திரன் கோபங் கொண்டுள்ளான். அவனுக்குப் பிரீதி செய்தால், வருணனையும், சப்தமேகங்களையும் மழை பெய்யுமாறு ஆக்ஞாபிப்பான்" என்ற விடையையேயளிப்பான். வெண்ணெயுண்ணும் கண்ணன் வாழ்ந்த காலத்தே, கோகுலத்தில் இந்திரவிழா கொண்டாடப் படாதொழிந்தவுடன் இந்திரன் கோபம் கொண்டு சப்தமேகங்களில் வருணனைப்புகுந்து கொண்டு. மழை பொழிந்து கோகுலத்தை அழித்துவிடக் கட்டளையிட்டான், அதன் விளைவாக மழை பொழிந்து கோகுலம் அல்லற்பட. கண்ணன் மலையைப் பெயர்த்து மக்களைக் காப்பாற்றிய படியால் 'கோவர்த்தனன்'' என்ற பெயரைப் 'பெற்றுனென, நாம் கண்ணன் கதையிற் படித்திருக்கிறேமல்லவா? அன்றைய அறிவிற்கும்,இன்றையஅறிவிற்கும் எவ்வளவு வேற்றுமை!

நூற்றுக் கணக்கான வருடங்களாக மனிதன் மின்னலைப் பார்த்து பிரமித்துள்ளான். கடவுள் அல்லது, தேவதைகள் கோபம் கொண்டதன் விளைவாகவே, மின்னல் உண்டாகின்றது; இடி இடிக்கின்றது என்று நம்பியிருந்தான். மின்னல் சாதாரண மின்சக்தியே, என்ற உண்மையை முதன் முதலாகக் காட்டியவர் 18ஆம் நூற்றுண்டிலேஅமரிக்காவில்வாழ்ந்த விஞ்ஞானியும், ராஜதந்திரியுமான பென்ஜமின் ப்ராங்கிலின் (Benjamin Franklin) என்பவர் ஆவர். சாதாரண மின்சக்தியே மின்னல் என அவர் காட்டினுர். இடி முழக்கத்தோடு மழைபொழிகின்ற தினத்தைத் தனது பரிசோதனைக்குரிய தினமாகக் கொண்டார். மழை பெய்துமுடிந்து, மின்னல் தொடர்பாயிருக்கின்ற வேளையில், ஒரு காற்றுடியைப் பறக்கவிட்டார். காற்றுடி மின்சக்தியை வானத்திலிருந்து கவர்ந்து; கயற்றின்வழியே பூமியை நோக்கிக் கடத்தியதன் விளைவாக, ஒரு பொறி உண்டாயிற்று.

ஏறத்தாழ கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த, காளிதாச மகாகவி முகிலின் அமைப்பை, இன்றைய விஞ்ஞானி கண்டறிந்தது


**கலைச்செல்வி**
**மாத இதழ்.**

சந்தா விபரம்
தனிப்பிரதி: சதம் 30
ஆண்டுச் சந்தா: ரூ. 4.
(மலருடன்)

சந்தாவைப் புதுப்பிக்காத நேயர்கள், தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளும்படி கோரப்படுகிறுர்கள்.

விபரங்களுக்கு:
நிர்வாகி,
கலைச்செல்வி,
நந்தரோடை, சுன்னுகம்.



## பன்னெடுங்கால
**பாவனைக்கும்**
**பாதுகாப்பிற்கும்**
பாங்கானது.

தேய்வைக்
கட்டுப்படுத்தும் தரமான
**மின்டெக்ஸ்**
உற்பத்திகள்.

ஏராளமான
பிறேக் மற்றும்
கிளட்ச் லைனிங்ஸுகளை
வழங்குகின்றது.

மின்டெக்ஸ் பிரேக்கரைட் செட்டுக்கள்
மின்டெக்ஸ் செர்வீஸ் பிரேக் பகுதிகள்


...மின்டெக்ஸ் பாதுகாப்புடைய பிரேக்குகளில்

**நம்பிக்கை வையுங்கள்**

# வாக்கர் சன்ஸ் அன் கம்பனி
**லிமிட்டெட்**

கொழும்பு, பண்டாரவளை, காலி, யாழ்ப்பாணம்
கண்டி, மர்த்தறை, நுவரெலியா, இரத்தினபுரி,
தலவாக்கொல்லை.

கல்யாணப் பரிசுகள்
பிறந்த நாள் பரிசுகள்
தீபாவளி, நத்தார், புதுவருடப் பரிசுகள்



ஆகியவற்றை

**எங்களிடம்**
**தெரிவு செய்யுங்கள்**

உங்கள் மன விருப்பத்திற்கும் பண வசதிக்கும் ஏற்ற பல வித பொருட்கள் எம்மிடம் உண்டு.

யாழ்ப்பாணத்தில்
ரேயல் தலைமுடிகள்
ரேயல் சுவர்க்கடிகாரங்கள்
ஷெவ்வேர்ஸ் பவுண்டன் பேனுக்கள்
ஏக விநியோகஸ்கர்கள்

# பான்ஸி பலஸ்

தந்தி: Fancyware.
போன்: 239
27, மெயின் வீதி — யாழ்ப்பாணம்,

போலக் கூறுகின்றார். இறவாப்புகழ் பெற்ற தமது "மேகதூதம்" என்ற வடமொழிக் காவியத்தின் பூர்வ பாகத்தே, மேகம், தூமம் (புகை) ஜோதி (ஒளி) சலிலம் (நீர்) மருத் (காற்று) முதலியவற்றாலானது எனத் தனது காவிய நாயகன் யக்ஷன் மூலமாகக் கூறுகின்றார். அவர் தம் நுண்ணறிவு எவ்வளவு சிறந்தது.

நமது மாணவன் விளக்கங் கூறியது போன்று, மழைத்துமிகள் உண்டாகின்றன, இத்துமிகளே (சிலசமயம், தூசுத்துணிக்கைகளுடன் சேர்ந்து) முகில்களைப் பிறப்பிக்கின்றன. இத்துமிகள், மின்னேற்றத்தைப் பெறும் பொழுது, மின்னலுண்டாகின்றது. உராய்வினாலேயே (By friction) மின்னேற்றமுண்டாகின்றது, என நம்பப்படுகின்றது. சூடான காற்றுத் தொகுதி, கீழ்நோக்கியிறங்கும் குளிரான காற்றுத்தொகுதிக்கெதிராக மேலுறும் பொழுது, உராய்வு உண்டாகி, மின்னேற்றம் பிறப்பிக்கப் படுகின்றது. இதை நாம் அன்றாடவாழ்க்கையின் ஓர்எடுத்துக் காட்டினால் நன்கு புரிந்து கொள்ளலாம். எண்ணெய்ப்பற்றற்றதும், நன்கு உலர்ந்துள்ளதுமான தலை மயிரை நன்குலர்ந்த சீப்பினால்வாரி, பின் அச் சீப்பை, சிறிய கடதாசித்துண்டுகளினயலிலே, கொணரும் பொழுது அக்கடதாசித் துண்டுகள் சீப்பினால், கவரப்படுவதைப் பார்க்க, மிகவும் ஆச்சரியமாயிருக்கும். மின்னேற்றத்தில் இரு வகைகளுள். ஒன்று நேர் மின்னேற்றம் (Positive Electricity) எனவும் மற்றது எதிர் மின்னேற்றம் (Negative Electricity) எனவும் பெயரிடப்பட்டுள்ளன. இவை ஒன்றையொன்று கவரும் இயல்புள்ளன. கவர்ச்சியின் விளைவாக அவை ஒன்று படுமியல்புள்ளன. சீப்பை நோக்கிக் கடுதாசித் துண்டுகள் கவரப்படுவது இத்தகைய நிகழ்ச்சியேயாம்.

முகிலின் அடிப்புறத்தேயுள்ள நீர்த்திவலைகள் பெரும்பாலும் எதிர் மின்னேற்றத்தைச் சுமந்துள்ளனவாயிருக்கின்றன. மேற்புறத்தேயுள்ள நுண்ணிய பனிக்கட்டிகள் (இவைகள் குளிரினால் நீருறைவதனால் உண்டாகின்றன.) நேர் மின்னேற்றத்தைச் சுமந்திருக்கின்றன! அல்லது மின்னேற்றம் பெற்ற ஒரு முகில் பூமியின் அயலிலேயிருந்தால், தரை முகிலின் மின்னேற்றத்திற்கு எதிர் மாறான மின்னேற்றத்தைப் பெறுகின்றது. ஏனெனில் "ஒரு பொருளின் ஒருதன்மைத்தான மின்னேற்றம், அதனயலிலேயுள்ள பிறிதொரு பொருளை எதிர்மாறான மின்னேற்றமுடையதாக ஆக்கும்." இந்நிகழ்ச்சி விஞ்ஞானத்திலே "தூண்டல்' (Induction) என அழைக்கப்படும்,

ஒரு முகிலின் எதிர் மின்னேற்றத் துகள்கள், மறுமுகிலின் நேர் மின்னேற்றத் துகள்களை நோக்கி (கவர்ச்சியின் விளைவாக) விரைந்து' பாய்கின்றன. காற்றில் ஒரு சில பாதைகளே மின்னோட்டம் பாய்வதற்கு வசதியுள்ளன. நேர், எதிர் மின்னேற்றங்கள் ஒன்றையொன்று சந்திக்கும்பொழுது, தொடர்பான பொறிகள் தோன்றுகின்றன. இத்தகைய பொறிகளின் ஒளிவீச்சே மின்னலாகும். மின்னல் பெரும்பாலும் (முகிலிலிருந்து தரையை நோக்கி) கீழ்நோக்கிச் செல்லுமியல்புள்ளது.

மின்னல் நிகழ்ந்தவுடனேயே பெரும்பாலும் இடிமுழக்கமும் நிகழுகின்றது. ஒளி, ஒலியைக் காட்டிலும் வேகமாகச் செல்லுவதாலேயே மின்னல் வீச்சின் சிலவிநாடிகளின் பின்பு இடிமுழக்கம் கேட்கின்றது. மின்னல் வீச்சு அயலிலேயுள்ள காற்றைச் சூடாக்குகின்றது. அப்பொழுது அக்காற்றுச் சடுதியாக சூரியனின் மேற்பரப்பு வெப்பத்தைப்போன்ற வெப்பத்தையடைகின்றது. இத்தகைய சடுதியான வெப்பம், சூழவுள்ள காற்றை வேகமாக விரிவடையச் செய்கின்றது. அதன் விளைவாகக் காற்று அதிர்வடைகின்றது. (Vibrates) இவ் வேகமான அதிர்வே "இடிமுழக்கம்" ஆகும். பத்து மைல்களுக்கப்பால் இடிமுழக்கம் நிகழ்ந்தால் பெரும்பாலும் அது கேட்காது. எனினும் முழக்கத்தின் தன்மையைப் பொறுத்தே அது தொலைவிலுள்ளவர்களுக்குக் கேட்கின்றது, அல்லது கேட்காதிருக்கின்றது. ஒளி, ஒலியைக் காட்டிலும் வேகமாகச் செல்லுகின்றது என்று குறிப்பிட்டோமல்லவா? விநாடியொன்றிற்கு ஒளி 186,000 மைல்கள் செல்லுகின்றதாகையால், மின்னலை உடனேயே பார்க்கலாம். ஒலியலைகள் விநாடியொன்றிற்கு ஐந்திலொரு மைலே செல்லுகின்றது. எனவே மின்னலை நாம் பார்த்தபின்பே இடிமுழக்க ஒலி நமக்குச் சில விநாடிகளின் பின்பு கேட்கின்றது. மின்னலை நாம் பார்த்ததிலிருந்து இடிமுழக்க ஒலியை நாம் கேட்கும்வரையேயுள்ள விநாடிகளை நாம் எண்ணுவோமாயின் மின்னல் எவ்வளவு தொலைவில் நிகழ்ந்துள்ளது எனக் கணக்கிட்டு விடலாம். இரண்டிற்கும் இடைப்பட்ட நேரம் பத்து விநாடிகள் ஆயின் மின்னல் இரண்டு மைல் தொலைவில் நிகழ்ந்திருக்கும். அது 25 விநாடிகள் ஆயின் தொலைவு 5 மைல்கள் ஆகும்.

சிலசமயங்களில் இடி முழக்கம் வெகு தொலைவில் நிகழுவதால் அது கேட்பதில்லை. சிலசமயங்களில் உருண்டோடும் முழக்கமாகக் கேட்கும். மின்னல் வீச்சுப் பெரியதாயிருப்பதாலும், தொலைவிலிருந்து சப்தத்தை நாம் கேட்பதாலும் இடி முழக்கம், பிற முகில்கள், மலைகள், காற்றடுக்கு முதலியவற்றின் மீது பிரதிபலித்து விடுவதாலும் உருண்டோடும் சப்தத்தை நாம் கேட்கிறோம்.

இடி முழக்கத்தோடு கூடிய மின்னற்காலங்களிலே, குறிப்பாக அப்பொழுது மழைபெய்யுமாயின், வெளியே உலாவுவது, மிகவும் ஆபத்தானது. மின்னல் தாக்கி மக்கள் இறந்தார்களெனவும், மரங்கள் பற்றியெரிந்தன வெனவும், கட்டிடங்களின் மீதும் இடிவிழுந்த தெனவும், நாம் பத்திரிகைகளிற் படித்திருக்கிறோமல்லவா? மின்னல், இடி முதலியவை, இயற்கை நிகழ்ச்சிகளாயினும், அவை "பயங்கர" நிகழ்ச்சிகளாகவும்மாறுகின்றன வல்லவா?

(இடி) மின்னல் ஆகியவற்றால் தாக்கப்பட்டு அழிவு ஏற்படாதிருக்க, வானளவாயுயர்ந்துள்ள கட்டிடங்களில், மூன்றுகிளைகளையுள்ள, உலோகத்தாலான (சூலம் போன்ற) ஓர் அமைப்பை நிறுவி அதன் அடிப்புறத்தைப் பூமியுடன் செம்புக்கம்பியினால் இணைத்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம், இத்தகைய ஓர் அமைப்பு

மின்னோட்டத்தை விரைவில் பூமியிடம் கடத்திவிடும். எனவே இத்தகைய அமைப்பையுள்ள கட்டடம் மின்னலாற்றாக்கபடா திருக்கிறது. மக்கள், மின்னலுடன் கூடிய மழைக் காலங்களிலே, வெளியிற் செல்லும் பொழுது, அவர்களும், மின்னோட்டத்தைக் கடத்தும் இயல்புடையவர்களாதலின் ; மிகவும், எளிதில் மின்னலாற் றாக்கப்படுவார்கள் . சிலசமயம் உயிரேபிரியும் கொடும், ஆபத்தும் நிகழும். அத்தகைய வேளைகளில், மக்கள் பச்சை மரங்களியனலிலே நிற்கக்கூடாது. ஏனெனில் ஈரமுள்ள மரங்கள். மின்னோட்டத்தைக் கடத்துகின்றமையின், அத்தகைய மரங்களினயலிலேயுள்ள மக்களும் தாக்கப்படுவர்' அப்படியான வேளைகளில். மரங்களில்லாத, திறந்த வெளியில், படுத்துவிடுவதுதான் மின்னலாற்றாக்கப்படும் ஆபத்தைத் தவிர்ப்பதற்குரிய சிறந்தமார்க்கம்.

...ன்று இயற்கைக்கு அஞ்சினான் மனிதன். இயற்கையைப் பார்த்து வியந்தான் : அறிவுவளர்ந்தது. திருந்திய சிநதனையுடன் இயற்கையை ஆராய ஆரம்பித்தான். இவ்வாராய்ச்சிகள் மனித வாழ்க்கையையே புதியபாதையில் திருப்பி விடுமளவிற்கு விஞ்ஞானமாகப் பரிணமித்தது. இயற்கைச்சத்திகளை யாராய்ந்து, அவற்றைக் கட்டுப்படுத்து மளவிற்கு அறிவுவளர்ந்தது. இயற்கைச்சக்திகளை, பயனுள்ள, புதியனவற்றைப் பிறப்பிக்க உபயோகிக்கத் தொடங்குகின்றான், இத்தகைய ஆற்றலும் அறிவும் மேலைத்தேயங்களிலே மிகவும் முன்னேறியுள்ளன, சாதாரண மின்னல், இடிமுழக்கம் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளைப்பற்றி நம்மவர்களறிந்தது என்னவோ மிகவும் சொற்பந்தான் !

———




## தமிழ் நாட்டுத்தொழிலை ஆதரியுங்கள்

உங்கள் வீட்டுப் பாவனைக்குத் தேவையான

# அலுமினியப் பாத்திரங்களை

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.

ONE DOLLAR

DOLLAR BRAND

இந்த

## டொலர் டிரேட் மார்க்கைப்

பார்த்துத் தெரிவு செய்யுங்கள்.

அவை

பார்க்கக் கவர்ச்சியானவை. உறுதி மிக்கவை

பாவனைக்கு ஏற்றவை. உத்தரவாதமானவை.

பிரகாசம் பொருந்தியவை.

## யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்திலுள்ள

## நமது தொழிற்சாலையில்

இவை தயாராகின்றன.

# டொலர் கோர்ப்பரேஷன்,

**14, டாம் வீதி, கொழும்பு-12.**

போன்: 6910

# இலக்கியக் கடிதங்கள்-3

226, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம், 1-8-58.

பேரன்புமிக்க திரு. சோம காந்தன் அவர்களுக்கு,

வணக்கம். தாங்கள் 29-7-58 ல் எழுதிய அருமையான கடிதம் கிடைக்கப் பெற்றேன். 'அருமையான' என்ற சொல்லை நெஞ்சினால் உணர்ந்து கொள்ளுங்கள். உங்கள்கடிதத்தைப் பார்த்த பிறகு **மாதுளம்** பழம் என்னுடையமதிப்பிலேயே சற்று உயர்ந்து விட்டது!

சிலநாட்களுக்கு முன்புதான் **காதலிக்குக் கடிதம்** பார்த்தேன். நெஞ்சிலிருந்து வந்த கடிதம், அதனால்தான் நெஞ்சைத்தொட முடிகிறது. அதன் கருத்தும் நடையும் எனக்கு மிகவும்பிடித்தவை. 'ஈழத்துச்சோமு எழுத்துலகுக்கு உரியவர்தான்' என்று நினைத்தேன். பிறகு '**கலைச் செல்வி**'யிற் புதுமைப்பித்தனைப் பற்றி எழுதியது பார்த்தேன். 15--16 வருடங்களுக்கு முன்னால், நான் எழுத ஆரம்பித்த காலத்தில் எனது இலட்சியமாக நின்றவர் புதுமைப்பித்தன். 'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற தொகுதி எனக்குப் பொக்கிஷமாக இருந்தது. அவருடைய பல கதைகளைச் சாயலாகக் கொண்டு சிறுகதைகள் அநேகம் எழுதினேன். அவற்றில்சில **ஈழகேசரி**யில்வந்ததாக ஞாபகம். அதே புதுமைப்பித்தனை நீங்களும் தலைமேல் தூக்கி வைத்திருப்பதைக் காண மகிழ்ச்சி. ஆனால் ஒரு 'மாறுபாடு'ம் உண்டு. புதுமைப்பித்தனைப் பற்றி எழுதிய வே[illegible] பலரும் உங்களைப் போலவே 'பொன்னகரம்,' 'தெருமுனையில் ஒரு பெண்...' என்று ஆரம்பிக்கும் கதை ஆகியகதைகளைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்கள். அந்தக் காலத்தில் நானும் அப்படித்தான் நினைத்திருந்தேன். ஆனால் இப்போது சிந்திக்கும் போது அவற்றை ஒருபக்கம் ஒதுக்கிவிடவே விரும்புகிறேன்! புதுமையான கற்பனைதான்; ஆனால் எங்கள் சமூகத்துக்கு வேண்டாத கற்பனை என்றுதான் கருதுகிறேன். தன்னுடைய மனைவி விபசாரம் செய்து தனக்குக் கஞ்சி ஊற்றுவது ...அது கஞ்சியா? விஷமல்லவா அவனுக்கு? ஏதோ ஒரு 'கிறுக்கில்' இப்படிக் கதைகளைப் புதுமைப் பித்தன் எழுதிவிட்டாரென்று நினைக்கிறேன்.

உங்கள் கடிதத்தின்கடைசிப் பகுதி: "முகஸ்துதி, போலிப் புகழ் மொழி இவற்றில் எனக்கு நம்பிக்கையில்லை. பிறர் செய்வதையும் நான் விரும்பவில்லை"— இந்த வார்த்தைகளை என்னுடைய நெஞ்சிலிருந்துதான் நீங்கள் திருடி விட்டீர்கள்! உங்கள் நீண்ட கடிதத்தில் இந்த இரண்டு வரிகள் தான் எனக்கு மிகவும் பிடித்தவை. புகழாளர், அறிவாளர், பணவாளர் என்பவற்றுக்காக என் மனம் யாரையும் விரும்புவதில்லை. அதற்கு 'மனிதர்'களைத்தான் பிடிக்கும்.

அன்புள்ள,
தி. ச. வரதராசன்.

# ஆசிரியர் சொன்ன கதை

க. ஞா. அல்போன்ஸ்
கற்கோவளம்
பருத்தித்துறை.

அப்போது நான் ஐந்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். எங்கள் எழுத்துப்பாட ஆசிரியர் வந்து குதிரையைப்பற்றிப் பத்து வசனம் எழுதும்படி கூறினர். எங்கள் வகுப்பிலுள்ள அனைவரும் எழுதத்தொடங்கினர்கள்; நானும் எழுதத்தொடங்கினேன்,

குதிரை பல நிறங்களில் காணப்படும். குதிரை கனைக்கும். குதிரைக்கு நான்கு கால்களுண்டு. குதிரைக்கு இரு கண்களுண்டு. குதிரைக்கு ஒரு வாயுண்டு, குதிரைக்கு ஒரு மூக்குண்டு. குதிரைக்கு இரு கண்களுண்டு என்று இப்படியே குதிரை குதிரை என்று தொடங்கி பத்து வசனங்கள் எழுதி ஆசிரியரிடம் காண்பித்தேன். அவர் அதை வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் கேட்கும்படியாக உரக்க வாசித்தார். வாசித்து முடித்தபின்பு ஓர் கதை சொன்னர்.

"ஒரு கோவிலிலே ஓர் துறவி இருந்தார். அவருக்கு ஓர் பணியாள் இருந்தான். அவர் வதியும் இடம் பரிசுத்தமானதாகையால் முனிவர் தனது பணியாளருக்கு ஒரு கட்டளை பிறப்பித்திருந்தார். அதாவது கோவிலைப்பற்றி என்ன சொன்னலும் அதற்கு முன்னுக்குத் "திரு" என்ற சொல்லை உபயோகிக்க வேண்டும் என்பதே. உதாரணமாகக் கோவில் என்பதற்குத் திருக்கோவில் என்று கூறவேண்டும். இதன்படியே அப்பணியாளனும் ஒழுகிவந்தான்.

ஓர் நாள் அத்துறவி தனது நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருக்கும்போது அப்பணியாளன் ஓடோடி வந்து அத்துறவியிடம், "திருக்கோவிலுக்குள் ஓர் திருநாய் புகுந்து திருத்திருவலையிலுள்ள திருத்தேங்காயை எடுத்துக்கொண்டு திருத்தெருவால் ஓடியது. நான் ஓர் திருக்கல்லை எடுத்து எறிந்தேன். அது 'திருளொள்', 'திருளொள்' என்று கத்திக்கொண்டே ஓடியது என்று கூறினன்." ஆசிரியர் இப்படிக் கூறிவிட்டு மாணவர்களை நோக்கினர். மாணவர்கள் சிரிப்புடன் என்னை நோக்கினர்கள். நான் வெட்கத்துடன் தரையை நோக்கினேன்

கலைச்செல்வி விற்பனையாளர்கள் :

**யாழ்ப்பாணம்**
ஸ்டோர்ஸ்
139, நிக்கஷோயா றேட்,
நத்தோட்டை.

**கே. ஏ. நடராஜா**
87, நுவரெலியா வீதி,
பரடேகா ( கம்பளை )

ALWAYS INSIST ON

# Kanagaligams Cigars

சுருட்டுகளிலே
மிகவும் திறமானது
ருசிகரமானது
காரம், மணம், குணம்
ஆகியவை நிறைந்தது
சிறந்த புகையிலையினுல்
திறமான தொழிலாளரால்
தயாரிக்கப்படுவது.

# கனகலிங்கம் சுருட்டுகளையே

எப்பொழுதும் பாவியுங்கள்

ஒருமுறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

## KANAGALINGAMS

No. 17, St. John's Road Colombo

Phone: 5883 Cables: KANCIGARS

எங்கும் பிரசித்தி பெற்றவை!

எல்லோரும் விரும்பிப் பாவிப்பவை!!

சோம்பலைப் போக்கி உற்சாகத்தை ஊட்டுபவை!!!

எஸ். எம், கே. **S. M. K.** PATTU THREAD BEEDIES பட்டுநூல் பீடிகள்

உயர்ந்தரக நிம். 1 அக்கூள் புகையிலையினால்
அனுபவமுள்ள தொழிலாளர்களைக்கொண்டு
தயார்செய்யப்பட்டது.

**காரம் மணம் குணம்**

நிறைந்த

**எஸ். எம். கே. பட்டுநூல் பீடிகளையே**

எல்லோரும் பாவித்து ஆனந்தமடைகிறார்கள்.

ஏக விநியோகஸ்தர்கள் :

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

102, 102 7/1, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு

உரிமையாளர் :

**ச. மு. கனகரத்தினம்**

களபூமி, காரைநகர்.

யாழ்ப்பாணத்தில் ஏஜன்ட் :

**என். எம். சுல்தான் முகமத் ஹஜ்ஜியார்** அன்ட் பிரதர்

பெரியகடை, **யாழ்ப்பாணம்**

இலக்கிய விமர்சகனுக்கு இருக்கவேண்டிய நடுநிலைமையிலிருந்து இம்மியும் வழுவாது நின்று இலக்கியப்பணி புரிந்து வருபவர் நண்பர் கைலாசபதி அவர்கள். "தினகரன்" இதழின் ஆசிரியராக இருந்த காலத்தில் அவர் தோற்றுவித்து ஊக்குவித்த எழுத்தாளர்களையும், செய்துவந்த இலக்கிய சேவைகளையும் எவரும் மறக்க முடியாது. இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இன்று தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றுமிவர் இக்கால இலக்கிய விமர்சனம்பற்றித் தெளிவுடனும், உறுதியுடனும் இக்கட்டுரையிற் கூறுகின்றார்.

# பொருள் மரபும் விமரிசனக் குரல்களும்

— க. கைலாசபதி —

"காவிய இலக்கணத்தை நிர்ணயிப்பதில், பாரததேசத்து இலக்கண ஆசிரியர், நமக்குத் தெரிந்த மட்டில் விவரியாமல் விட்டுவிட்ட சில அம்சங்களை மேனாட்டு இலக்கண ஆசிரியர் விஸ்தாரமாக விவரித்திருக்கிறார்கள். ...... மேனாடுகளில் அரிஸ்தோத்தலன் காலம் முதற்கொண்டு இலக்கண நூலாசிரியர் காவிய அமைப்பைப் பற்றிப் பெரிய பெரிய ஆராய்ச்சிகள் வெளியிட்டிருக்கிறார்கள். நம்மவர் காட்டிலுள்ள மரங்களைத் தனித்தனியே கவனித்துக் கொண்டுவந்து அரணியத்தை மறந்து விட்டார்கள். மேனாட்டவர் மரங்களைக் கவனித்ததோடுகூட அரணியத்தைப் பற்றியும் விசேஷமான ஆராய்ச்சிகள் செய்துள்ளார்கள்.'

—கம்பராமாயண ரசனை
வ. வே. சு. ஐயர்.

ஏறத்தாள நாற்பது வருடங்களுக்கு முன் 'வீரவிளக்கு' வ.வே.சு. ஐயர் இலக்கிய விமர்சனம் பற்றிச் சில கருத்துக்களைக் கூறினார். தமிழிலே இலக்கிய விமரிசனத்தின் 'தந்தை'' எனப் பொதுவாக இலக்கிய இரசிகர்களால் கொள்ளப்பட்டு வரும் அறிஞர் ஐயர் அவர்கள் நாற்பது, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கூறிய கருத்துக்கள் அவருக்குப் பின் வந்த இலக்கிய விமர்சகருக்கு அரும்பெருந் துணையாக இருந்து வந்துள்ளன என்பதில் ஐயமில்லை. எனினும் கால வளர்ச்சியில் ஐயரின் கருத்துக்கள் சில, தவறான உப கருத்துக்களையுந் தோற்றுவித்துள்ளன என்றே தோன்றுகிறது. அதுஐயரின் தவறு அன்று; தொல்காப்பியச் சூத்திரங்களைப் பல்வேறு கோணங்களிலிருந்து உரையாசிரியரும் பிறரும் அணுகியதுபோலவே, இலக்கியத்தில் 'ஈடுபாடு'ள்ள பலரும் வ.வே.சு. ஐயர் கூற்றுக்களைத் தத்தம் கருத்துக் குறைபாடுகளைச் சமன் செய்வதற்காக உபயோகிக்கலாயினர்.

வ.வே.சு. ஐயரையும், அவரைப் பின்பற்றி வந்த ஒரு சிலரையும் மட்டுமே கற்றதனாலோ என்னவோ இரண்டு தவருன ஆனல், திட்டவட்ட மான கருத்துக்கள் தமிழிலக்கிய இரசிகர் சிலரிடையே நிலவலாயின.

(அ) மேனாட்டவர் இலக்கிய விமர்சனத் துறையிலே முன்னேறி யுள்ளனர் என்று எடுத்துக்காட்டிய ஐயர் அவர்களுடனேயே, தமிழில் இலக்கிய விமரிசனம் தொடங்குகிறது

(ஆ) இலக்கிய இரசனை என்பது எக்காலத்தும் மாருதிருக்கும் ,அறிவு நிலை. அது புனிதமானது.

இவ்விரண்டு கருத்துக்களில் முன்னது வரலாற்றுப் பெருமை சம்பந்தமானது. நிகழ்கால இலக்கிய விமர்சனப் போக்கைப் பெரிதும் பாதிக்காதது. ஆனல் பின்னதின் விளைவு பாரதூரமானது. இக்கால "விமர்சகர்" பலரைத் திசைமாற்றிச் செல்லும் தன்மை வாய்ந்தது.

மேனாட்டவர் கவிதை (காவிய) அமைப்பைப் பற்றிச் சிறப்பான ஆராய்ச்சிகள் செய்துள்ளனர் என்று வ.வே.சு. ஐயர் கூறியதை வைத்துக் கொண்டு இலக்கியத்திலே அமைப்பு அல்லது வடிவமே அடிப்படையானது என்று தலைதடுமாறும் 'இரசிக விமர்சகரையே' நான் இங்கு கருதுகிறேன். "விஷயம் பிரதான மில்லை; வடிவமே பிரதானம். யாது என்பதல்ல சிறந்த அம்சம்; எப்படி என்பதே சிறந்த அம்சம்." இது இரண்டாவது கருத்தின் தருக்க ரீதியான பெறு பொருள். இன்று பொதுவாகத் தமிழகத்திலும் சிறப்பாக ஈழத் தமிழகத்திலும் மலிந்து காணப்படும் இலக்கிய "விமர்சன"க் குரல்களில் நாம் திரும்பத் திரும்பக் கேட்கும் ஒலி இதுதான். இக்குரல்களின் ஓலத்தைக் கேட்கும் பொழுதெல்லாம் "இலக்கிய விமர்சனம்': என்று கூறிக்கொள்பவர்கள் யாது கருதுகிருர்கள் என்னும் அடிப்படைக் கேள்வி தோன்றுகிறது. இலக்கியத்தை நன்கு விளங்கிக் கொள்ளவும் அதுபற்றிய உணர்வையும் சிந்தனையையும் வளர்க்கவும் உதவவேண்டிய இலக்கிய விமர்சனக் கருவியானது இலக்கியத்திலே எரிந்தகட்சி' 'எரியாதகட்சி' ஆட எவ்வாறு பயன் படுத்தப்படுகிறது என்பதைக் கண்டு கொள்வது பயன் தரும் முயற்சியாகும்.

இலக்கியத்திலே வடிவமே முக்கியம் என்னும் கருத்தில் ஆரம்பிப்பவர் ஒருவர் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறி விடுகிருர்; பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத நிலையிலே பொருள் இன்றி யமையாததன்று என்னும் கருத்துக்களை விடுகிறது. பொருள் இன்றியமையாததன்று என்னும் நிலையிலே அதனை இலக்கியத்திலே தகுந்தபடி இனங்கண்டு கொள்ளவேண்டும் என்னும் தேவையும் ஆசையும் இல்லாமற்போகிறது. அத்தகைய ஆசையும் தேவையும் இல்லாமற்போகவே அது அலட்சிய மனோபாவத்துடன் நோக்கப்படுகிறது. இலக்கியத்திலே பொருள்பற்றிய அலட்சியக்குரலையே இன்று பல இலக்கியரசிகவிமர்சகரின் அவசர எழுத்துப்பிரசங்களிலே நாம் காண்கின்ருேம்; கேட்கின்ருேம்.

பொருள்வளம் பற்றிய தெளிவான பார்வை இல்லாதவருக்கு

வடிவத்தைப் பற்றிய நுண்ணுணர்வு எவ்வாறு அமைய முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியை —சிந்தனையை—பொருளைச் சுமக்கும் அலங்காரமான சகடை யாகவோ, வாகனமாகவோ தான் வடிவம் இருக்கின்றது. வெறும் வாகனத்தால் பயனில்லை. ஆனால் யாராவது இலக்கியத்திலே தெளிவான சில கருத்துக்களை — உணர்வுகளை — சிந்தனைகளைக் கூறிவிட்டால் அவர்கள் பிரசாரகர் என்றும் கட்சிஇலக்கியம் படைப்பவர் என்றும், முற்போக்கு இலக்கிய கர்த்தா என்றும், இறுதியில் இலக்கிய விரோதி என்றும் முழக்கி விடுகிறார்கள் சில விமர்சகர்கள். ''எதையும் இலக்கியத்தில் கூறலாம் அது எப்படிக் கூறப்படுகிறது என்பதே முக்கியம்" என்று, அழகியல் பேசும் ரசிகவிமர்சகர்கள் திடீரென சில இலக்கியப்படைப்புகளில் பொருட் குற்றம் கண்டு ''விலக்கி" வைக்க முனைவதுதான் எனக்கு விளங்க வில்லை. ஆனால் ஒன்று மட்டும்' தெளிவு. இன்று' (ரசிகவிமர்சனம்) படைக்கும் பலருக்கு விமர்சனத்தை பற்றி மட்டுமன்றி இலக்கியத்தை பற்றியே பல ஐயங்களும் தெளிவின் மையும் நிறைந்துள்ளன. அதன் விளைவாகவே இத்துணை முரண்பாடு கள் காணப்படுகின்றன. இவற்றிற்குச் சிகரம் வைத்தாற்போலிருக்கிறது தமிழிலே இலக்கியவிமரிசனம் புதி துஎன்று 'யாவும்அறிந்த' தலைநிமிர் வுடன் கூறப்படும் நம்பிக்கை. சொற்குற்றம் இல்லாவிடினும் பொருட்குற்றம் உண்டு என்று'யதார்த்தவாதம்' பேசிய நக்கீரர் சம்வாதத்திலிருந்து நச்சினார்க்கினியர் உரைவரை பொருள்மரபு, பொருள் மாற்றம், இலக்கியவளர்ச்சி முதலிய னபற்றி எத்தனையோ வாதப்பிரதி வாதங்கள் நடைபெற்று வந்துள்ளன, அவற்றைச்சிறிதேனும் பார்த்தவர்கள் இலக்கியத்தின் தூய்மை கெடுகிறது என்று மேடைப்பேச்சைப் போல ரசிகவிமர்சனம் பெருக்கமாட்டார்கள். அதற்குப் பதிலாக அவமானந்தாங்காது தூக்குப் போட்டுக் கொள் வார்கள்.

———


**When in Jaffna**

Visit

**FANCY HOUSE**

Grand Bazaar, :: Jaffna.

Estd. 1936.

**பெருமைக்குரிய**
**இருபத்தைந்து ஆண்டுகள்!**

சென்ற 25 ஆண்டுகளாக எங்களை ஆதரித்து வந்தவர்கட்கு நன்றியைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் எங்கள் சேவை எல்லோருக்கும் கிடைக்கும் என்பதையும் தெரிவிக்கின்றோம்.

எல்லா ஆங்கில மருந்து வகைகளும் சகாய விலைக்கு எப்போதும் பெற்றுக் கொள்ளலாம்.


**உத்தரவு பெற்ற "உவைன்"**
**வியாபாரிகள்.**

வைத்திய ஆலோசனை பெறுவதற்கு
ஹோமியோபதி டாக்டர் N. ஏகாம்பரம்
அவர்களைக் கலந்து கொள்ளுங்கள்.

# RANY PHARMACY,

# இராணி மருந்துச்சாலை,

கே. கே. எஸ். வீதி, : : சுன்னுகம்.




ஒரு பக்கத்தில் தாய்ப்பாசமும் சகோதர பாசமும்; இன்னொரு பக்கத்தில் நண்பனுக்குச் செய்ய வேண்டிய நன்றிக்கடன். இவற்றுள் சிக்கிய கர்ணன், தன்னை மீட்கும் முயற்சியில் ''க்ஷத்திரியன்'' ஆகின்றான். ஈழத்தின் மிகச் சிறந்த நாடகாசிரியரும், சிறுகதை எழுத்தாளருமான 'இலங்கையர் கோன்' எழுதிய நாடகத்தைப் படியுங்கள்.

[ஆய்ந்தறிந்த ஞானிகளின் மனம்போல கங்காநதி சலசலப்பின்றியும் ஆழமாகவும் அசைந்து செல்கின்றாள். ஆற்றோரம் நீளம் அகலம் இல்லாத பட்டுப் பாய் விரித்தது போன்ற மணலிலே ஒரு இடத்தில் கர்ணன் ஆற்றின் அமைதி போன்ற ஆழமான அமைதியுடன் வெண்பட்டாடை அணிந்து சூரிய நமஸ்காரம் செய்கிறான். அவனுடைய பரந்த ஆண்மை மிகுந்த மார்புஇளம் வெய்யிலிலே அழகாக ஜ்வலிக்கின்றது. அவன் புறத்தே சிறிது தூரத்தில் நடந்து வந்து கொண்டிருந்த குந்திதேவி ஒருகணம் திடுக்குற்று நின்று அவன் வீரத்தோற்றத்தைக்கண்டு அசைவற்று நின்று, பிறகு அவனை நோக்கி நடந்துவந்து, அவன் மேலாடையைப் பற்றிக்கொண்டு அதன் நிழலில் ஒதுங்குபவள் போல் பாசாங்கு செய்து நிற்கிறாள்.]

கர்ணன் : சூரியாய நம ஓம்! நமஓம் சூர்யாய! உலகம் யாவையும் போற்றிக் காப்பாற்றி வளர்க்கும் கடவுளே மண்ணும் உன்னால் மரமும் உன்னால் மனிதனும் உன்னால் மா நிலமும் உன்னால்! உன்னுடைய அருள்இன்றி அணுவும் அசைந்திடுமோ? எனக்கு உன்னுடைய கடாட்சம் கிட்ட அருள் செய்தேவா! என்னுடைய வாழ்வின் ஒரு- ஒரே ஒரு குறிக்கோள் அந்த அர்ச்சுனனை வெல்வதும் கொல்வதும்தான்.

குந்தி: ஆ! கர்ண! கர்ண!! யாது கூறினை?

கர்:(திடுக்குற்று) யார்? குந்தி அம்மையாரா?

குந்: ஆம்.(அழுகிருள்) நீ கொல்லவேண்டும் என்று கூறினையே அர்ச்சுனனை அந்த அர்ச்சுனனுடைய தாய்தான் நான். (சிரித்து) அந்த ஏழை நான் தான்.

கர்: ஆனல் ஏன் என்னுடைய மேலாடையைப் பற்றிக்கொண்டு நிற்கிறீர்கள்?

குந்: நிழலுக்காக (சிரிக்கிருள்)

கர்: பாண்டவர்களுடைய தாயாகிய தங்களுக்குமா நிழல் வேண்டும்? அதுவும் இந்த உதய சூரியனின் வெப்பத்தில் இருந்து மறைவதற்காகவா?[சிரிக்கிருன்]அவன்மழையிலும் பார்க்கத் தண் என்று இருக்கிருன் இந்த உதயவேளையிலே!

குந்: ஆம். அவனுடைய தண்மையும் அறிவேன் வேறு...........

கர்: வேறு?

குந்: அவனுடைய வெம்மையும் அறிவேன் நான். ஆ!அது ஒரு காலம்.

கர்; [சிரித்து]காலம் தாழ்கிறது......தாங்கள் இங்கே இந்த நதி தீரத்தில் என்னைத்தேடி வந்த விஷயம்.........?

குந்: (சிரித்து) எனக்கு ஏதாவது கொடை வழங்கலாம் என்று பார்க்கிருயா கர்ண? நீ தான் கொடை வள்ளல் ஆயிற்றே! யாசித்துக் கேட்பதெல்லாம் யாசித்தபடியே வழங்கும் பெரு வள்ளல் நீ! உன்னுடன் பிறந்த கவசத்தையும் குண்டலங்களையும் இந்திரன் யாசித்தான் நீ அவைகளை உன் உடம்பில் இருந்து அறுத்துக் கொடுத்துவிட்டாய் ரத்தம் சிந்த! (அழுது) பெருவள்ளல் நீ!கொடை கொடுக்கும் பொழுது ஏன் எதற்கு என்று கேட்பது இல்லை உன் தந்தையைப்போல!

கர்:(கோபத்துடன்) தந்தையா? என் தந்தையா? அந்தத் தேரோட்டியா என் தந்தை? அதனுல் தான் எனக்கு 'தேரோட்டிமகன்' என்று பெயர் வந்தது போலும்!

குந்: (விம்மி)இல்லை.

கர்: அது என் விஷயம். ஆனல் தாங்கள் அழுவது ஏன்?

குந்: (விம்மி, விக்கி, வெதும்பி, அழுது)நீ என்னுடைய மகன்! என்னுடைய கன்னி உதரத்தின் முதல் கனி நீ!

கர்: (அலறி) மகாராணி! தாங்கள் சொல்வது என்ன?

குந்: (வினயமாக)நீ என்னுடைய மகன் என்று சொல்லுகிறேனடா.என்னுடைய கன்னிப் பராயத்தின் கனவுகளை எல்லாம் ஒன்ருகவடித்து பிழிந்து சாருக்கி சேருக்கி வீறு படுத்தி விட்டேன் உன்னை! நீ என் மகன்! உன் தந்தை அதோ பவனி வருகிருனே வானமும் வையமும்

உய்ய, நீ வழிபட்டு வருகின்றாயே அந்த ஒளிப்பிளம்பாகிய சூரியன், அவன் தான் உன்னுடைய தந்தை!

கர்: ஆனால் என் தாய்?

குந்: (அழுது) அந்தப்பாவி நான் தான் என்று முன்னரே கூறிவிட்டேனே?

கர்: ஆனால் தாங்கள் அர்ச்சுனனுடைய தாயும் அல்லவா?

குந்: ஆம் அதுமட்டுமா? தர்மமே ஒரு மானிட வடிவம் கொண்டது போன்ற உதிஷ்டிரனினதும், பராக்கிரமமே ஒரு உருக்கொண்டது போன்ற நிகரற்ற உடற்பலம் படைத்த வீமனினதும் தாய் நான்!

கர்: தங்களை என்னைப் பெற்ற தாய் என்று ஏற்றுக் கொள்வதா? அல்லது என்னிடம் கொடை வேண்டும் என்று வந்த ஒரு ஏழை என்று ஏற்றுக்கொள்வதா?

குந்: எப்படியும் ஏற்றுககொள்வாய் என் மகனே!

கர்: இவை இரண்டையும் ஒவ்வொன்றாகப் பார்த்து விடுவோமே! தாங்கள் என்னைப் பெற்றதாயா?

குந்: (அழுது] ஆம்; ஆமடா என் மகனே! நீஎன்னுடையகன்னி உதரத்தில் பூத்த முதல் பூ! என்மகன் நீ! என் கன்னி வாழ்வின் சம்பத்து நீ! என்னுடைய முதல்செல்வம் நீ! என்னுடையசௌபாக்கியம் நீ! என்னுடையகன்னி வாழ்வின் ஏக்கத்துக்கு ஒரு அருமருந்தாக வந்து வாய்த்த ஒரு பாக்கியம் நீ! [விம்மி அழுகிறாள்]

கர்: நான் சாதாரண ஒரு தேரோட்டியின் மகன் அல்ல என்றுகூறி .என் மன


# ஆனந்தா லேகியம்

நிர்: 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தைச் சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல், கால், கை கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்தவாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல் வயிற்றுவலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு. பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம், காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக்குத்து. நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால், மூலவியாதி அடியோடு தொலைந்து போகும் பத்தியமில்லை.

பெரியது விலை ரூ. 5-75. சிறியது விலை ரூ. 3-00.

தயாரிப்பாளர்:

## ஆனந்தா வைத்தியசாலை

174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

தைத் தெளிவடையச் செய்ததற்காக என் மனமார்ந்த நன்றி.

குந்: (அழுது) என்னை அழச் செய்து வேடிக்கைபார்ப்பதற்குத் தானு உன்னை என் முதல் மைந்தனைப் பெற்றேன்? இது தானு உன் வள்ளன்மை? (அழுது) .........அந்த மாயவனுடைய மாயத்தினுல் உன்னேடு உடன்பிறந்த கவச குண்டலங்களை ரத்தம் சிந்த உன்னை யாசித்து வந்த அந்த இந்திரனுக்கு அறுத்துக்கொடுத்து விட்டாயே என் மைந்தா! இனிப்போர் முனையில்உன்னையார்காப்பாற்றுவார்? என் நெஞ்சம் கலங்குகிறதடா!

கர்: அம்மா! என் தாயே என்று தங்களை உரிமையோடு அழைக்கின்றேன். என்னை மன்னிக்கவேண்டும் [சிரித்து] தேரோட்டியின்மகன்என்று பெயர பெற்றிருந்தும் கூட, பெரும். வில்லாளி என்று பெயர் பெற்றுவிட்டேன். இனி அரசபரம்பரையில் உதித்த குந்திதேவியின் மகன் நான் என்று அறிந்த பிறகு என் வில்லாண்மைக்கு ஈடுஏதம்மா?

குந்: ஈடும் எடுப்பும் அற்ற வீரனும் வில்லாளியும் நீ! ஆனுல் நீ என் கன்னி உதரத்தில்பூத்த (அழுது) முதல் பூ— முதல் வீரசிகாமணி என்பதை மறந்து விடாதே!

கர்: அதனுல்?

குந்: எதனுல்?

கர்: அதனுல் தான்? நான் ஒரு சிறந்த வில்லாளியாக இருப்பதினுல்!

குந்: அதனுல் நான் சொல்லுகிறேன் நீ என்னுடன் வந்துவிடேன். உதிஷ்டிரனும், வீமனும் தனஞ்செயனும் நகுலனும் சகாதேவனும் உன்னை அரசபதவியிலே ஏற்றி வைத்து உனக்கு அடிமைகளாக இருப்பார்கள்.

கர்: அம்மா! பழுக்கக்காய்ச்சின நாராசத்தை என் செவிகளில் ஊற்றுவது போல் இந்த வார்த்தைகளைப் பேசுகின்றீர்கள்! இதற்குத்தானு தாங்கள் என்னைத்தேடி வந்தீர்கள்?

குந்: இல்லையடா மகனே;

கர்: ஆனுல் ஏன்? இவ்வளவும் அறிந்த தாங்கள் இதுமட்டும் அறியாதது ஏன்? எனக்குத் தாயும் இல்லை... தந்தையும் இல்லை. (சிரித்து) என்னை வளர்த்தவன் ஒரு தேரோட்டி ......... எனக்குப் பாலூட்டியவள் அந்தத் தேரோட்டியின் மனைவி. எவள் எனக்குப்பாலூட்டினுளோ [கோபமாக] அவள்தான் என்னுடைய தாய்! எவன் எனக்கு அவளைப் பாலூட்ட வைத்தானே அவன் தான் என்தந்தை! (அழுது) ஆனுல் இன்று தாங்கள் ..................

குந்: நான் உன் தாயடா! உண்மையில் நடந்தது எது என்று அறியப்போகிருயா?

கர்: ஆனுல் என்னைப் பாண்டவர்களுடன் சேர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள மாட்டீர்களே!

குந்: இல்லை. உன்னுடைய உண்மைச் சுபாவம் அறிந்துகொண்டேன். உன்னுடைய வீரமும் அறிந்துகொண்டேன் ஆனுல் கேள். அதோ, இந்த மாநிலம் உயர்வதன் பொருட்டு பிழம்பின் சொரூபமாக பவனிவந்துகொண்டிருக்கிருனே ஆதவன். அவனே உன்னுடைய தந்தை!

கர்: ஆம். அது முதலில் கூறிவிட்டீர்களே!

குந்: திரும்பவும்கூறத்தான் வேண்டும். என்னுடைய கன்னிப் பராயத்திலே, நான் என் தந்தையுடன் வாழ்ந்திருந்த பொழுது, ஒருநாள் துருவா

# இதோ நற் செய்தி!

வானைத் தொடும் புகழைப் பெற
தேனைப்போல புனைந்தெழுதிடும்
பேனை மன்னர்களும் புகைப்பது




## யானை ஸ்பெஷல் பீடிகளே!

கருத்தூற, கற்பனையோட, கடமையில் கரிசனையேற்பட
கசந்த வாழ்வில் களிப்புமேலிட கட்டாயம் தேவை

## யானை மார்க் ஸ்பெஷல் பீடிகளே;

❁ தெரிவு செய்யப்பட்ட புகையிலை ❁ தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர்கள் ❁ தேர்ச்சிபெற்ற நிபுணத்துவம்

ஆகிய இவையனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றவை

தயாரிப்பாளர்கள் :—

**யானை பீடிக் கம்பனி**

62. மெசஞ்சர் வீதி கொழும்பு-12

போன் : 7651

புதிய தயாரிப்பாளர்களால்
கைதேர்ந்த அனுபவமுள்ள நிபுணர்களால்
தயார்செய்யப்படுவன !!

அகில இலங்கையடங்கிலும்
வான் வண்டிகள்மூலம் விநியோகம் செய்யப்படுவன.

## நியூசெட்டி கோர்ப்பரேஷன்

தயாரிக்கும்

| | |
|---|---|
| டி. டி. ரி. எண்ணெய் | டி. டி. ரி. பவுடர் |
| பார்லி | பை-காபனேற் |
| எப்சன் சோல்ற் | பேக்கிங் பவுடர் |
| சந்தனாதித் தைலம் | ரேஸ் வாட்டர் |
| சவரப் பவுடர் | நஞ்சுத் திராவகம் |

முதலியவற்றையே
எல்லோரும் விரும்பிப் பாவிக்கின்றார்கள்.

விபரங்களுக்கு:

**166, புதுச்செட்டித் தெரு**
**கொழும்பு—12.**

உரிமையாளர்:

**S. S. கந்தையா,**

312, மெயின் வீதி, பாணந்துறை.

சமுனிவர் என்தந்தையிடம் வந்தார் என்தந்தையின் மாளிகையில் சில நாள் தங்கினர். அப்பொழுது நான் அவருக்கு குற்றேவல் செய்ய வேண்டி நேர்ந்தது ......... துருவாச முனிவர் மனம் மகிழ்ந்தார் ...............

கர் : துருவாச முனிவர்தான் பெரிய கோபசாலி ஆயிற்றே அம்மா!

குந் : அன்று.........அவர் பெரிய கருணை மூர்த்தியாகவும் இருப்பார் சில சமயம்! அதனல் எனக்கு ஐந்து மந்திரங்களை உபதேசித்து, நான் எந்தத் தேவனை விரும்புகிறேனே அந்தத்தேவன் எனக்கு மணாளனாவான்என்றும்கூறினர் அந்தமுனிவர்.

கர் : மகாராணி! அதோ ஆதவன் நடுவானத்திற்கு ஏறிவிட்டான்! ...

குந் : நன்றே கூறினய்...! நான் உடனே அந்த ஆதவனை — அந்த மந்திரத்தை கூறி உபாசித்தேன். அவன் என்முன் நின்றான். அவனுடைய அழகை என்னல் வர்ணிக்கவும் இயலுமா? அவன் அஞ்சாத நெஞ்சன். அவன் என்பால் கொண்ட அன்பின் பலன்தானடா, நீ.

கர் : ஆனல் என்னை ஏன் தாலாட்டி...... சீராட்டி...... போற்றி வளர்க்கவில்லை அம்மா?

குந் : (அழுது) அச்சம் !உலகோர் சொல்லும் பழிக்கு அச்சம்!! நான் மணம் ஆகாத ராஜபுத்திரி, அதனல் அச்சம்!!!

கர் ; (சிரித்து) அரசமரபில் வந்ததும் தன்னுடைய கன்னி உதரத்தில் பூத்த முதல் மைந்தனை ஏற்றுக்கொள்ளாததாய் அரச பரம்பரையில் தோன்றுவதற்கு எப்படி அருகதை உள்ளவள் என்பதைத் தாங்கள் யோசிக்கவில்லையா?

குந் : ஆமாம். யோசித்தேன்— யோசித்தேன்! யோசித்து என்ன பயன்? நான் அப்பொழுது கன்னி மணமாகாத அரசகன்னி ... அதனல் உன்னை ஒரு பேழையில் வைத்து ஆற்றில் மிதக்க விட்டு விட்டேனடா என் கண்மணி! (அழுகிருள்)

கர் : (சிரித்து) இன்றுதான் என்னை மகன் என்று அறிந்தீர்கள் போலும்! (கோபமாக) அந்தத் தேரோட்டி என்னை எடுத்து — பாலூட்டி — தாலாட்டி வளர்த்து என்னை திருதராட்டிரனிடம் ஒப்புவிக்காமல் இருந்தால் — துரியோதனன் என்னிடம் நட்புரிமை பூண்டு என்னைச் சமமாக நடத்தியிராமல் இருந்தால்— என்னைப் பாண்டவர்கள் அவமதித்தபொழுது துரியோதனன் எனக்கு அரசன் என்ற பட்டம் சூட்டியிராமல் இருந்தால் — எனக்கு வில்வித்தை கற்க வேண்டும் என்ற ஆசை வந்திராமல் விட்டிருந்தால் — துரோணரும் கிருபரும் நான் அரச பரம்பரையைச் சேர்ந்தவன் அல்ல என்று எனக்கு வில்வித்தை கற்பிக்க மாட்டோம் என்று கூறிய பொழுது நான் பிராமணனக நடித்து பரசுராமரிடம் வில்வித்தை பயிலாமல் விட்டிருந்தால் ...............—

குந் : கண்மணி! ஏதேதோ பேசுகின்றாயடா! நான் செய்தது தவறுதான். ஆனல் இன்று என்னுடன் வந்துவிடேன்...............

கர் : (கோபமாகச் சிரித்து) அம்மா! இன்று நான் ராஜபுத்திரன் என்று தெளிவு படுத்திவிட்டீர்கள். தங்களுக்குத் தெரியுமல்லவா ராஜபுத்திரர்கள் முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்று. ராஜபுத்திரர்கள் தங்களை அண்டி ஆதரித்தவர்களை என்

றென்றும் நிராகரிக்க மாட்டார்களென்று தங்களுக்குத் தெரியுமல்லவா? துரியோதனன் என்னை ஆதரித்தான், எனக்குப் பாண்டவர்கள் முன்னிலையில் ஒரு தனி மதிப்புத் தந்தான் என்பதுவும் தங்களுக்குத் தெரியுமல்லவா? என்னுடைய இன்றையபதவிக்கு நான் அந்த துரியோதனனுக்குக் கடமைப் பட்டவன் என்பதுவும் தங்களுக்குத் தெரியும் அல்லவா? அம்மா, எது கூறுகின்றீர்கள்.

குந் : (விம்மிஅழுது) ஆம் மகனே அன்று என் கன்னி நாட்களிலே — என் தாய்மை உணர்ச்சி உன்னிடம் சென்று உனக்கு ஆட்பட்டிருக்க வேண்டிய அந்த நாட்களிலே என்னுடைய கடமைகளைச் சிறிது மறந்துவிட்டேனடா! (அழுது) இன்று நினைக்கும் பொழுதுதான் என் நெஞ்சம் எல்லாம் வெடித்துவிடும் போல் தோன்றுகிறதடா! என்னுடைய கண்ணீர் கங்குகரையின்றிபெருகுகின்றதடா! (அலறி) ஐயோ! நீ என்னுடன் வந்துவிடேன்! உன்னுடைய தம்பிமார்கள் ஐவர். உனக்கு மணிமுடி சூட்டி உன்னை மன்னனாக்கி உனக்குப் பாதசேவை செய்வார்கள்

கர் : (சிரித்து) நான் க்ஷத்திரியன்! குந்தி தேவியின் வயிற்றில் பிறந்தமகன்! அதனால் எனக்கு இவை உடன்பாடு இல்லை. ஆனால் அம்மா! எனக்கு ஒரு வரம் வேண்டும். அந்த அர்ச்சுனனை நான்கொல்லவேண்டும்.

குந் : ஆனால் நானும் உன்னிடம் ஒரு வரம் கேட்கின்றேன்- மற்றை நால்வரையும் நீ கொல்லவேண்டாம். ஆனால் அர்ச்சுனனை நீ கொன்றால் மற்ற நால்வரும் தற்கொலை செய்து கொள்வார்கள் என்பது நீ அறியாத தொன்றல்லவே!

கர் : [கோபமாக] எப்படியும் நான் அர்ச்சுனனைக் கொல்வேன்.

குந் : கொல்! ஆனால் அந்த மாயவனும் அருகில் இருக்கிறான்என்பதையும் நீ மறந்து விடாதே!

[அழுது முகத்தை மேலாக்கினால் மறைத்துக் கொண்டு செல்கிறாள். கர்ணன் நதி தீரமாக தலை குனிந்த வண்ணம் நடக்கிறான். கங்கா நதிஒன்றுமே அறியாதவள் போல் ஆழமாக அமைதியாகப் பாய்கின்றாள்].


# "நாடக உலகில் நான் கண்ட நால்வர்"


A. T. பொன்னுத்துரை B. A. எழுதும்

சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில் வெளியாகின்றது.

# என்னை உருவாக்கியவர்கள்

**தேவன்-யாழ்ப்பாணம்.**

என்னை எழுத்தாளனாக உருவாக்கியவர்கள் யார் என்பது கேள்வி. அது ஒரு நீண்ட பட்டியல். அதிலும் என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ ஒரு பெரிய கூட்டம். ஆனால் வெறும் பட்டியலை மட்டும் கொடுத்தால் போதாது ஆகையால் 'லிஸ்டை' வெட்டிக் குறுக்கினேன்! ஏழே ஏழு பேரைக் குறிப்பாகத் தெரிந்தெடுத்தேன். அவர்கள் நான் தேவன்-யாழ்ப்பாணம்ஆக எப்படி உறுதுணையானார்கள் என்பதையும் சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன்.



''வானவெளியிலே'' என்ற என் நூலை ''இளமையிலிருந்தே நான் பாடசாலையில் கற்றநாள் முதல், எனக்குத் தெரிந்தது அனைத்தையும் ஒப்புவிக்கும் போது தெரிந்த விஷயமானாலும் தெரியாத விஷயமானாலும், அலுத்துக் களைத்திருந்தாலும் கேட்டு ரசித்து, என் பிதற்றல் பிரசுரங்களுக்கு சபையோராய் வாழ்த்து, தலையாட்டி, பேருவகை கொண்டு அதன் மூலம் எனக்குத் தெரிந்ததை பிறருக்கு எடுத்துக் கூறும் வல்லமையையும், ஆவலையும் ஆர்வத்தையும் வளர்த்துவிட்ட என் அம்மாவுக்கு'' சமர்ப்பணம் செய்தேன். பிறருக்குச் சொல்வதற்கென்று சரக்கு இருந்தால் எழுத்தாளன் ஜனிக்கின்றான் ஆனால் ஆரம்பத்தில் கூர் பார்க்க மரம் வேண்டுமே அந்த இடத்தை வெகுகாலமாக நிரப்பிக் கொண்டிருந்தவர் என் தாய். அவருக்காக இப் இப்பட்டியலில் முதலிடம்.

எனக்கு 12வயதாயிருக்கும் போது சனிக்கிழமைகளில் ஒரு 'டியூட்டி' இருந்தது. யாழப்பாணம் ரயிலடிக்குச் சென்று

12 சதத்துக்கு ஆனந்தவிகடன் வாங்கி வரவேண்டும். அதன் பக்கங்களின் தொகை சுமார் 180, 200 பக்கங்கள். வருகிற வழியில் 'கார்ட்டுன், படங்கள் அத்தனையையும் படித்து விடுவேன். நான் முதலில் சேகரித்த தொடர்கதை 'தியாகபூமி' டாக்கி படங்களுடன். இந்த சந்தர்ப்பத்தை அளித்தவர் என் பெரியண்ணு. எழுத்தாளர்கள் இப்போது இந்தியப் பத்திரிகைகளில் நமக்கு இடமில்லையே என்று வயிற்றெரிச்சல்படுகிருர்கள். அக்காலத்திலே 'தியாகம்' என்ற கதையை எழுதி விகடனிலும் 'மழைத்துளி சொன்ன கதை'யை எழுதி 'கலைமகளிலும் இடம்பெற்றவர். கொஞ்சக் காலம் உத்தியோகமிழந்திருந்தேன் அப்போது சிகரெட்வாங்குவதற்கு பணமில்லையே என்று நான் கவலைப்படுவது குறைவு புத்தகாலத்தில் பெருவாரியாக தமிழ்நூல்கள் வெளிவந்து கொண்டிருந்த காலம். 'புத்தகம் வாங்க அவனுக்குப் பணம் தேவைப்படும்' என்று மாதா மாதம் மான்யம் வழங்கியவர். அவரை இரண்டாவதாக சொல்லட்டுமா?

இன்று பச்சையாக நினைவிருக்கின்றது. தமிழ்க்கட்டுரை வகுப்பில் குறைக் கதையை முடிக்கசொல்லுவார் அல்லது குறிப்புக்களைத் தந்து கதையை விரிக்கச் சொல்லுவார் எங்கள் தமிழாசிரியர் மு. ஞானப்பிரகாசம். திருநீற்றுப்பூச்சும் சந்தன குங்கும பொட்டுகளும் தூய வெண்ணுடையும் இறைபக்தியும் நிறைந்த அவர் என் காதல் கதைகளை (ஆம் அன்றும் இன்றும் காதல் கதைகளை எழுதத் தயங்காதவன் நான்) எப்படி ரசித்தார் என்பது என்றும் எனக்கு பரமரகசியம தான். அக்கதைகளை (அபாரம்) எனப்பாராட்டி வகுப்பிலுள்ளோருக்கு அவற்றை படித்துக் காட்டி, 'என்னிடத்திலும்விஷயமிருக்கு' என்ற தன்னம்பிக்கையை ஊட்டியவரை அடுத்த படியாகச் சொல்லாமல் வேறு யாரைச் சொல்லுவது?

இந்த வரிசையில் யார் கட்டுரை எழுதினுலும் எல்லோராலும் குறிப்பிடப்படவேண்டியவர் இராஜ அரியரத்தினம். முற்போக்கு எழுத்தாளர்களானுலும்சரி, அல்லாதவர்களானுலுமசரி அவர்களுக்கு சந்தர்ப்பமளித்து' இடம கொடுத்து, செல்வாக்குத் தேடிகொடுத்த பெருமை அவருக்கேயுரியது. ஒரே யொரு மனத்தாங்கல். எங்களுக்கெல்

லாம் வாய்ப்புகளைத் தந்த அவர் இன்று துடிப்பும் விளிப்பும் மிக்க இளைஞர்கள் மத்தியில் ஏன் அந்த நற்பணியை தொடர்ந்து செய்ய முடியாமலிருக்கிறார் என்பது எனக்கு விளங்கவில்லை.

வயதில் மூத்தவனுகக் கருதப்படுவதால் என் ஆசீர்வாதம் உண்டென்று எழுதியவர் தேவன் - ஜூனியர் என்பதிலும் பார்க்க தேவன்—யாழ்ப்பாணம் என்பதே நன்ருக இருக்கும் என்று எனக்கு பெயரிட்டவர். யாழ்ப்பாணத்தவருடன் தமிழ் பேசுவதே களிப்பைத்தருகிறது என்றவர், அங்கொருநாள் வரவிரும்புகிறேன் என்று கூறி அவ்வாசை நிறைவேருமலே மறைந்தமேதை. என் "கேட்டதும நடந்ததும் என்ற நாவலுக்கு அழகான முன்னுரை ஒன்றெழுதிச் சிறப்பித்து ஊக்கியவர், ஆர். மகாதேவனை என்ருல்மறக்க முடியாது. தேவன் என்று குறிப்பிட்டால் தமிழுலகில் அவர் ஒருவரையே குறிக்கும்.

நான் கல்லூரியிலிருந்து விலகிய காலத்தில் என்னை யாரென்று எழுத்துலகில் எவருமே தெரிந்திருக்காத காலத்தில் துணிச்சலுடன் என் வாடியமலர்களையும், மணிபல்லவத்தையும் வெளியிட்டதைரியசாலி சுதர்சன் காரியாலய நிர்வாகி இலங்கையர். திருவனந்தபுரத்தில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டவர் த. சோமசுந்தரம். அப்போது அவருக்கு லாபம் கிடைத்ததோ எனக்குத் தெரியாது. இரண்டாம் பதிப்பு மணிபல்வத்துக்கு தேவைப்பட்டபோது இந்தப் பயத்தினுல் அவரைப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி எழுதினேன். இலங்கையில் அவரில்லாத காரணத்தால் அவராக அந்தச்சந்தர்ப்பத்தைத் தவறவிட்டார். இதைத்தான் அதிர்ஷடமென்கிருர்கள் போலும், விதைத்தவர் ஆனுல் வேளாண்மை அவருக்கு முழுக்க முழுக்கக் கிடைக்கவில்லை

இதில் கடைசியாக நான் குறிப்பிடத் தெரிந்தெடுத்தவரும் ஒரு பிரசுரகர்த்தரே தி. ச. குமாரசாமி அவர்பெயர். ஸ்ரீ சண்முகநாதஅச்சகம், சண்முகநாதன் புத்தகசாலை ஆகியவற்றின் நிர்வாகி, பண்பு மிக்கவர், இனியவர், வேடிக்கை என்ன தெரியுமா? என் நாவல் ஒன்றை ஒரு பத்திரிகைக்காரர் கடுமையாக கண்டித்திருந்தார் விமரிசனம் என்ற போர்வையில். வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்குக் கிளம்பி

விட்டார் குமாரசாமி. சில வாரங்களின் பின் அவருக்கும் அப்பத்திரிகைக் காரருக்கு மிடையே நடந்த கடிதப் போக்கு வரத்தைப் பார்த்தேன். அசந்து போனேன். அவருடைய பற்று தமிழன்னை மீதா அல்லது என்மீதா என்று பார்த்தேன். கடிதங்களைக் கொண்டு என்னுல் நிச்சயிக்க முடியவில்லை. எவர்மீதாயிருந் தாலும் சரியே, அன்றுதொட்டு அவர் எனக்கு வெறும் பிரசுரகர்த்தா அல்ல. மிகுந்த மதிப்புக்குரியவராகி விட்டார்.

இன்னெரு விஷயத்தையும் சொல்லிவிட விரும்புகிறேன். எனக்குத் தெரியாதது எதுவுமேயில்லை என்று என் மாணவ மாணவிகள் நினைக்கிருர்கள். அவர்கள் நம்பிக்கையோடு என்னிடம் வருகிருர்கள் எனக்கு தெரியாது என்று நான் கையை விரித்தால் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு போகிருர்கள். அதைப்பார்க்க எனக்குச்சகிப்பதில்லை. அதனுல் எந்தப் புதிய விஷயத்தையும் அவர்களுக்காகவாவது உடனுக்குடன் கற்றுக்கொள்கிறேன். எளிதாக சுவை படத் திருப்பிச்சொல்வதற்காகச் சுவையின்றேல் இன்பமில்லை, இலக்கியமில்லை. ஆகவே அந்த மாணவ உலகம் தங்களையே உருவாக்கிகொள்ளும் முயற்சியில் என்னையும் உருவாக்கினுர்கள். பெருகேற்றுகிருர்கள்.

எழுத ஆரம்பிதத பிறகு தான்தெரிகிறது என்னை உருவாக்கியவர்கள் எல்லோரையும பற்றி எழுதுவது எவ்வளவு கஷ்டமென்று. என் முன்னுல் வாழ்ந்த இலக்கிய சகோதர எழுத்தாளர்கள் பத்திரிகாசிரியர்கள், மேதைகள், ரசிகர்கள், விமரிசகர்கள் எவரையும் நான் குறிப்பிடக்கூட இல்லையே தவழும்போது கைகொடுத்தவர்கள்மேலே குறிப்பிடப் பட்டவர்கள். நிமிர்ந்து நின்ற பிறகு தட்டிக் கொடுத்தவர்கள் மீதிப்பேர்.


**கலைச்செல்வி**

**மாத இதழ்.**

—

சந்தா விபரம்

தனிப்பிரதி: சதம் **30**

ஆண்டுச் சந்தா: ரூ. **4.**

(மலருடன்)

சந்தாவைப் புதுப்பிக்காத நேயர்கள், தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளும்படி கோரப்படுகிருர்கள்.

விபரங்களுக்கு:

**நிர்வாகி,**

கலைச்செல்வி,

கந்தரோடை, சுன்னுகம்.

சினிமா நடிகர்களுடன் 5

# குலதெய்வம் ராஜகோபால்

தமிழ்ச் செல்வன்

நாம சினிமா பார்க்கும் போது, அப்படத்தில் ஹாஸ்யபகுதி இல்லாமலோ குறைவாகவோ இருந் தால் அது என்னமோ "சப்,, என்று உப்புப்புளி இல்லாத உணவை உட் கொள்வது போல இருக்கும்

அன்றைய தமிழ்ப் படங்களில் ஹாஸ்யப் பகுதிகளை கலைவாணர் என். எஸ். கே. எமக்கு அள்ளிச் சொரிந்தார். அவரது ஹாஸ்யப் பகுதிகள் அனேகமாக கருத்துள்ள தாகவும் இனியையாகவும் இருப்பதை நாம் கண்டோம்.

இன்றைய தமிழ்சினிமாவில் நாம் சந்திக்கும் ஹஸ்ய நடிகர்களில் சின் னக் கலைவாணர் குலதெய்வம் ராஜ கோபால், தங்கவேலு, சந்திரபாபு போன்ற ஒவ்வெருவரும் தத்தமக் கென உரித்தான பானிகளில் நடித்து மக்களை மகிழ்விக் கிறார்கள் ஆனல் நான் முன்கூறியபடி கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் கருத் துள்ள ஹாஸ்ய நடிப்பைப் போன்று ஓரளவு நடிக்கக்கூடிய திறமை குல தெய்வம் ராஜகோபால் அவர்களுக்கு உண்டு என்பதை இன்றைய அவரின் நடிப்பு மூலம் நாம் காணமுடியும். இத ஞல் அவருக்கு "சின்னக்கலைவாணர், என்று செல்லப் பட்டம் கொடுத்து நாம் அழைக்கின்ருேம்.

காலைஎட்டுமணி என்ருலும் படுக் கையை விட்டு எழுந்திருக்க விடாத என் சோம்பல், அன்று என்னமோ காலை ஐந்து மணிக்கே எழுந்திருக்க விடை கொடுத்த, அவசா அவசரமாக கால் முகம் அலம்பிவிட்டு வெளி யேறினேன்.

அன்று ஒரு சனிக்கிழமை. காலை ஆறு மணிக்கே பட ப்பிடிப்பிற்காக வீட்டை விட்டுவெளியேற இருந்த குலதெய்வம் ராஜகோபால் அவர்கள், தான் புறப்பட முன் என்னை சந்திக் கும்படி அழைத்திருந்தார். எனவே அவரைச் சந்திப்பதற்காக அதிகாலை யில் புறப்பட்டுச் சென்றேன். நான் சென்ற மோட்டார் வண்டி அவரின் இல்லத்தின் முன் போய் நின்றதும் ராஜகோபால் அவர்களின் அண்ணன் என்னை அன்புடன் வரவேற்று, அவர் களின் இல்லத்தின் நடு அறையில் அமரச் செய்தார். அறையில் எங்கு பார்த்தாலும் கலை வாணர் என். எஸ். கிருஷ்ணனின் உரு வப் படங்களும், சிலைகளும் காட்சியளித்தன. கலை வாணர் கைகூப்பிச் சிரித்தவண்ணம் நிற்கும் ஒரு உருவச்சிலை என் மனதைப் பெரிதும் கவர்ந்தது. என் னையே மறந்து சிலநிமிடநேரம் ரசித் துக்கொண்டிருந் தேன். இருவர் அமர்ந்திருக்கும் ஆசனத்தில் அமர்ந் திருந்து கலைவாணரின் உருவச் சிலையை ரசித்துக் கொண்டிருந்த எனக்கு. என்பக்கத்தில் "சின்னக கலைவாணர்" வந்திருந்ததே தெரி யாது என்னஸோர் இப்படி,, .........!

என்று இழுத்தபடியே குரல்கொடுத்தார் ராஜகோபால். அப்பேரதுதான் என்பக்கத்தில் அவர் என்ற உணர்ச்சிஎனக்கு வந்தது. எந்த நேரமும் அவர் முகம் மலர்ந்தபடியே காட்சி கொடுக்கின்றன. அவசரமான படப்பிடிப்பிற்குச் செல்ல இருந்த ராசகோபால் அவர்கள் சிலமணி நேரம் என்டனுன் அன்பாக உரையாடினுர் கலைச்செல்வியின் வளர்ச்சி பற்றி அவர் கூறிய ஒவ்வொ ருபுத்திமதிகளும் கலைச்செல்விமேல் அவர் கொண்டுள்ள அன்பு பிரதிபலிப்பதை நான் கண்டேன்,

தன்னை உருவாக்கிய தெய்வம் என்.எஸ். கிருஷ்ணரே என்று அவர் கூறியபோது அவர் கண்கள் கலங்கின நீண்ட நேரஉரையாடலின் பின் அவர் எனது சில கேள்விகளுக்குப் பதில் கொடுத்தார்,

கேள்வி: தங்களுக்கு நடிப்புத் துறையில் ஊக்கமளித்தவர் யார்?

பதில்: நடிப்புத்துறையில் மட்டுமல்ல வாழ்க்கைத்துறையிலும் எனக்கு ஊக்கமும் உதவியும் கொடுத்தவர் என்.எஸ்.கே, அவர்கள்தான். சுருங்க சொன்னுல் அவரினுல் நான் இன்று வாழ்கிறேன்.

கே: தாங்கள் படங்களில் ஹாஸ்யப் குதிகளை நடிக்கும் போது அது தங்கள் சொந்தக் கருத்துக்களா அல்லது தயாரிப்பாளரின் கருத்துக்களாக இருக்குமா?

ப: அவர்களும் சில கருத்துக்களைக் கொடுப்பார்கள் அனேகமாக என் கருத்துக்களைசமயமறிந்து புகுத்திக் கொள்வேன்,

கே: தாங்கள் எந்த அரசியல் கட்சியை ஆதரிக்கிறீர்கள்?

ப கலைமூலம் மக்களின் அன்பைப் பெறும் கலைஞர்கள் அரசியலில் பிரவேசித்து மக்களின் வெறுப்பைத்தேடகூடாதென்பதே என்கருத்து கலைபண்பானது ஒரு அரசியல்சூதாட்டம.

கே: தாங்கள் எந்தப் படத்தில் திறம்படநடித்துள்ளீர்கள்?

ப: குறிப்பாக எதில் என்று சொல்லுவதற்கில்லை ஆனுல் ',குல தெய்வம்'', ''வீரபாண்டியகட்டப் பொம்மன்" போன்ற படங்கள் எனக்கு திருப்தியைக் கொடுத்தது.

கே. உங்களுக்கு எதாவது கொள்கை உண்டா?

ப: கலைமூலம் மக்களை திருப்திப் படுத்தவேண்டும் உண்மையான ஏழைகளுக்கு என்னுலான உதவி செய்யவேண்டும் இந்த இரண்டு கொள்கைகளைத்தவிர வேறு எதுவும் இல்லை,

கே: கலைச் செல்வியின் ஆண்டு விழாவில் தங்களை கலந்து கொளளுபடிநாம் அழைத்தால் எம் அழைப்பை ஏறறு இலங்கைக்கு வந்து கலைச்செல்வி நேர்யகளை மகிழ்விக்க முடியுமா?

ப: தாராளமாக ஆனுல் நேரம் கிடைப்பது தான் அரிது. சில வாரங்களுக்கு முன்னரே எனக்கு அறிவித்தால் நான் கட்டாயம் வருவேன்.

கே: கலைச்செல்வி நேயர்களுக்கு தாங்கள் எதாவது கூறவிரும்புகின்றீர்களா?

ப: கலைச்செல்வி நேயர்களுக்கு என் அன்பு உரித்தாகட்டும்.

# இப்படியும் நடந்தது

## அங்கமுத்து நடனமாடினார்.

காற்றூதின பலூன் மாதிரி உருண்டு பருத்துள்ள சிரிப்பு நடிகை அங்கமுத்து ஒரு காலத்தில் ஆண் வேஷம் தரித்து கிருஷ்ணராக நடித்தது மட்டுமல்ல, ஒல்லியாக இருந்த அந்தக் காலத்தில் பரதநாட்டியமும் ஆடினாரென்றால், அந்தச் சிரிப்பு நடிகையை எண்ணி நீங்களும் சிரிக்காமலிருக்க முடியுமா?

## சிவாஜிக்கு நடிக்கத் தகுதியில்லை.

இன்று, 'நடிகர் திலகம்', "கலைக் குரிசில் கணேஷன்" என்றெல்லாம் நாம்புகழும் நடிகர் சிவாஜிகணேஷன் அன்றொருகாலத்தில் முதன் முதலில் சினிமாப்படத்தில் நடிக்க ஆசைப்பட்டு, ஒருபிரபல தயாரிப்பாளரிடம் போய்வேலைகேட்டபோது, "ஓ! அவரா வேண்டாம். அவரது முகம் சினிமாவுக்கு லாயக்கற்றது!" என்று வெறுப்பாகக்கூறிவிட்டார் அந்த தாயாரிப்பாளர். பிறகு சிலகாலங் கழிந்ததும் பிரபல்யம் அடைந்த சிவாஜிகணேஷனை அழைத்து, முன்விரட்டிய அதே தயாரிப்பாளர் தன் படத்தில் நடிக்கும்படி மன்றாடிக்கேட்டாராம். உலகம்போற போக்கைப்பார்த்து ஆச்சரியப்படாமலிருக்கமுடியுமா?

## பிச்சை எடுத்துப் பிழைத்தார் கே.பி. சுந்தராம்பாள்

இன்று பாரதநாட்டின் சட்டசபை அங்கத்தவர்களில் ஒருவரும், தமிழ்ப்படஉலகில் நடிப்பதற்கு முதன் முதலில் லக்ஷரூபாய் வாங்கியவரும் பிரபல பாடகியுமான கே.பி. சுந்தராம்பாள் சிறுவயதில் தென்னிந்திய ரயில்களில் பாட்டுப்பாடி பிச்சை எடுத்து பிழைத்து வந்தார். வாழ்க்கைத்துறையில் "புயலுக்குப்பின் அமைதி" என்ற உண்மையை எடுத்துக்காட்டுகின்றது கே.பி, சுந்தராம்பாளின் வாழ்க்கை.

## சரோஜாதேவிக்காகத் தாயார் இரந்து கேட்டார்.

இன்றைய தமிழ்ச் சினிமாவில் காதல் நடிப்பால் கைதேர்ந்தவரும், த்தைகத்தையாகப் பணத்தை வாங்கிக்கொண்டு படத்தில் நடிப்பவரும், கல்யாணப்பரிசு, கைராசி, போன்ற படங்கள்மூலம் புகழ் ஏணி ஏறியுள்ள சரோஜாதேவி அன்று பிரபல்யமடையுமுன் ஒருபடத்தில் நடிக்கும் போது, அங்கு நின்ற ஒருபிரபல்யமான சினிமாப்பத்திரிகையின் ஆசிரியரிடம் சென்ற சரோஜாவின் தாயார் இரண்டு மூன்றாய் வளைந்து பல்லைக் காட்டி மன்றாடி தன் மகளின் படத்தை இரண்டு மூன்று கலரில் போட்டு சினிமா உலகிற்கு அறிமுகம் செய்து வைக்குமாறு இரந்து கேட்டாராம்.

உங்கள் இடங்களில் மங்களகரமாக விளங்கத் தகுந்தவை.

**திதி, நட்சத்திரம், யோகம்**
முதலியவைகளைத் தெளிவுற விளக்குபவை.

யாழ்ப்பாணம் — கொக்குவில்
**பிரம்மஸ்ரீ இ. சி. இரகுநாதையர் அவர்களின்**
வாக்கிய பஞ்சாங்கக் குறிப்புக்களுடன் கூடியவை.

அறிஞர்கள் ஆன்றோர்களின் அரிய பெரிய கருத்துக்களுடனும் நல்லாசிகளுடனும் வெளிவருபவை.

# 1962-ம் ஆண்டு

## விவேகானந்தா திருக்குறட் கலண்டர்கள்.

தயாரிப்பாளர்கள் :

# விவேகானந்தா

# அச்சகம் ——— புத்தகசாலை


விவேகானந்தா கட்டிடம்

**யாழ்ப்பாணம்.**

தந்தி: "பிறின்ரேஸ்." போன்: 517.

விலாசம் அச்சிட்டு விநியோகிக்க விரும்பும் வியாபாரிகளுக்கு விசேஷ சலுகையுண்டு.

விலைவிபரம் தேவையானோர் எழுதினால் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.




நமது தொடர் நாவல்

போந்தைப் பழைய கள்ளைத்தான் நான் என் சொந்தப் புதிய கிண்ணத்தில் கொடுக்கிறேன். கருத்துப் பழையது; என் எழுத்துப் புதியது; அவ்வளவுதான்? இரும்பு இயந்திரத்தின் வேகத்திற்கு, இருதயமுள்ள இயந்திரம் ஈடுகொடுக்க முடியாமல் தவிப்பதே இதற்குக் காரணம்.

இந்தக் கள்ளுக்குக் கொஞ்சம் வெறி இருந்தால், அது இன்னொரு வெறியை அரை நிமிஷமாவது மறக்கச்செய்யும். "அது என்ன இன்னொரு வெறி" என்கிறீர்களா? அதுவும் பழைய கள்ளைப்போலவே புளித்துப்போன பழைய விஷயந்தான். இதைக் குடித்துப்பாருங்கள்; மூவுலகும் தெரியாவிட்டாலும் முன்னே நிற்கும் தமிழ் உலகத்தின் சாதிவெறி நிறைந்த ஒரு மூலையாவது தெரியும்.

— அகிலன்

# அரும்பு

அவர்களுடைய முதல் சந்திப்பு முத்தையாவின் வீட்டில் நடந்தது.

டிராயிங்மாஸ்டர், டிரில்மாஸ்டர் ஆகிய இரண்டு வேலைகளையும் எழுபத்தைந்து ரூபாய் சம்பளத்துக்குப் பார்த்து வந்த முத்தையா, பள்ளிக்கூடம் முடிந்தவுடன் சாயங்காலம் நேரே தன்னுடைய வீட்டிற்கு வந்தான். வாசற்கதவு திறந்திருந்தது. உள்ளே நுழைந்து அடுத்தாற்போலிருந்த தன்னுடைய அறைப்பக்கம் திரும்பினன். அறைக்குள் யாரோ ஒரு புதுப்பெண் நின்றுகொண்டிருந்தாள். அந்தப்பெண்ணுக்கு முத்தையா நிற்பது தெரியவில்லை. அவள் வேறு புறம் திரும்பிக்கொண்டு முத்தையாவின் மேஜைமேல் கிடந்த 'ஆல்ப'த்தைக் கவனமாகப் புரட்டிக்கொண்டிருந்தாள்.

முத்தையா ஒரு கணம்தான் அங்கு தாமதித்தான். ஆனல் அந்த ஒரு கணத்திற்குள் அவளுடைய தோற்றத்தின் பின்னழகு அப்படியே அவன் எழுதுகிற சித்திரம்போல் அவன் மனதிலே ஒட்டிக்கொண்டது. சடைப்பின்னல் அவளுடைய முழங்கால் வரையிலும் கருநாகம் போல் நீண்டு தொங்கியது. அடர்த்தியான அந்தப் பின்னலின் மத்தியில் அவள் ஒரு கொத்து முல்லைச் சரத்தை வைத்துக்கொண்டிருந்தாள். வெடிக்காத அரும்புகளான அந்த முல்லையிலிருந்து மணம் மட்டிலும் வெடித்துவிட்டது. அவளுடைய மேல்துணி ஒரு புறமாகச் சரிந்து கிடந்ததால் முதுகுப்புறம் தெளிவாகத் தெரிந்தது பளிங்குப் பதுமையைச் சுற்றி ரோசாச்செடி ஒன்று பூத்திருந்த மாதிரி, அவளுடைய உடலை ஒட்டியிருந்த பட்டுச்சேலையெங்கும் ரோசாப் பூவும் இலைகளுமாக இருந்தன.


முத்தையா வீட்டிற்குள் நுழைந்தான். அவனுடைய தங்கை சரஸ்வதி சமையல் அறையில் காபி போட்டுக்கொண்டிருந்தாள். 'ஒருவேளை அந்தப்பெண்ணுயத்தான் இருக்குமோ? என்று தனக்குள்ளே ஒரு கேள்வியையும் கேட்டுக்கொண்டு, 'ஆம்,அப்படித்தான் இருக்கும்' என்று பதிலும் சொல்லிக்கொண்டு சட்டையைக் கழற்றிபவண்ணம் தங்கையின் அறைக்குள் சென்றுன். அவனுடைய அறையில் அந்தப் பெண் இருந்ததால். அவனுக்கு இப்போது வேறு வழியில்லை.

முத்தையாவுக்குச் சில பழக்க வழக்கங்கள் உண்டு; சில பழக்க வழக்கங்கள் கிடையாது. காலைநேரத்தில் அவன் சித்திரம் வரைவான் மாலைப்பொழுதில் வீட்டுத்தோட்டத்தில் தேகப்பயிற்சி செய்வான். அவனுக்கு அதிகமாக நண்பர்கள் கிடையாது. பள்ளிக்கூடத்தில் எல்லோருடனும் தாராளமாய்ப் பழகுவான். காபி அவன் சாப்பிடுவதில்லை. அதற்குப்பதிலாக அவன் வீட்டில் எப்போதும் டீ தயாராக இருக்கும். சரஸ்வதி காபிதான் சாப்பிடுவாள்.

தோட்டத்துக் கதவைச் சாத்திக்கொண்டு முத்தையா தேகப் பயிற்சி செய்ய ஆரம்பித்தான் அரைக்கால் சட்டையும் கையில்லாத பனியனும் போட்டுக்கொண்டு அவன் 'பஸ்கி' எடுத்துக்கொண்டிருந்தபோது, அவ

னுக்கு லேசாக அந்தப் பெண்ணின் நினைவுவந்தது. மீண்டும் ஒரு முறை வீட்டின் பின்புறக் கதவைப்பார்த்தான். அது நன்றாகத் தாழிடப்பட்டிருந்தது. தான் பயிற்சிசெய்யும் சமயம் திடீரென்று அவள் அங்கே வந்து தன்னைப் பார்த்துவிடக்கூடாதே என்பதற்குத்தான் அவன் அப்படி ஜாக்கிரதையாக இருந்தான்.

ஆனால் அவள் அப்போது அவனைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தாள்! எந்தச்சமயம் அவன் அவளைப்பற்றி நினைத்துப் பயந்தானோ, அதே சமயம் அவள் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்! அவனுக்குத்தெரியாமல்அவனுடைய தங்கையின் அறையிலிருந்து அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்!



பெண்களின் அழகைப்பற்றி அவள் கவிதைகளிலும கதைகளிலும் ஆசிரியர்கள் எழுதியதைப் படித்திருக்கிறாள். அந்த எழுத்துக்களுக்குள்ளெல்லாம் அடங்காத ஒரு பெண்ணழகை அவளே தன் உருவத்தில் நிலைக்கண்ணாடியில் கண்டு சொக்கியிருக்கிறாள். அவளுடைய அழகை எத்தனையோ மாணவத் தோழிகள் பெண் உபாத்தியார்கள் அவள் எதிரில் புகழ்ந்திருக்கிறார்கள். தெருவில் போவோர் வருவோரெல்லாம் ஏறிட்டுப்பார்க்கும் பார்வையிலேயே அவளுடைய அழகின் ரகசியத்தை அவள் ஓரளவு உணர்ந்திருந்தாள்.

ஆனால். முத்தையா மூச்சுத்திணறிக்கொண்டு பயிற்சி செய்யும் காட்சியை முதல் முறையாகப் பார்த்த அவள், 'ஏன் இந்தக் கதை, கவிதை, எழுதுகிறவர்களுக்கெல்லாம் ஆண்களின் அழகைப்பற்றிக் கண் அவிந்து போய்விட்டது!' என்று ஆச்சரியப்படத் தொடங்கினாள். அவனுடைய கிராப்புத் தலை நெளி நெளியாகச் சுருண்டிருந்தது. பரந்த மார்பிலும், கைகளிலும், கால்களிலும் சதைப்பிடிப்புக்கள் முறுக்கேறித் துடித்துக் கொண்டிருந்தன. கிரேக்க நாட்டுச் சிலைகளின் படங்களை அவள் புத்தகத்தில் பார்த்திருக்கிறாள். அந்தச் சிலை ஒன்றுஇங்கேஎப்படி உயிருடன் வந்தது!

ஜன்னல் கதவு கொஞ்சமாகத் திறந்திருந்தது. அதற்குப் பின்னால்அவள்நின்றாள். அவளுடைய தேகம் சிறிதுகூட அசையவில்லை! கண்கள் ஒரு முறையேனும்இமைக்கவில்லை. திறந்தகண்கள் திறந்தபடியே இருந்தன. மூச்சின் இழைகூட மிகவும் மெல்லியதாய்ப் போய்விட்டது அவளுக்கு.

ஐந்து நிமிஷத்திற்கு மேல் அவளுக்குப் பின்னால் நின்று கொண்டு அவளைக் கவனித்து வந்த சரஸ்வதிக்கு அதற்குமேலும் பொறுக்கமுடியவில்லை, சுடச் சுட அவளுக்காகப் போட்டுக் கொண்டு வந்த காபி பச்சைத் தண்ணீராய்ப் போய்விட்டது. தன்னுடைய சிரிப்பையெல்லாம் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு, "புவனா,

" இந்து இளைஞன் "
கட்டுரைப் போட்டி

முடிவு திகதி :
15-11-61

பொருள் :
சுவாமி
விவேகானந்தர்

" இந்து இளைஞ " னில் இரண்டு பக்கங்களுக்குக் குறையாமலும், நான்கு பக்கங்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

பரிசு விபரம் :
மூன்று பரிசுகள்
முறையே
ரூ. 50, 30, 20.

நாடு; சமயம், இனம், வயது, பால் முதலிய கட்டுப்பாடுகள் இல்லை.

விபரங்களுக்கு :
விவேகானந்தர்
கட்டுரைப் போட்டி
100, கொறிஸ்கஞல் வீதி
கொழும்பு – 10.


இந்தக் காபியைக் குடித்துவிட்டு அப்புறம் வேடிக்கைபார்; அண்ணு அதை முடிக்க இன்னும் அரைமணிநேரம் ஆகும்!" என்ருள்.

புவனேஸ்வரிக்குத் தூக்கிவாரிப் போட்டது. உடனே பின் புறம் திரும்பிக் காபியை வாங்கி அவசரம் அவசரமாகக் குடித்தாள். சிவந்தமுகத்தின் வெட்கத்தை மாற்றிக் கொள்ளுவதற்குச் சற்றுத் தாமதித்தாள்.

''இந்தக் காலத்தில் உன் அண்ணுவைப்போல் ஒருவரை நான் பார்த்ததே கிடையாது. உடம்பைப் போட்டு இப்படியாராவது வாட்டிக் கொள்வார்களா? எனக்கு இதைக்கண்டாலே கொஞ்சங்கூடப் பிடிப்பதில்லை!; என்று முகத்தைச் சுளித்தாள் புவனேஸ்வரி.

சரஸ்வதியும் பெண்தானே! பெண்ணின் அந்தரங்கம் பெண்ணுக்கா தெரியாது ?

''பிடிக்காத விஷயத்தைத்தான் சில பெண்கள் ரொம்பவும் அனுபவிப்பார்கள்! நான் உன்னைச் சொல்லவில்லை, பொதுவாய்ப் பேசுகிறேன்' என்ருள் சரஸ்வதி.

புவனு அப்படியே போய்ச் சரஸ்வதியை இறுகக் கட்டிக்கொண்டாள். அவளிடமிருந்து விடுபடுவதற்குள் சரஸ்வதியின் பாடு போதும் போதுமென்ருகி விட்டது. சரஸ்வதி புவனுவுக்கு பாட்டு உபாத்தியாயர். ஆனல் சொல்லிக் கொடுப்பவள், சொல்லிக் கொள்பவள் என்கிற மரியாதையெல்லாம் புவனுவின் வீட்டில் தான் அதுவும் அவளுடைய பெற்றேருக்கு முன்னிலையில் தான். மற்றப்படி இருவருக்கும் ஒரே வயது, ஒரேபருவம், ஒரே பருமன், ஒரே உயரம்– அழகு

பணம் இந்த இரண்டு விஷயங்களைத் தவிர...

புவனா இப்போது வேண்டுமென்றே ஜன்னல் கதவருகில் வந்து அதை ஓங்கித் தாழிட்டாள், ஆனால் சரஸ்வதி இடங்கொடுக்கவில்லை. நன்றாக இரண்டு கதவுகளையும் திறந்து விட்டாள், "நன்றாகப் பாரேன்; நான்யாரிடமும் சொல்லவில்லை; பார்!" என்றாள்,

கதவு திறப்பதும், மூடுவதுமாக இருந்த அவர்களுடைய சண்டைக்கு மத்தியில் முத்தையாவின் கவனம் சென்றது. பாதி 'தண்டால்' போட்டுக் கொண்டிருந்தவன் பதறிப்போய்த் தரையில் குப்புறவிழுந்தான். மறுநிமிஷம் வேகமாக எழுந்து பக்கத்தில் கிடந்த வேஷ்டியைச் சுற்றிக்கொண்டு குளிக்கும் அறையில் நுழைந்தான். அவனுடைய தேகம் நடுங்கியது. அந்தப் பெண் அவனை இந்தக் கோலத்தில் பார்த்து விட்டாளே! என்ன அக்கிரமம்!

வேர்வை அடங்குவதற்காகக் கால் மணி நேரம் காத்திருந்த பிறகு அவன் தலையைத் தண்ணீருக்குள் நீட்டினான். உச்சியில் குளிர்ந்த நீர் கொட்டியவுடன் அவனுடைய பதற்றமும் குறைந்தது. 'இருந்தும் இவ்வளவு பலசாலியாகிய நாம் ஒரு சாதாரணப் பெண் பிள்ளைக்காக நடுங்கலாமா?' என்று தன்னையே தேற்றிக் கொண்டான்.

குளித்தாகி விட்டது. அவனுடைய அறையில் இப்போது அவள் இல்லை. ஆகையால் அங்கு வந்து உடைமாற்றிக் கொண்டு தலைவாரிக் கொண்டான். அடுத்தாற் போல் அவன் எதிர்பார்த்தது சூடான தேநீர்.

தேநீர் வந்தது. அத்தோடு சரஸ்வதியும் புவனாவும் வந்தார்கள். தேநீர்க் கிண்ணத்தை முத்தையாவிடம் கொடுத்து விட்டுச் சரஸ்வதி அங்கிருந்த நீண்ட பெஞ்சியில் உட்கார்ந்தாள். புவனாவையும் கையைப் பிடித்து இழுத்துத் தனக்குப் பக்கத்தில் உட்காரவைத்தாள்.

"நான் உங்களிடம் ஏற்கெனவே சொல்லவில்லையா? அதே புவனேஸ்வரி தான் இந்தப்பெண்".

இருவரும் கைகூப்பிக் கொண்டார்கள். புவனா ஆவலோடு அவனுடைய முகத்தை உற்றுப் பார்த்தாள் ஆனால் முத்தையாவோ, மணப்பந்தலில் உள்ள பழைய காலத்துப் புதுப் பெண்ணாக மாறிவிட்டான்! குனிந்த தலை நிமிரவில்லை.

"என்ன அண்ணா இது! நீங்கள் தான் முன்பு ஒருதரம் என்னிடம் புவனாவை நேரில் பார்க்க வேண்டும் என்றீர்கள்" கூட்டி வந்தபிறகு பார்க்க மாட்டேன் என்கிறீர்களே"! என்றாள் சரஸ்வதி. இப்படிச்சொல்லி விட்டு, "இதோ இருங்கள், வீணையை எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி உள்ளே சென்றாள்.

முத்தையா இப்போது அவள் முகத்தை நிமிர்ந்து நோக்கினான். அவளும்பார்த்தாள். அவன் உடம்பு புல்லரித்தது—அந்தக் கணங்கள் !

"எவ்வளவு அழகாய் படம் எழுதுகிறீர்கள்!" என்றாள் புவனா.

புவனாவை ஒருதரம் பார்த்த பிறகு தான் அவனுக்குத் தான் எழுதியபடங்

களின் குறைகள் தெரிய வந்தன. படத்தைப் பற்றி அவள் பேச்செடுத்த வுடன் அவனுக்கு மற்ற நினைவுகள் மறந்து விட்டன. அவன் ஓவியக்கார னாக மாறி விட்டான். தன் எதிரில் இருந்த புவனாவை, அவள் கண்களை, புருவங்களை, இதழ்களை, கன்னங்க ளைத் தனித் தனியே கவனிக்கத் தொடங்கினான். கண்ணிமைக் காமல் கவனித்தான். புவனாவின் முகம் வெட் கத்தால் சிவந்தது. அந்தச் சிவப்பை யும் அவன் கவனிக்கத் தவறவில்லை!. இந்த மாதிரி ஓர் உயிர்ச் சித்திரம் அவனால் வரைய முடிந்தால்!

அவன் கலைக்கண் கொண்டு அவளைப் பார்த்தான், ஆனால் அவள் அப்படி நினைக்கவில்லை. வேறு எதையோ அவள் அவன் முகத்தில் கண்டாள். வேறு ஏதோ ஓர் உலகத் தில் அவள் இருந்தாள்.

சரஸ்வதி அங்கே வீணையுடன் வந்தபொழுது முத்தையா தன்னை மறந்து அவளிடம் ''சரசு, நீ இவர் களைப் பற்றி முன்பு சொன்ன தெல் லாம் அப்படியே உண்மை!'' என் றான்.

"என்ன சொன்னாய், சரஸ்வதி?" என்று துடிப்போடு கேட்டாள் புவனா.

"நான் சொல்ல மாட்டேன்!"என் றாள் சரஸ்வதி.

"நீங்களாவது சொல்லுங்க ளேன்! நான் இல்லாதபோது என் னைப் பற்றி ஏற்கெனவே புகார் வந்து விட்டதா?" என்றாள் முத்தையா விடம்

"புகார் ஒன்றும் இல்லை; வந்து..."

"சொல்ல வேண்டாம், அண்ணா!', என்று குழந்தை மாதிரிக் குறுக்கிட் டாள் சரஸ்வதி.

"நான் சொல்லுவதைக் கொஞ் சம் கேளுங்கள். சொல்லமாட்டீர் களா?''

முத்தையாவுக்கு அதை எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. சொல் லாமலும் இருக்க முடியவில்லை மென்று விழுங்கிக் கொண்டு ஒரு வகையாக ஆரம்பித்தான்.

"வந்து... தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள்! 'புவனாவைப் போல ஓர் அழகான பெண்ணை நீங்கள் பார் த்திருக்க மாட்டீர்கள்' என்று சரஸ் வதி அடிக்கடி சொல்வதுண்டு...''

இதைக் கூறியவுடன் முத்தையா தலையைக் கவிழ்த்துக் கொண்டான். புவனாவும் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

''அண்ணாவுக்குப் பாட்டுக் கேட்ப தில் ரொம்பப் பிரியம். என்னுடைய பாட்டை வழக்க மாய்க் கேட்ட பிற கும் அந்தப் பிரியம் தீரவில்லை! இன் றைக்கு நீ ஒரு பாட்டுப் பாடு புவனா!'' என்றாள் சரஸ்வதி.

''இன்னொரு நாள் கட்டாயம் பாடு கிறேன்" என்றாள் புவனேஸ்வரி.

சிறிது நேரம் மூவரும் கல கலப் பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். புவனா பேச்சுக்கிடையே அங்கு கிடந்த முத்தையாவின் படங்களையும், அவன் படிக்கும் புத்தகங்களையும் எடுத்துப் பார்த்தாள்.

''அண்ணாவுக்கு முக்கியமாக மூன்று வேலைகள் தெரியும்: படம் எழுது வார்; பயிற்சி செய்வார்; நாவல் படிப்பார். பாட்டுக் கேட்பது நாலா வது வேலை'' என்றாள் சரஸ்வதி. அவ ளுடைய பேச்சை மெய்ப்பிப்பது போலவே அறையின் ஒரு மூலையில் உடற் பயிற்சிக் கருவிகளும், அலமாரி நிறைய நாவல் களும், மேசை யெங் கும் வர்ண மைகளுமாயிருந்தன.

விடைபெற்றுக் கொள்ளும் போது புவனேஸ்வரி முத்தையாவை ஏறிட்டு நோக்கினாள். முத்தையாவோ அவளு டைய முகத்தைத் திரும்பிப் பாராமலே "போய்வாருங்கள்" என்றான்.

(தொடரும்.)

**மாணவர்களே !**

உங்கள் சித்தி உத்தரவாதம்.

# இந்து சமயம் (புதிய பாடத்திட்டம்) (New Syllabus)

திருவருட் பயன், திருக்குறள், தேவார திருவாசகம், சமயகுரவர், சந்தானகுரவர், வேதம், ஆகமம்

முதலியன அடங்கிய

# இந்துசமய மாதிரி வினாவிடை

வெளிவந்துவிட்டது.

எழுதியவர் :

சைவப்புலவர் ஐ. இராசரத்தினம் ( ஐயன்னா )

விலை ரூபா **1-50.**

வியாபாரிகட்கு விசேட கழிவு உண்டு.

விபரங்கட்கு :

## கலாதேவி அச்சகம்,

புகையிரத வீதி, சுன்னாகம்.

## இலங்காநிதி லிமிற்றெட்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

1961-ம் ஆண்டு ஆடி மாதம்

## நவீன சேமிப்பு அதிட்டசாலிகள்

| பெயர் | விலாசம் | மாதாந்தம் கட்டுவது | கட்டிய தொகை | இலாபப் பங்கு |
|---|---|---|---|---|
| திரு. குமாரசாமி தங்கம்மா | கருணாநிதி ரோட்டு திருநெல்வேலி | 10 ரூ. | 300 ரூ. | 150 ரூ. |
| திரு. E. K. இராசநாயகம் | C/o த. சிவக்கொழுந்து மஸ்கெலியா | 25 ரூ. | 300 ரூ. | 120 ரூ. |
| திரு. செல்லப்பா இராசையா | திருநெல்வேலி யாழ்ப்பாணம் | 50 ரூ. | 250 ரூ. | 83 ரூ. |

நிரந்தர சேமிப்புக்குக் கீழ்க்குறித்த வட்டி கொடுக்கப்படும்.

1 வருடத்திற்கு வருடம் 6 சதவீதம்

2 வருடத்திற்கு வருடம் 7 சதவீதம்

3 வருடத்திற்கு வருடம் 7 சதவீதம்

# வளருந் தமிழ்.

**சமூகத்தொண்டன் :**
ஆண்டுமலர்—1961; ஆசிரியர்: விடிவெள்ளி. சமூகத்தொண்டன் அலுவலகம், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். விலை: ரூபா 2.50

ஈழகேசரி வெள்ளிவிழா மலருக்குப் பின் ஈழத்து இலக்கியவானில் வெளிவந்து ஒளி தந்துகொண்டிருக்கும் மலர் சமூகத்தொண்டன் ஆண்டுமலர். ஈழத்து முன்னணி எழுத்தாளர்கள் பலரும் இந்திய எழுத்தாளர்கள் சிலரும் மலருக்கு மணமூட்டியுள்ளனர்.

கட்டுரை, கவிதை, கதை—மூன்றையும் ஒப்பிடும்பொழுது மலரில் வெளியான கவிதைகள் அத்தனையுமே மணிக் கவிதைகளாக ஜ்வலிக்கின்றன. அவற்றுள் பரமஹம்ஸதாசனின் கவிதைக்கு முதலிடம்கொடுக்கலாம். மு. செல்லையா, திமிலைத்துமிலன், ஜெயம் ஆகியோரின் கவிதைகள் அடுத்த படியில் நிற்கின்றன. இம் மலரில் இடம்பெற்ற ஏழு சிறுகதைகளுள் கணேசலிங்கன் எழுதிய "சங்கமம" நல்லகதை என்பது என் கருத்து. வரதர் எழுதிய "கதையின் கதை" மாயாவி பாணியில் அமைந்திருப்பதால் வாசகர்கள் பலரைக் கவரக்கூடும். வ. அ. இராசரத்தினத்தின் 'தந்தையும் மகனும்" கதையின் சம்பவங்களும் சம்பாஷணைகளும் வலிந்து புகுத்தப்பட்டிருப்பது தெரிகின்றது. பரிசுக் கதை 'சுமார்' என்றுதான் சொல்ல வேண்டும். சொக்கன் எழுதிய "தனக்கு மூக்கறுபட்டாலும்" ... கதையா? ஹாஸ்யக் கட்டுரையா? கதைத்துணுக்கா? எதுவாயிருந்தாலும் படிக்கச் சுவையாயிருக்கின்றது. முதலிரண்டு பக்கங்களையும் கண்ணை மூடிக்கொண்டு தட்டிவிட்டால் எஞ்சியுள்ள "ஈழத்துச் சோமுவின் கட்டுரை சென்றஆண்டு நடைபெற்ற இலக்கிய நிகழ்ச்சிகளைத் திருப்பிப்பார்க்க உதவுகின்றது. தமிழ் வளர்ச்சி பற்றி 'பிரேம்ஜி' கூறும் கருத்துக்கள் நம் சிந்தனைக்குரியவை ஆசிரியரின் சிந்தனைத் தெளிவையும் கட்டுரையில் பார்க்க முடிகின்றது. 'தொழிலாளி ஒருவனுல்தான் தொளிலாளர்களின் வாழ்க்கையும், சமுதாய மாற்றத்தையும்பற்றி எழுத முடியும்; வறுமையில் வாடுபவனுல்தான் பசியைப் பற்றி எழுதமுடியும்" என்ற தவருன கருத்துப் பிரசாரத்திற்கு வேட்டு வைக்கின்ருர் கனக செந்திநாதன் "செல்வமும் வறுமையும்" என்ற தன்கட்டுரையில். மாணவர்கள் 'நயக்கும்' பாடல்கள் பற்றியும் அங்கே குறிப்பிடுகிருர். என். கே. ரகுநாதனின் கட்டுரை ஏமாற்றத்தையளிக்கின்றது. கட்டுரையின் தலைப்பிற்கு ஏற்றபடி உள்ளடக்கம் அமையவில்லை. இலக்கியம் மனிதனுக்காகத்தான் எழுதப்படுகின்றது மனிதனுடைய வாழ்க்கையைச் சீர்படுத்த, மேம்படுத்த உதவுவது இலக்கியம். இத்தகைய "இலக்கியம்" என்பதிலிருந்து "முற்போக்கு இலக்கியம்" எவ்வாறு வேறுபட்டிருக்கின்றது என்பதை அவர் தெளியவைத்திருக்கலாம், மலரிலுள்ள ஒரே ஒரு நாடகம் எஸ். பொன்னுத்துரை எழு

திய "முள்ளோ? மலரோ?' என்பது வரலாற்றுப் பின்னணியில் எழுதப் பட்டுள்ளது இந் நாடகத்தைப் படித்தும் சுவைக்கலாம்; நடித்தும் ரசிக்கலாம்.

இலங்கையிலும் தரமான இலக்கியம் படைப்பவர்கள் இருக்கின்றார்கள் என்பதை எல்லோருக்கும் எடுத்துக்காட்டும் வகையில், நல்ல முறையில் மலரைத் தயாரித்த ஆசிரியர் ,'விடி வெள்ளி" தமிழ்மக்களின் நன்றிக்கும் பாராட்டிற்கும் உரியவராவார்,

— சிற்பி.

உதய சூரியன் :- (திங்கள் இதழ்) ஆசிரியர் : இணுவை. சானு; தமிழ் மன்றம், இணுவில், தனிப்பிரதி, 20 சதம்.

இணுவிலிலிருந்து வெளியாகும் "உதய சூரியன்" இரண்டாம் இதழ் கிடைக்கப்பெற்ருேம், 'ஆக்கவேலைகளுக்குஅணுசக்தி' என்ற தலைப்பில்கலாநிதி எலியேஸர் நிகழ்த்திய சொற்பொழிவின் தமிழாக்கமும், பா.பாலேஸ்வரி எழுதிய "காதல் பிறவாத கதை" என்ற நல்ல கதையும் குறிப்பிடத்தக்கவை. பத்திரிகையின் வளர்ச்சியில் ஊக்கமெடுக்கும் இளைஞர்களைப் பாராட்டுவதுடன், "உதய சூரியன்" நீடு வாழ்ந்து தமிழ்ப்பணி புரியவும் வாழ்த்துகின்ருேம்.


......





உயர்தர வாசனை
சென்ட்
எவர் சில்வர்
பாத்திரங்கள்
விளையாட்டுச்
சாமான்கள்
சப்பாத்து
வகைகள்
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

தொடர் காவியம்:




## 1

ஆல மரங்கள் அருகே வளர்ந்திருக்கும்
சாலையினை விட்டுத் திரும்பினேன், சத்தமிடும்
ஓலைப் பனங்காட்டின் ஒற்றையடிப் பாதையிலே;
நள்ளிரவு நேரம்; "நருக்" கென்று தைத்துவிடும்
முள்ளிருந்து காலில்; முறிந்த பழந்தூண்கள்
உள்ள இடம் உளதே ஊருக்குத் தூரத்தில்,
அங்கேதான் சென்றேன். அரசிருந்த மாளிகையில்
புங்கும் புளியும் புதரும் வளர்கையிலே
சிங்கா சனமா கிடைக்கும், சிறிதிருந்து
சிந்திக்கச் சென்ற எனக்கு? சிரங்கீழாய்
முந்தி அங்கே வந்து தொங்கி மோனத் தவம்புரிந்த
அந்தப் பறவை எழுந் தப்பாற் பறந்திடவும்,
உட்கார்ந்து கொண்டேன் ஒருகல்லின் மீதினிலே;
நட்போ டிருள்சூழ்ந்து நாற்புறமும் காத்திட, வாய்
விட்டோர் புதுப்பா விளம்பத் துணிந்தேன் நான்.

ஓசையிலும் இன்பம் உளதன்றோ? நம்மவர்கள்
பேசத் தெரிந்தும் பெருங்குரலைக் கையாளக்
கூசுகிறார், ஏனோ? குசுகுசுப்போ நாகரிகம்!
தோட்டத்தி னின்றும் தொலைவில் இருக்கின்ற
வீட்டுக்குக் கேட்(டு) ஆள் விரைவதற்காய் மற்றவன் கூவி
காட்டும் குரலில் கவர்ச்சி மிக உண்டே;
ஆனாலும் அந்த அருங்குரலின் பேரொலியைத்
தானே இடுதல் தனித்தபெரும் இன்பமன்றோ?
ஈனம் இதில் எங்கே? இறக்குமதி செய்துள்ள
பெட்டிகளின் பக்கம் பிரியா திருந்தவைகள்
கொட்டும் ஒலிகாதில் பட்டுவந்தால் போதுவதோ?
மெட்டுகளின் மேம்பாடும் தாம்பாடார் யார் காண்பார்?
இவ்வளவு சொற்கள் எதற்கு புறம், போன
வௌவால் மறுபடியும் வந்தது; நான் பாடியது
செவ்வியதே போலும்! செருக்கோடு நான் தொடர்ந்தேன்.


❁

அப்போது வந்தாள் அருகிலே அவ்வனிதை;
கம்பொன்றிற் சாய்ந்து கவனத்தை என்பாட்டில்
ஒப்படைத்து நின்றாள்; ஒருகணம் நான் மூச்சிழந்து
கீறலே பட்ட கிராமப்போன் தட்டைப்போல்
கூறியதே கூறிக் குலைவுற்றேன். வந்த அவள்
வேறு மொழியாளே போலும், இதழ் வெடித்துப்
புன்னகைத்தென் நெஞ்சகத்தைப் புண்படுத்திப் போடாமல்
இன்னும் தன் எண்ணம் இழந்திருந்தாள் பாட்டினிலே!
கன்னங் கரியதவள் கட்டழகு; கற் செதுக்சிச்
செய்தது போல் தோற்றம்; செயலழிக்கும் நீண்டவிழி
கொய்தென் திறனைக் கொடுசெல்லும் செய்யுள் நடை—
கையின் அசைவோ கருத்தின் சிதைவுக்குக்
காரணமாம்; அந்தக் கவிதை சிரித்தாளேல்,
ஊர் சுருண்டேன் வீழா தவள்காலில்? உண்மையிலே
தேர் இரண்டு போலத் திரண்டிருந்த கொங்கைகள்
எல்லாம் எழுத்தில் எடுத்துரைக்கக் கூடுவதோ?

வல்லான் ஒருவன் வடித்த வடிவவளோ
நில்லா எழிலே நிலைநிறுத்தி நின்றயர்ந்தேன்.
பேச்சின்றி அவ்வழகுப் பேதைக் கருந்தெய்வம்
ஆச்சரிய நோக்கோ டயல் நிற்க, ஆசை தொட்டுக்
கூச்சலா யிற்றுக் குறையினிலே என்பாடல்!
சேலை அணிந்தொளியாச் சிற்றிடையைக் கையிரண்டும்
கோலி அணைத்தள்ளிக் கொண்டன! அவ் வேளையிலே
காலை கிளையில் கலகலத்துக் கேட்டிடவும்,
கல்லாய்ச் சமைந்தவன்தான் கப்போடு கப்பாகிப்
பொல்லாச் சிலையாகிப் போனுள்! உடல் முழுதும்
சில்லென் றுதறச் சரிந்தேன், சிறியேனைக்
காகங்கள் கண்டு சிரிக்கக் கதிர்கண்டு
மேகங்கள் விண்டு விலக; வெயிலேற,
மோகத்தின் வேகம் முறிந்து மனையடைந்தேன்.

(தொடரும்)


சந்தையில் கிடைக்கும் மிகச்சிறந்த 'ஸ்பார்க் பிளக்' கை விட ஆயிரந்தடவை மேலானது!



**என். ஜீ. கே.**


10,000 மைல்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டது.

- O என்ஜினை உடனே ஓடவைக்கிறது
- O பெட்ரோல் செலவாவதைக் குறைக்கின்றது
- O நீண்டகால பாவிப்புக்குகந்தது.

விநியோகஸ்தர்:—

மீ ம டு ம,
197, பஞ்சிகாவத்தை வீதி,
கொழும்பு—16.

தொலைபேசி—7451,




ச. அனந்தன், சுதுமலை.

கே. உங்களுடைய பதிலைப் படித்து விட்டு நீங்கள் சிரிப்பீர்களா? அல்லது அழுவீர்களா?

ப. சிலர் அழுவார்; சிலர் சிரிப்பார்; நான் சிரித்துக் கொண்டே படிக்கின்றேன்!

செல்வறதி சிவஞானம். சங்குவேலி

கே. அன்பு, ஆசை; இரண்டிற்கும் வித்தியாசம்?

ப. அன்பு அசல்; ஆசை நகல், அன்பினால் உலகினை ஆளலாம்; ஆசையால் உலகினில் மாளலாம்,

கே. பெண்கள் பட்டதாரியாக வருவது நல்லதா?

ப. எல்லாருக்கும் போதியளவு கல்வியறிவு இருக்க வேண்டும் என்பதால், கொள்கையளவில், பெண்கள் பட்டதாரியாக வருவதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் நடைமுறை உண்மை வேறாக அல்லவா இருக்கின்றது! இலங்கைத் தமிழ்ப் பெண்களைப் பொறுத்த வரையில் பட்டதாரிக் குடும்பங்களில் நாம் சாதாரணமாக எதிர்பார்க்கும் சுமுகமான உறவு, இன்பச் சூழ்நிலை, இயற்கை வாழ்வு என்பன குறைவு என்பதுதான் என் கருத்து,

கேசன், ஆரவயல்பிட்டி, வேலணை.

கே. கற்புடைய பெண்களை எங்கே காணலாம்?

ப. அவர்கள் வாழுமிடத்தில்!

திராவிடமணி. செட்டியார்தெரு, கொழும்பு.

கே, தமிழர்கள் என்றுமே தலை நிமிர்ந்து வாழ்ந்தால்......?

ப, விரைவில் அவர்கள் சடையப்பர்களாக மாறிவிடுவார்கள். மயிரை வெட்டுவதானால், மாதத்தில் ஒரு தடவை தலை குனிந்துதான் ஆக வேண்டும்.

இரா. பாலச்சந்திரன். நவாலி மானிப்பாய்.

கே. எப்போதும் சுறு சுறுப்பாக இருப்பது எது?

ப. மனித இருதயம்!

கே. நீங்கள் இரத்த தானம் செய்வதுண்டா?

ப என்ன. இப்படிக் கேட்டு விட்டீர்கள்! நான் இதுவரை செய்த இரத்த தானத்தில் எத்தனையாயிரம் உயிர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன தெரியுமா? நம்பாவிட்டால் என் கதிரையை வந்து பாருங்கள். அந்தஉயிர்கள் ஆனந்த நடனமாடுவதைப் பார்க்கலாம்!

வி. ஆனந்தசர்மா ஏளபூமி காரைநகர்.

கே: ஆண்கள் வெற்றி பெறமுடியாத போர்முனை எது?

ப: காதல் போர்முனையில் பெண்களின் புருவ வில்லிலிருந்து பாயும் விழி அம்புகளைச் சமாளிக்கமுடியாது தோல்வியைத் தோழமைக்குகின்றனர் ஆண்கள்!

V. கிட்ணசாமி, கிரிமெட்டியா கலஹா.

கே: நடிகை பத்மினியும் டாக்டர் இராமச்சந்திரனும் இலங்கைக்கு எப்போது வருவார்கள்?

ப: பாக்கு நீரிணையைத் தாண்டி இக்கரையில் கால்வைக்கும்போது!

கே: திரை அழகி சரோஜாதேவி "கல்யாண பரிசு" படத்தில் பைசிக்கில் ஓட்டுகின்றுரே, என்னுடன் பைசிக்கில் ஓட்டவருவாரா?

## அறிவு வளர்ச்சிப் போட்டி

முக்கிய சில காரணங்களை முன்னிட்டு அறிவு வளர்ச்சிப் போட்டியை நிறுத்தியுள்ளோம் மிக விரைவில் அதிக பரிசுத் தொகைஅடங்கிய போட்டி ஒன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம். அது பற்றிய விபரங்களைக் கூடிய கெதியில் வெளியிடுகின்றோம்.

(ஆ-ர்)

ப: எதற்கும் ஒரு தடவை தூங்கிப் பார்த்துவிடுமேன்!

சுந்தரம், ஏழாலை மேற்கு, சுன்னுகம்.

கே: இலங்கையிலுள்ள பத்திரிகைகள் யாவும் சினிமாச் செய்தி பிரசுரிப்பதன் மர்மம் என்ன?

ப: சினிமாச் செய்திகளைப் பிரசுரிப்பதால் பத்திரிகையின் விற்பனை அதிகரிக்கின்றதென்பது பலஆசிரியர்கள் கண்ட அனுபவ உண்மை. இப்போது தான் சினிமா வாழ்வின் அம்சங்களுள் ஒன்ருக மாறிவருகின்றதே' செய்திகளைப் பிரசுரிப்பதில் தவறென்ன?

பொ. நாகராஜன், மாதகல்.

கே: குறட்டை விடாமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

ப: நித்திரை செய்யாதிருக்கவேண்டும்!

க. இரத்தினசிங்கம், கணேசபுரம், கிளிநொச்சி.

கே: ஈழத்தில் வானொலி நாடகங்கள் எழுதுவதில் சிறந்தவர்கள் யார்?

ப: சாணு, இலங்கையர்கோன், வ.அ. இராசரத்தினம், எம். எஸ். பாலு ந. பொ. இராசதுரை, எம். எம்., மக்கீன், நடமாடி, அருள் செல்வ நாயகம், கச்சாயில் இரத்தினம் முதலியோர்.

கே: தமிழ்வாணன் கண்டுபிடித்திருக்கும் "இன்சுவை" பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: அதை நான் சுவைத்துப் பார்க்கவில்லை; சுவைத்துப்பார்க்கும் எண்ணமும் எனக்கில்லை.

கே: இப்போது "தினகரன்" ஆசிரியர் யார்?

ப: நிரந்தரமாக எவரும் இன்னமும் நியமிக்கப்படவில்லை, முன்பு உதவியாசிரியராகக் கடமையாற்றிய திரு. சிவகுருநாதன் இப்போது பதில் ஆசிரியராகப் பணி புரிகின்றார்.

எஸ். எம். அபூஹனியா துறையடி சின்னக் கிண்ணியா.

கே: தாண்டவக்கோனரே! தாங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

ப: மனிதன் மனிதனாக வாழவேண்டும்; எல்லாரும் இன்புற்று இருக்க வேண்டும்—என்று சொல்லி, இந்த இலட்சியத்திற்காக உண்மையாக உழைப்பவர்களின் கட்சியைச் சேர்ந்தவன் நான்!

அருணன், பரமேஸ்வரக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

கே: சித்திரத்தில் பெயர் பெற்ற இந்திய ஓவியர் வினு, வர்ணம் ஆகியவர்களின் முகவரி என்ன?

ப: இல்ல முகவரி தெரியாதபடியால் அவர்களின் அலுவலக முகவரிகளைத் தருகிறேன். 1. ஓவியர் வினு, கல்கி காரியாலயம், 10., டாக்டர் குருசாமி முதலியார் தெரு, சென்னை. 2 ஓவியர் வர்ணம், குமுதம் காரியாலயம் 83. புரசைவாக்கம் பெரியதெரு, சென்னை.

க. தியாகராசா சங்குவேலி வடக்கு

கே: பண்டைத் தமிழர் பண்பாடுகளில் இன்னும் நிலைத்து நிற்பது யாது?

ப: காட்டிக் கொடுக்கும் பண்பு!

அ. தேவசகாயம், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

கே: அண்ணா, இன்றைய சூழ்நிலையில் தமிழ் மாணவர்களாகிய நாங்கள் படிக்க வேண்டியது அவசியந்தானா?

ப: இன்றுமட்டுமல்ல என்றுமே மாணவர்கள் எனப்படுவோர் படித்துத்தான் ஆகவேண்டும். வேறு எந்தவித நடவடிக்கைகளிலும், குறிப்பாக அரசியல் பித்தலாட்டங்களில் ஈடுபடவேகூடாது. படித்தாத்தானே நன்மை, தீமை, சரி, பிழை முதலியனவற்றைப் பகுத்தறிந்து கொள்ளலாம்.

செல்வி. A. C, சல்மா மெயின் வீதி, சின்னக்கிண்ணியா.

கே: பெண்களைத் தூற்றும் பேயர்களை என்னவென்றழைப்பது?

ப: தாங்கள்தான் 'பேயர்' என்று அழைத்துவிட்டீர்களே!

மதியமுதன், சித்தாண்டி, முறக்கொட்டான்சேனை.

கே: கணவனும் மனைவியும் எழுத்தாளர்கள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை?

ப: பத்திரிகையாசிரியர் ! எந்தவித கஷ்டமுமின்றி அப்பா, அம்மா எழுதுபவற்றைத் தன் பெயரில் வெளியிட்டுக் கொண்டிருக்கலாமல்லவா !

மு. கதிர்காமநாதன். வண்ணார் பண்ணை.

கே: உலகிலேயே மிகச் சிறந்த ஓவியர் யார்?

ப: பிக்காசோ என்கிறார்கள் பலர். ஆனால் எனக்கென்னவோ, தமிழ் நாட்டு மணியம், மாதவன், கோபலு, பாலுசகோதரர்கள், மாருதி, கொண்டையாராஜா ஆகியோரின் படங்கள்தான் பிடிக்கின்றன.

அ. செந்திவேலாயுதம், சன்னதி வீதி, தொண்டைமானாறு

கே: நேரில் பார்ப்பதற்கு சிவாஜியா! எம். ஜி. ஆரா, ஜெமினியா வடிவானவர்?

ப: சிவாஜியிடம் அழகில்லை. ஆனால் அவருடைய புன்சிரிப்பும் பேச்சும் அனைவரையும் கவர்ந்துவிடும் எலும் மிச்சமாழ மேனியுடையவர் எம். ஜி. ஆர் கட்டான உடல் அவருக்குண்டு இருந்தும் ஆணழகன் என்று ஜெமினியைத்தான் அழைக்கலாம்.

ஆறு, மாறு. மெயின் வீதி. அக்கரைப் பற்று.

கே: நான் இன்னும் கல்யாணம் செய்யவில்லை. நல்ல மனைவியைத் தேடிக் கொண்டிருக்கின்றேன், தங்கள் ஆலோசனை...?

ப: மனைவியைத் தேடுகின்ற அளவிற்குக் கீழ்த்தரமான தாகவா மாறிவிட்டது நமது நாடு? முதலில் நல்ல குணமுடைய ஒரு கன்னிப் பெண்ணை தேடும் பிறகு அவளை மனைவியாக் கலாம்.

K. ஆறுமுகசாமி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

கே: இன்ப வேதனை என்கிறார்களே, அது என்ன அண்ணை?

ப: 'இடிபட்டால்' வேதனைதான். ஆனால் இடிப்பவர் பெண்ணாயிருந்தால் அதைவிட இன்பம் வேறில்லை, என நல்லூர்த் திருவிழா, வேல்விழா, மடுத்திருவிழா, பெரஹரா முதலியவற்றிற்கு ஒழுங்காக விஜயம் செய்து வரும் என் நண்பர் கூறுகின்றார்!

செ. த. மகாலிங்கம், நல்லூர் வடக்கு. யாழ்ப்பாணம்.

கே: எந்தப் பெண்ணாயிருந்தாலும் ஓர் ஆணைக்கண்டவுடன் தன் மார்புச் சேலையை இழுத்துவிடும் காரணமென்ன?

ப: பெண்களின் இச்செயலைத் தாங்கள் நன்கு கவனித்ததிலிருந்தே தங்கள் கணகள் எங்கே அலைகின்றன என்பது தெரிகிறதே!

மு. காளித்தம்பி, கற்கோவளம் பருத்தித்துறை,

கே: நீங்கள் அறிவில் ஆதவன் என்கிறேன்; எனது நண்பன் உங்களைப் படி ஆதவன் என்கிறார் எங்கள் இருவர் பற்றியும் உங்கள அபிப்பிராயம என்ன?

ப: உங்களின் வாலைக் கொண்டு கடலாழம் பார்க்க முயல்கின்றீர்கள்.

கே: உங்கள் கையெழுத்தா, தலையெழுத்தா மேலானது?

ப: தலையெழுத்துத்தான், நிரந்தரமாகமற்றைய அங்கங்களெல்லாவற்றிலும் மேலே இருப்பது தலைதானே!

த. சோமசுந்தரம், பராதொலை.

கே: மனிதனுடைய வாழ்கைக்கு முக்கியமானது கல்வியா? பணமா? குணமா?

ப: முதலில் "உயிர்" என்ற ஒன்று வேண்டும், அதற்குப் பிறகு கல்வி பணம், குணம், — எல்லாமே தேவை தானே!

கே: காவன்னா கோவன்னா ஆவதேன்? காளைமாடு பாய்வதேன்?

ப: கொம்பு முளைத்து, கொம்பு முளைத்து!